Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 15/00
දිනමුරසු වාරමලර් ஆக.03-09, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SR… NATIONAL TAMIL WEEKLY முரசு 522



## ஆன்மீகம்



### இறைவன் திருவடியின் மகிமை

நன்கு ஆராய்ந்து பார்த்தோமானால் ஜோதிமயமான சரணகமலங்களே சிவப் பரம்பொருளாகும். எப்போதும் அதனைப் பற்றிநின்று வாழ்வோமாயின் அந்த ஜோதிச்சுடரே ஈசன் வசிக்கின்ற திவ்ய லோகமாகும். அதுவே இறைவனைப் பற்றிக்கொள்வதற்கான முறையான மார்க்கமாகும். அகப்பார்வை கொண்டு உள்ளே சத்விசாரம் செய்து தெளிவார்க்கு அந்த சிவ ஜோதிச் சுடரே தக்க சரணாலயமாகும். இறைவனின் திருவடிகளே அவருடன் ஒன்று கலப்பதற்கான மார்க்கமாகவும் அதுவே இறைதத் துவமாகவும், அது இறை அடியார்களுக்கே உற்ற சரணாலய மாகவும் இறைவன் திருவடிகளாக விளங்குகின்றன என்பது இப் பாடலின் பொருள்.

திருவடி யேசிவ மாவது தேறில்
திருவடி யேசிவ லோகஞ்சித் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திரவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே.

திருமூலர் - திருமந்திரம், (138ம் பாடல்)

### இயேசுவின் கட்டளையைக் கடைப்பிடியுங்கள்

கட்டளை என்பது ஒரு விளக்கு. அறிவுரை என்பது ஒளி. கண்டித்தலும், தண்டித்தலும் நல்வாழ்விற்கு வழி. அவை உன்னை விலைமகளிடமிருந்து, தேனொழுகப் பேசும் பரத்தையிடமிருந்து விலகியிருக்கச் செய்யும். உன் உள்ளத்தால் அவளது அழகை இச்சியாதே. (நிதிமொழி 6-23.24.25)

எவ்வளவோ வசதி படைத்த குடும்பங்களில் பெற்றோர், கணவன் மனைவியர் அமைதியின்றி கண்ணீரோடும் வேதனையோடும் வாழ்ந்து கொண்டிருப்பதையும் பத்திரிகை தொலைக்காட்சி ஊடாகவும் ஏன் நேரடியாகவும் அறிகிறோம். எத்தனையோ வசதி படைத்த இளைஞர்கள், ஏன் பல கணவன்மார்கள் கூட பணம் கொடுத்து விலைமாதர்களோடு தங்கள் காம வெறியைப் போக்குவது மட்டுமல்ல, கொலையும் செய்துவிடுகின்றனர். எத்தனையோ திருமணமான பெண்களும் இப்படி நடப்பது சர்வசாதாரணம்.

அதனால்தான் ஆண்டவர் கூறுகின்றார், "இளமைப் பருவத்தில் நீ மணந்த பெண்ணோடு மகிழ்ந்திரு. அவளே உனக்குரிய பெண்மான். எழில் மிகு புள்ளிமான். அவளது மார்பகம் எப்போதும் உனக்கு மகிழ்வூட்டுவதாக, அவளது அன்பு உன்னை எந்நாளும் ஆட்கொண்டிருப்பதாக"

மனிதரின் வழிகளில் ஒன்றும் ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை. தவறான வழியில், வாழ்ந்துகொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே! இந் நிமிடமே உங்கள் வாழ்வை மாற்றி இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். அவர் உங்களை மன்னித்து நிச்சயம் உங்களை அரவணைத்தும் கொள்வார்.

ஜோசப் அருள்சாமி.

### தர்மம் குறைக்காது பணிவு தாழ்த்தாது

தாம் சேமித்து வைத்துள்ள பொருள்களைத் தர்மம் செய்வதால் அது குறைந்து நாளடைவில் நம்மிடம் எதுவுமே இல்லாமல் போய்விடும் என்றும், பிறர் செய்யும் குற்றங்களை பணிவோடு மன்னித்துவிட்டால் தாம் தாழ்த்தப்பட்டுவிடுவோம் என்றெல்லாம் தப்பெண்ணம் கொண்டு தவறிழைத்துவிடுகிறார்கள் நம்மில் பலர். ஆனால், இவர்களது இந்தத் தப்பான எண்ணத்தால் இறைவனிடம் கிடைக்கவிருக்கும் கண்ணியத்தையும், இதர நன்மைகளையும் அடைவதற்குத் தவறிவிடுகிறார்கள்.

"தான தர்மம் செய்வது பொருளைக் குறைத்துவிடாது. ஒருவரின் குற்றத்தை மன்னித்துவிடுவதினால் தன்னைத் தாழ்த்திவிடாது. அல்லாஹ்விற்காக தாழ்ந்து செல்பவரின் அந்தஸ்தையும், கண்ணியத்தையும் அல்லாஹ் உயர்த்துவான். மூன்று விஷயங்களை அறுதியிட்டுக் கூறுவேன். அதை நீங்கள் மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். அவையாவன எவருடைய பொருளும் தர்மம் செய்வதால் குறைந்துவிடாது. அநீதிக்கு உள்ளான ஒருவர் சகிப்புத் தன்மையை கையாளுவாராயின் அவருடைய சகிப்புத் தன்மையின் காரணமாக இறை வன் அவருடைய கண்ணியத்தை அதிகரிக்கச் செய்வான், எவர் பிறரிடம் யாசிப்பதின் கதவைத் திறக்கிறாரோ அவர் மீது இறைவன் வறுமையின் கதவைத் திறந்து வைப்பான்." (நபி மொழி)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

---

## கவிதைப் போட்டி இல. 519

பரிசுக்குரிய கவிதை

### விழித்துக்கொள்

விடுதலைக்காய் மண்ணில்
வீரரைக் கொடுத்தது போதும் -
என்
இளைய தலைமுறையே! நின்று
இதையாவது பார்த்து
விழித்துக்கொள்.

காசிராசா கபேசன், ஒட்டுசுட்டான்.

### எங்கேயோ

கருவறையில் உயிர்த்த என் மைந்தன் -
இன்று
கல்லறையில் உறங்குகின்றான்
சில்லறையாய் சிதறிக் கிடக்கும் இச்சமாதியில்
என் மைந்தன் எங்கேயோ?...

த.காந்தரூபன், அக்கரைப்பற்று.

### உறக்கம்

அப்பா....
உரிமைப் போராட்டத்தின் அழிவுகளா?
இந்த உறக்கம் - அல்லது
பிறப்பால் அனைவரும்
இறப்பார் என்பதற்கு உதாரணமா?
இந்த உறக்கம்.

த.காந்தரூபன், அக்கரைப்பற்று.

### தூங்குவது யாரோ?

விடுதலையின் பெயரால்
வீரர்களை விதைத்த நிலமா? இல்லை
துரோகத்தின் சாயத்தால்
அப்பாவிகளைப் புதைத்த இடமா?

சீனிராசா எடிசன், கொழும்பு-13.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### மண்ணைப் பிடித்திடுங்கள்!

நாடு சுடுகாடாக
நடந்த சமரால்
வீடுகட்டக் காணி தேடும்
விதி வசம் வந்ததோ?
தேடுமிடம் கிடைக்கமுன்
தெருவும் சுடுகாடாய்
மாறுமுன் மரித்துங்கள்
மண்ணைப் பிடித்திடுங்கள்!

மெய்யன்நடராஜ், கொழும்பு.

### நிரந்தர சொந்தக்காரன்

வியர்வை சிந்தி கஷ்டப்பட்டு
மாடி வைத்து வீடு கட்டி
சேர்த்து வைத்த - விலை
மதிப்புள்ள சொத்துகளோ - எம்
சொந்த பந்தங்களோ எமக்கு
சொந்தம் இல்லையடா தம்பி!

இதோ இந்த ஆறடி
நிலத்தில் தோண்டப்பட்டு
அமைக்கப்பட்ட கல்லறைதான்
எமக்கு நிரந்தர சொந்தமடா
தம்பி!

இராமையா தமிழ்வாணன்,
அப்புகஸ்தனை.

### எண்ணிக்கை

அப்போது வந்த பேச்சுவார்த்தை
இத்தனைக்குக் காரணமென்றால்
இப்போது உள்ள பேச்சுவார்த்தை
எத்தனைக்குக் காரணமாகுமோ?

ஏ.திவ்யசுதன், திருக்கோவில்.

## கவிதைப் போட்டி இல.522



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 09.08.2003

கவிதைப் போட்டி இல.522
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அற்புத இடமிது!

ஏழை, பணக்காரர்
என்ற நிலை இங்கில்லை!
உயர்ந்தவர், தாழ்ந்தவர்
பாகு பாடும் இங்கில்லை!
படித்தவர், பாமரர்
பக்கச் சார்பும் இங்கில்லை!
சகலரும் சமன் என்ற
தத்துவம் உணர்த்தும்
அற்புத இடமிது!

சி.நாகேந்திரன், ஆரையம்பதி-03.

### குடிசன மதிப்பீடு

சமாதானம் குலைந்தால்....
இரண்டாயிரத்துப் பதினொன்றிலே
குடிசன மதிப்பீடு இப்படித்தான்
அமைதியான சூழலிலே
அழகாக நடைபெறும்.

புனிதசீலன் பிரதீபன், மட்டக்களப்பு.

### எச்சங்கள்

மனித எச்சங்கள்
மறைந்துவிட்ட போதிலும்
அவர்களின் ஞாபகங்கள் மட்டும்
மறையவில்லையோ! இம் மானிடருக்கு.

எஸ்.அருள்நேசம், நோர்வூட்.

### தேடல்

கண்ணுக்கெட்டிய தூரம் வரை
மண்ணுக்குள் புதைந்துபோன
உண்மைகள் முளைத்திருக்கிறது
சமாதிகளாக
இதில்....விண்ணில்
பறந்து திரிந்த சமாதானப்புறா
எங்கே விறைத்துக் கிடக்கிறதோ.

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

---

## வாசக[ர்] சாலை

### தூள் கிளப்பும் தினமுரசு!

24 பக்கங்களுடன்
வாசகர் இதயங்களை
நேசமுடன் தொட்டு நிற்கும்
பாச முரசு - வார முரசு.
தினமுரசு
வலம் வருவது,
வரவேற்வைப் பெறுவது எல்லாம்
பெருமளவு வாசகர்களின்
அமோக ஆதரவே காரணமென்றால்
அதன் வெற்றி
ஆரம்ப ஸ்தாபகருக்கே!
அவரிட்ட பணியினை
அடி தொட்டு
தொய்வில்லாமல் தொடர
சுழன்று சுழன்று செயற்படும்
இன்றைய நிர்வாகக் குழு
நிறையவே நல்ல
ஆக்கங்களை நமக்குப்
படைத்து வருகிறது!
சும்மா சொல்லக் கூடாது
தூள் கிளப்பிவரும்
சூறாவளிச் செய்திகள்
ஊழல்களை
உடைத்தெறியும்
உண்மைக் கருத்துக்கள்!
மன்னார் மாவட்டத்தில்
சொன்னார் வெட்கக்கேடு
தொண்டர் ஆசிரியர்
நிரந்தர நியமனத்தின் குளறுபடி!
தந்தது முரசு - சபாஷ்!
பிழைகளைச் சுட்டிக் காட்டுவது
பாராட்டுக்குரியது!

கவிக்குயிலன், சேனையூர் - 06.

என் அன்பிற்கினிய முரசே!
திக்கெட்டும் வீர நடைபோட்டு
விறுவிறுப்புடன் வியாபாரத்தில்
முன்னணிப் பத்திரிகை
தினமுரசுதான்.
சர்வாதிகாரத்தின் கீழ் அடக்கு
முறையில் இயங்கும் அனைத்துத்
தமிழ்ப் பத்திரிகைகளின்
பொய்களையும்
பித்தலாட்டங்களையும்
வெளிப்படுத்தி, பல
இலட்சக்கணக்கான வடகிழக்கில்
மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும்
அனைத்துத் தமிழ்
நெஞ்சங்களையும் வியாழன்
காலையில் காக்கவைக்கும்
மாவீரன் அற்புதனின் அழியாப்
புகழோடும் வியாழன் தோறும் எம்
கையில் தவள வேண்டுமென்று
அன்பு முரசை வாழ்த்துகிறேன்.

வி.தவம், யாழ்ப்பாணம்.

#### அன்பின் முரசே!

உனது அனைத்து அம்சங்களாலும் பத்திரிகைத் துறையில் ஒரு முத்திரை பதித்துவிட்டாய். எதிர் காலத்தில் சரித்திரம் படைக்கப் போகும் உன்னை, நான் முதலில் வாழ்த்திவிடுகின்றேன்.

த.காந்தரூபன், அக்கரைப்பற்று.

என் இதயத்தைக் கொள்ளை
கொண்ட அபிமான நண்பன்
தினமுரசே!
நீ சுமந்து வரும் ஆக்கங்கள்
அனைத்தும் சிறப்பானவை இனி உன்
சேவை மேன்மேலும் வளர என்
இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ஜெ.திவ்பியராஜன், கொழும்பு - 05.



#### மதிப்பிற்குரிய ஆசிரியர்

அவர்கட்கு தினமுரசின் தீவிர இரசிகன் நான். நான் தினமுரசு வாரமலரினை வாராவாரம் ருசித்து வருகிறேன். உங்கள் சேவைக்கு ஆயிரம் கோடி நன்றிகள்.

ப.கணகேஸ்வரன், பொகவந்தலாவ.

#### தினமுரசே....!

நீ சேகரிக்க வேண்டும் கோடி வாசகர்களை
மத்திய கிழக்கிலிருந்து உன்னைக் காண ஏங்கும்
முத்துகளுக்கு
நீ விரைவில் வந்து சேர வேண்டும்
முகப்பில் சூடு, சுவை, சுவாரசியம் பொறித்தது போல்
எம் இதயத்தில் நீ உன்னை குறி வைக்க வேண்டும்
நன்றி முரசே வாழ்க வாழ்க!

அப்துல் ரகுமான் ரனீஸ்மாஜி, குவைட்.

---

## உங்கள் பக்கம்

### புகையிரதப் பயணம் சாத்தியமா?

மீண்டும் மட்டக்களப்புக்கான போக்கு வரத்து! கேட்கவே காதுக்கு மட்டுமல்ல மனதுக்கும் இனிமையாக இருக்கிறது. 'இனி ஒரு தடவை புகையிரதத்தில் கொழும்புக்கு போவேனா' எனப் பல தடவை எண்ணியிருக்கிறேன்.

சரியாக ஞாபகமிருக்கிறது, 1996ம் ஆண்டு அப்பாவோடு கொழும்புக்கு போனபோது எவ்வளவு சுகமாக உணர்ந்தேன். அதன் பிறகு பஸ் போக்குவரத்து சே! எத்தனை சோதனை சாவடி. எத்தனை நெருக்கடி, வெறுத்துப் போயிற்று பிரயாணம்.

7 கோடி செலவில் கொழும்பு - மட்டக்களப்பு புகையிரத போக்கு வரத்துக்கான புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின. இரண்டு தடவை போக்குவரத்தும் நடந்தது. புனரமைப்புப் பணிகள் முழுமை பெறவில்லை என்பது வேறு விடயம். ஆரம்பமான போக்குவரத்து தொடரவில்லையே என்பதுதான் கவலைக்குரிய விடயம். பல காரணங்கள். தண்டவாளக் கட்டைகள் அகற்றப்பட்டமை தொடக்கம் வரி அறவீடுகள் என காரணங்களின் பட்டியல் மிக நீளமானது.

இவற்றைக் கடந்து போக்குவரத்து சீராக இருந்திருக்குமானால் தென்பகுதி மக்கள் மட்டக்களப்புக்கு வந்து போவதும், கிழக்குப்பகுதி மக்கள் தென்பகுதிக்கு வந்து போவதும் இரு சமூகங்களுக்கிடையில் நல்லுறவை வளர்ப்பதோடு உண்மையான நிலைமையை இரு சமூகமும் ஒற்றர்களின் துணையில்லாமல் நேரடியாகவே புரிந்துகொள்ளக் கூடிய நிலை இருந்திருக்கும்.

விடுத்தும் பொருளாதார நெருக்கடி பணம் படைத்தவர்கள் தொடக்கம் சாமானியவர்கள் வரை தன் பிடியைத் தளர்த்துவதாக இல்லை. சாதாரணமாக பஸ் பயணம் செய்வதாயின் 180 ரூபா தேவை. புகையிரதப் பயணத்துக்கு 80 ரூபாதான். செலவுகளை குறைத்துக்கொண்டு அலுவல்களை நகர்த்த யாருக்குத்தான் விருப்பமில்லை. அது போக, வியாபார நோக்கம் கொண்டவர்கள் தாங்கள் உற்பத்தி பொருட்களை இலகுவாகக் கொண்டு செல்ல முடியாமலும், கொழும்பிலிருந்து தேவையான பொருட்களை கொண்டு வர முடியாமலும் பெரும்பாடு படுகின்றனர். கசப்பான காரணங்களை நியாயப்படுத்துவதை விட்டு மக்களின் நலன் என்பதை மட்டும் கவனத்தில் கொண்டு கொழும்பு - மட்டக்களப்பு புகையிரதப் போக்குவரத்து சுமுகமாக நடைபெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

என்.தீபன், மட்டக்களப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# 'புலிகளின் சட்ட அமைப்புக்கு சமாந்தரமாக ஜனநாயகத்தையும் பன்முகத்தன்மையையும் நிலைநாட்டுவது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வின் மிகப்பெரிய சவால்' – கனேடிய அறிஞர் கருத்து

சமஷ்டி அமைப்பொன்றின் மூலம் இலங்கையின் இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து கடந்த வார இறுதியில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கின்போது இந்தியா, கனடா, இலங்கைப் புத்திஜீவிகள் விரிவான கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்த நிகழ்வில் முக்கிய உரையாற்றிய கனடா, ஒன்டோரியோ மாகாணத்தின் 21வது பிரதமரும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக கனேடிய அரசுக்கு ஆலோசனை வழங்குபவருமான பொப்ராய் இலங்கையின் இறுதித் தீர்வொன்றின்போது ஜனநாயகத்தையும் பன்முகத்தன்மையையும் நிலைநாட்டுவதில் உள்ள சவால்கள் குறித்து விளக்கினார்.

சுய நிர்ணய உரிமை, பிராந்திய தன்னாட்சி என்பவற்றின் சர்வதேச அநுபவங்களை மேற்கோள்காட்டி உரை நிகழ்த்திய பொப்ராய், இலங்கையில் இத்தகையதொரு அமைப்பு முறையை ஏற்படுத்துவதில் மாபெரும் சவால்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயகத்தையும், பன்முகத்தன்மையையும் ஏற்படுத்துவதில் இலங்கையின் உள்ளாட்சி அமைப்புக் கொண்டிருக்கும் சவால் மிகப் பெரிதாக இருக்கும் என்று அவர் கூறுகிறார்.

சம வாய்ப்புகள், பன்முகத்தன்மை மீதான அர்ப்பணிப்பு, ஜனநாயகம் என்பவற்றை புலிகளின் தற்போதைய சட்ட வரம்புகளுக்குச் சமாந்தரமாக கொண்டுசெல்வதில் உள்ள சிக்கல்களை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கருத்தரங்கில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த இந்திய முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி கிருபால், எவரும் சட்டத்தை மீறி செயற்பட முடியாது என்று கூறியதோடு பூலான் தேவி கூட குற்றத்தை ஒப்புக் கொண்டு நீதிமன்றம் மூலம் சிறைக்குச் சென்ற பின்னரே சட்டசபையில் அங்கத்துவம் பெற்றார் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

## இந்திய மீனவர்கள் உண்ணாவிரதம்

கடந்த மார்ச் மாதம் முதல் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் கடற் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து சட்ட விரோதமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த 20 மீனவர்கள் கைது செய்யப்பட்டு இவர்களுள் 16 பேர் இந்திய கரையோரக் காவல்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏனைய 4 பேரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள். இவர்களே இப்போது உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தலையிட்டு தங்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ■

## மீண்டும் புலிகளைச் சாடுகிறது யு.எஸ். இராஜாங்கத் திணைக்களம்

புலிகளின் மனித உரிமை மீறல்கள், ஆட்கடத்தல்கள், கொலைகளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அதன் புதிய அறிக்கையிலும் கண்டித்திருக்கிறது.

இத் திணைக்களத்தின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக செயற்பாடுகள் தொடர்பான பிரிவு 2003ம் ஆண்டிற்காக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் புலிகள் மீது இந்தக் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரசாங்கத்தை மாற்றி அமைக்கும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்டு, பயணம் செய்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இன,மத குழுக்களுக்கு நெருக்கடிகள் வழங்கப்படுகின்றன என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

"வடக்கு கிழக்கின் பெருமளவிலான பகுதி புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. புலிகளின் தடுப்பு முகாம்களின் நிலைவரம் மிகவும் மோசமானது என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளப் புலிகள் அனுமதிப்பதில்லை. அத்துடன் இவர்களின் பிடியில் ஏராளமான சிறைக் கைதிகள் இருக்கிறார்கள்" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

அரசியல் கைதிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கூற முடியாது எனவும், இதற்குக் காரணம் புலிகளின் மர்மமான நடைமுறையே எனவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. ■

## கண்காணிப்பாளர்களை புறக்கணிக்க புலிகள் முடிவு

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் புலிகள் இயக்கத்திற்கு சாதகமற்ற விதத்தில் வழங்கும் தீர்ப்புகள் அனைத்தையும் புறக்கணிக்கும்படி அந்த இயக்கத்தின் பிராந்திய தலைவர்கள் பணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களுடன் தொடர்சியாக சந்திப்புகளை மேற்கொண்டு வந்தாலும் அவர்களின் உத்தரவுகளை தொடர்ந்தும் புறக்கணிக்க புலிகள் இயக்கம் முடிவு செய்திருக்கிறது.

## புலிகளின் திருத்த யோசனையில் கடல்சார் அதிகாரங்கள் கோரப்படும்?

அரசாங்கம் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள இடைக்காலத் தீர்வு யோசனைக்குப் பதிலாக, புலிகளால் பிரேரிக்கப்படவிருக்கும் புதிய யோசனைகள் அரசாங்கத்தினால் நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகள் அடங்கியதாக இருக்குமா என்பது குறித்துச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னதாக அரசாங்கம் புலிகளுக்கு அனுப்பி வைத்த இடைக்கால நிர்வாக யோசனை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று கூறிய புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இந்த யோசனைகளுக்கு புலிகள் திருத்தங்களைச் சமர்ப்பிக்க தயாராகி வருவதாகக் கூறியிருந்தார். ஏற்கெனவே அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட முதல் இரண்டு யோசனைகளும் புலிகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில், தன்னால் வழங்கக் கூடிய உச்சக் கட்ட அதிகார வரம்புகளுடனேயே மூன்றாவது யோசனை தயாரிக்கப்பட்டது என அரசாங்க வட்டாரங்கள் கூறி வரும் நிலையில் தமிழ்ச்செல்வனின் கருத்து வெளியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு கடற் பகுதியை சுதந்திரமாகக் கட்டுப்படுத்தக்கூடிய பாதுகாப்பு அதிகாரம், முழு அளவில் வரி அறவிடும் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைக்குரிய கோரிக்கைகள் புலிகளால் விடுக்கப்படலாம் என்று அறியக் கிடக்கிறது. ■

## ரயில்வே இந்தியாவுக்கு

தற்போது அதிகார சபையாக மாற்றப்பட்டிருக்கும் இலங்கை ரயில்வே விரைவில் இந்திய நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

இந்த தனியார்மய திட்டத்தின் கீழ் ரயில் கட்டணங்கள் 75 சதவீதத்தினால் உயர்த்தப்படும் என்று தெரிய வருகிறது. ■

## நோர்வே இலங்கையில் பாரிய முதலீட்டுக்குத் திட்டம்

மகாவிலச்சிய என்ற இடத்தில் உள்ள 25 ஆயிரம் ஏக்கர் அரசாங்கக் காணியை நோர்வேக்கு விவசாய நடவடிக்கைகளுக்காகக் குத்தகைக்கு வழங்க அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் பின்னர் ஐரோப்பிய நாடு ஒன்றுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொள்ளும் மிகப் பெரிய காணி கொடுக்கல் வாங்கல் இதுவாகத்தான் இருக்கும்.

இந்த நிலப் பகுதியில் தனது தொண்டர் நிறுவனம் ஒன்றினூடாக உலர் வலய மரமுந்திரிகைச் செய்கைத் திட்டம் ஒன்றை நோர்வே செயற்படுத்த இருக்கிறது.

இந்தக் காணியை வழங்குவது குறித்த பூர்வாங்க அறிக்கை காணி அமைச்சினால் ஏற்கெனவே நோர்வே அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ■

## மலையகத்தில் நவீன ஆயுதங்கள் தயார் நிலையில் மறைத்து வைப்பு?

மலையகத்தில் ஆயுதங்களைச் சேகரித்து வைக்கும் இரகசிய நடவடிக்கை ஒன்றைப் புலிகள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மலையக முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவரின் உதவியுடன் மலைநாட்டில் உள்ள புலிகளின் உளவுப் பிரிவு உறுப்பினர்களின் கண்காணிப்பின் கீழ் இவ்வாறான ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக அறியக் கிடக்கிறது.

வர்த்தக நோக்கங்களுக்காக எனக் கூறி அடிக்கடி ஏ-9 வீதியினூடாக யாழ்ப்பாணம் சென்று வரும் சிலரிடம் வன்னியிலிருந்து ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு அவை மலையகத்தில் வைத்து புலிகளின் பிரதிநிதிகளால் மீளப் பெறப்படுவதாகவும் பாதுகாப்பான இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு பெற்றுக்கொள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட எறிகணை ஒன்றே கடந்த வாரம் பிந்துனுவெவ பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

பிந்துனுவெவ வீடொன்றிலிருந்து 60 மில்லி மீட்டர் எறிகணை ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது. அதனை வைத்திருந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டு கடந்த 25ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். சமீபத்தில் தான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது இதனைக் கொண்டுவந்ததாக இவர் தனது வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார். இந்த நபர் கைது செய்யப்பட்டதும் அவரை விசாரணை செய்ய வேண்டாம் என்று மலையகத்தின் முக்கிய அரசியல்வாதி ஒருவர் பாதுகாப்புத் தரப்பினருக்கு அழுத்தம் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அதிர்ஷ்ட வரி

யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் மகஜன சம்பத, சனிக்கிழமை அதிர்ஷ்டம் உள்ளிட்ட இலங்கை லொத்தர் சபை, தேசிய லொத்தர் சபையினால் வெளியிடப்படும் அதிர்ஷ்ட லாப சீட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு ரூபா வீதம் புலிகளால் வரி அறவிடப்படுகிறது. ■

## மணிராசகுளம் முகாமை அகற்றாதிருக்க புலிகள் தீர்மானம்?

மணிராசகுளம் முகாமை அந்த இடத்திலிருந்து அகற்றாது இருக்க புலிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது. தற்போது கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ள சு.ப.தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் கிழக்குப் பிராந்திய பொறுப்பாளர் கருணா நடத்திய பேச்சுக்களின் பின்னர் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

எவ்வாறெனினும் இந்த முகாமை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்ற தங்களது தீர்மானத்தில் மாற்றம் இல்லை என இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

புலிகள் இந்த முகாமை அகற்றாவிட்டால் இராணுவத்தைப் பயன்படுத்தி பலாத்காரமாக அதனை அகற்றும் மாற்றுவழியை அரசாங்கம் கையாண்டால் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை கருத்தில் கொண்டு தாம் செயற்படுவதாகக் கூறினார். ■

## மாவீரர் படிப்பகமாக மாறும் வன்னி வாசிகசாலைகள்

புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் இருக்கும் வாசிகசாலைகள் அனைத்தும் மாவீரர் படிப்பகம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளன. தமிழரது விடுதலைக்காக உயிர் துறந்த மாவீரர்கள் என்றும் மறக்கப்படாது ஒவ்வொரு தமிழனது உள்ளத்திலும் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வாசிகசாலைகள் மாவீரர் படிப்பகம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி திருவையாற்றில் இத்தகைய படிப்பகம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய கிளிநொச்சி அரசியல்துறை பொறுப்பாளர் பரமன் கூறினார். ■

## 'புலிகளைக் கௌரவிக்காத எந்த நிகழ்வும் குடாநாட்டில் நடக்கக் கூடாது'

புலிகளுக்குக் கௌரவம் கொடுக்காத எந்த நிகழ்வும் குடாநாட்டில் நடைபெறக் கூடாது என்று யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள வன்னி மாணவர் அமைப்பு வலியுறுத்தி வருகின்றது.

யாழ் குடாநாட்டில் நடைபெறும் எந்த நிகழ்வானாலும் அதில் புலிகளை அழைக்காது வேறு பிரமுகர்களை அழைத்துக் கௌரவிக்க முற்பட்டால் அந்த நிகழ்வுகள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும் என்று வன்னி மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலியுறுத்திக் கூறியிருக்கின்றனர்.

கடந்த 22ந் திகதி பல்கலைக் கழகத்தில் வைத்து அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன திருப்பி அனுப்பப்பட்டது தொடர்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்தே இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

சுமார் 700 மாணவர்கள் வரை கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் புலிகளைக் கௌரவிக்காத எந்த நிகழ்வையும் குடாநாட்டில் நடத்த விடமாட்டோம். அதற்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று வன்னி மாணவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். ■

# முரசம்

## இடைக்கால அமைப்பும் சமஷ்டி எண்ணக்கருவும்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

தற்போது பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளபோதும், அதை முன்தள்ளுமுகமாக இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களும் முயற்சிகளும் நிகழ்கின்றன.

இவை ஒரு வகையில் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ளாதிருப்பதற்கான நோக்கத்தை மட்டும் கருத்திற்கொண்ட தற்காலிகமான நிர்வாக ஏற்பாடாக மட்டுமே முயற்சிக்கப் படுகின்றன. இம் முயற்சிகூட எந்தளவு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குறியாகவே இன்னும் இருக்கிறது.

அரசாங்கம் வழங்கியதான திட்டம் குறித்து எதிர்க் கட்சிகள் மாறாட்டம் எதுவோ நிகழ்ந்திருப்பதாகச் சந்தேகம் தெரிவிக்கின்றன. அதேவேளை இவை அரசியல் யாப்புக்குள் அடங்கியவைதானா என்பது குறித்தும் சர்ச்சைகள் எழலாம். மறுபுறம் புலிகள் இவ் வரைபில் பல குறைபாடுகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும் தாம் அதனை ஒரேயடியாக நிராகரிக்காமல் தமக்கு வேண்டப்பட்ட திருத்தங்களைத் தெரிவிக்கப் போவதாகவும் அத் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பேச்சுக்கள் தொடருமெனவும் கூறுகின்றனர். இது தற்காலிகமாக ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளதான நிம்மதியைத் தந்தாலும் கேள்விக்குறியாகவே விடயம் விடப்பட்டுள்ளது.

இதேவேளை முஸ்லிம் தரப்புகள் தமக்கான ஏற்பாடுகள் குறித்த தனியொரு வரைபை முன்வைக்கப் போவதாகத் தெரிவித்து அது குறித்து விவாதித்து வருகின்றனர். இவர்களின் அச்சங்கள் எவ்வாறு இவ்விடத்தில் கையாளப்படப் போகின்றன என்பதும் அடுத்த பிரதானமான விடயம். எவ்வாறானாலும் அரசாங்கம் தற்போதைய நிலையில் முஸ்லிம் தரப்பினரின் ஆதரவில் தங்கியுள்ளதால் அவர்களின் அபிலாஷைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டிய சூழ்நிலையிலேயே உள்ளது. தமிழ்த் தரப்பிலும் மாற்றுக் கருத்துகள் உள்ளன. ஆனாலும் அவற்றுக்குச் செவிமடுக்க வேண்டிய கட்டாய நிலையில் தற்போதைய அரசாங்கம் இல்லையென்பதால் அவை உதாசீனப்படுத்தப்படக் கூடும்.

இதேவேளை இங்கு எடுத்து நோக்கப்பட வேண்டிய பிரதான அம்சம் என்னவென்றால் இவ் இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் எந்தவொரு அரசியல் தீர்வு குறித்த இணக்கத்தின் பேரிலும் ஈட்டப்படவில்லை என்பதுதான். பேச்சுவார்த்தைகளின்போது ஒஸ்லோவில் சமஷ்டித் தீர்வு குறித்துப்பிரஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து, அதுகுறித்து ஆராய்வதற்காக உலக நாடுகள் தோறும் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இந்த சமஷ்டி குறித்த எண்ணக்கரு தீர்வு முயற்சியில் பிரதிபலிக்கவே இல்லை. அரசாங்கமும் இவ் எண்ணக் கருவுக்கு உடன்பாடாகக் கருத்துத் தெரிவித்திருந்தாலும், தனது உறுப்பினர்கள் மத்தியிலோ, பாராளுமன்றத்திலோ இது குறித்த கருத்தை வலுப்படுத்தவில்லை. இந் நிலையில் அரசியல் பார்வை அற்ற வெறும் நிர்வாக ஒழுங்குக்காகச் சிந்திக்கப்படும் இடைக்கால அமைப்பு எத்தனை தூரம் முழுமையானதாக அமையும் என்பது சந்தேகமே?

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# அதிகரிக்கும் இந்திய அக்கறை

சென்ற வார இறுதியில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் மூன்று நாட்களடங்கிய ஒரு ஆய்வரங்கு நிகழ்ந்தது. இது சர்வதேச படிப்புகளுக்கான பண்டாரநாயக்கா மையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ் விரிவாய்வின் தலைப்பு இந்திய சமஷ்டி.

இந்த ஆய்வரங்கு இன்றைய காலத்தில் நிகழ்த் தப்படுவதன் முக்கியத்துவம் எவருக்கும் புரிந் திருக்கும். இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான வடிவங்கள் குறித்து சிந்திக்கப் படும் இவ் வேளையில் இந்தியாவின் அமைப்பு முறை குறித்து விரிவாக விளங்கிக்கொள்வதென் பது பயனுள்ள ஒரு விடயமே.

இலங்கையில் சமஷ்டி பற்றிய கருத்து மிக ஆரம்பத்தில் சுமார் 1935 வாக்கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியால் முன்வைக்கப்பட்டு, பின்னர் பண்டாரநாயக்காவாலும் முன்வைக்கப்பட்டு, அதன் பின் செல்வநாயகத்தினாலும் தமிழரசுக் கட்சியின் வாயிலாக முன்வைக்கப்பட்டிருந்த விடயமாயினும், அது பின்னர் ஆக்கபூர்வமான ஆட்சி வடிவமாக உருவாக்கப்படத் தவறிவிட்டது.

இலங்கையின் இனப் பிரச்சினை உத்வேக மடைந்துவந்த பின்னான காலகட்டத்தில் இக் கருத்து பின்தள்ளப்பட அவ்விடத்தில் ஒருபுறம் ஒற்றையாட்சிக்கான முனைப்பும் மறுபுறம் பிரி வினைக்கான முனைப்புமாக ஒரு முரண்பாடு இடம் பிடித்துக்கொண்டது.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா 1995ல் முன்வைத்த தனது முதலாவது தீர்வுத் திட்ட ஆலோசனைகளில் சமஷ்டி பற்றிய அக்கறை மீண்டும் சற்றே தலைப்பட்டு, இப்போது, இதுவரை தமிழீழம் தவிர்ந்த எவ்வித மாற்றுத் தீர்வையும் முன்மொழிந்திராத புலிகள் முதன் முதலாக தற் போதைய ரணில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த் தைகளில் மேற்கொண்ட ஒஸ்லோ அறிவிப்பின் பின் சூடுபிடித்திருந்தது.

சமஷ்டி அமைப்பு முறையிலான தீர்வொன்றைத் தாம் பரிசீலிக்கத் தயாரென புலிகள் தெரிவித்திருந் தனர். பின்னர் புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையிலும் அது மீளவும் உறுதிய ளிக்கப்பட்டிருந்தது.

இவ் அடிப்படையில்தான் புலிகளின் பிரதிநிதிகள் உலக நாடுகளுக்கு விஜயம் செய்து அந் நாடு களிலுள்ள சமஷ்டி முறைகள் பற்றி அறிந்துகொள் வதற்கான பயணங்களை மேற்கொண்டு வருகின்ற னர்.

அண்மையில் யாழ். நூல்நிலையத்துக்கான புத்தகத் தொகுதியொன்றை வழங்கும் வைபவத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபன் சென், சமஷ்டி பற்றி அறிந்துகொள்வதற்கான பல நூல் கள் இந்தியாவில் கிடைக்கக் கூடியதாக இருக் கிறதென்றும் தம்மால் அத்தகைய நூல்கள் பல இந் நூல்நிலையத்துக்கு வழங்கப்படுகிறதென்றும், உலக நாடுகளெங்கும் திரிந்து சமஷ்டி பற்றித் தேடுவதைவிட உள்நாட்டிலேயே அதைப் பற்றி அறிந்துகொள்ள நிறைய வாய்ப்புக்கள் இருக்கிற தென்றும் கருத்துக் கூறியிருந்தார்.

அந்த வகையில் உள்நாட்டில் நிகழ்த்தப்பட்ட, சமஷ்டி பற்றிய பல விடயதானங்களை அறியவும் விவாதிக்கவும் வாய்ப்பாக அமைந்த ஆய்வரங்காக கடந்த வாரம் பண்டாரநாயக்கா சர்வதேசப் படிப்புகளுக்கான மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வரங்கு அமைந்திருந் தது.

இவ் ஆய்வரங்கில் இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் லோக சபா செயலாளர் நாயகம் டாக்டர். சுபாஷ் காசியாப், முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி டி.என். கிர்பால், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக றெக்டர் பேராசிரியர் பால்வீர் அரோரா, மூத்த சட்டத்தரணி வேணுகோபால் ஆகிய அறிஞர்கள் விரிவுரைகள் வழங்கினார்கள். இந்தியாவின் அரசியல் யாப்பின் தன்மை, அதன் பெறுமானங்கள், ஒன்றிணைந்த இந்தியாவுக்குள் சமஷ்டிகர அரசமைப்பின் நுட்பங்கள், இதில் இந்தியா அடைந்துள்ள வரலாற்று ரீதியான வளர்ச்சிகள், எதிர்நோக்கும் சவால்கள், பாது காப்புச் சரத்துக்கள், அவை துஷ்பிரயோகப்படுத் தப்பட்ட அநுபவங்கள், அப் படிப்பினைகளின் பின் சிபாரிசு செய்யப்படும் வழிமுறைகள், இந்திய நீதித்துறையின் தனித்துவம், இந்தியாவின் உறுதிப் பாட்டின் ஆதாரங்கள் என்ற பல்வேறு பரந்த விடயங்களை அவர்கள் எடுத்து விளக்கினார்கள்.

இதேவேளை இக் கருத்தரங்கில் முக்கியமான உரை வழங்கிய மற்றொரு பிரமுகரான, கனடா வின் முன்னாள் ஒன்டாரியோ மாகாண பிரதமரும் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக் கான கனேடிய ஆலோசகருமான பொப்ரே அவர் களாவர்.

இவர்களுடன் இலங்கைய அறிஞர்களும் பல் வேறு தொடர்பான விடயங்களை எடுத்தாராய்ந் திருந்தார்கள்.

இவ் ஆய்வரங்கிற்கு இந்தியத் தூதுவர், கனே டியத்தூதுவர் போன்றோரும் கலந்துகொண்ட தானது இவ் அரங்கில் நிகழ்த்தப்பட்ட கருத் தாடலின் காலப்பிரமாண முக்கியத்தை உணர்த்து வதாக இருந்தது.

இக் கருத்தரங்கின் வாயிலாகத் தெளிவாக்கப் பட்ட ஒரு முக்கியமான விடயம்-அதை ஆராய் வதே இவ் அரங்கின் பிரதான நோக்கமாக இருந்த ததும் கூட - இந்திய உதாரணம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குப் பொருத்த மானதா என்ற விடயம்தான்.

வெவ்வேறு மாறுபாடுகள் இருந்தாலும் பொதுப்படையாக 'ஆம்' என்ற ஒரு எண்ணமே இதன் வாயிலாக வெளிப்படுவதாக இருந்தது.

இந்திய மாதிரி குறித்த தயக்கங்கள் பெரிதும் அதை நெருங்கி ஆராயாமையாலேயே இருந்து வருகின்றன என்பதும், இந்திய மாதிரியில் உள்ளடங்கியிருந்த பல்வேறு விதமான பரி காரங்களும் எடுத்து நோக்கப்படுவது அவசிய மானதென்றும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந் தது.

அதேவேளை இந்திய சமஷ்டியென்பது ஒன் றல்ல, மாறாக பல விதப்பட்ட சமஷ்டிகளின் தொகுப்பாகுமென்பதும், அவையவை பிரச்சினை களுக்குத் தகுந்தவாறு நெகிழ்வுகளையும் இறுக்கங்களையும் கொண்டதாய் அமைந்துள்ளன வென்பதையும் காணக் கூடிதாய் இருந்தது.

இலங்கையின் சமூகப் பொருளாதார, கலா சார, அரசியல் தன்மைகளுக்கும் மக்களின் உணர்வுத் தளம், கல்வித்தரம், மனவார்ப்புகள் என்பவற்றுக்கமைய இலங்கையின் பிரத்தியேக நிலைமைக்கு உகந்த ஒரு தீர்வைத் தேடும்போது அது, தொலைவிலுள்ள மேற்கத்தைய மாதிரி களை விட அருகிலுள்ள இந்திய மாதிரிக்கு நெருக்கமானதாக அமையக் கூடியதாகவே இருக்கும் என்பதை இவ் ஆய்வரங்கில் உணரக் கூடியதாக இருந்தது.

இந்திய அநுபவத்திலிருந்து எமது பிரத்தியேக நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப எடுத்துக்கொள்ளக் கூடியவை என்ன என்பதை யிட்டுச் சிந்திப்பதற்கு இவ் அரங்கு உதவிகரமாக இருந்து உண்மை.

ஆனால், இந்தியாவுக்கு, அண்டை நாடாக இருந்தும், இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம்கூட இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரப்பிரசாதமாக இருந்தும், இப் பாரிய இந்திய அநுபவம் குறித்து இதுவரை காலமும் நாம் எதையும் உபயோக கரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதே இங்கு வியத்தமான விடயமாகும்.

எவ்வாறாயினும் தற்போதாவது இந்தியாவின் அரசமைப்புக் குறித்து புத்திஜீவிகள் மட்டத்தி லாவது அக்கறை காட்டப்படுவது உவப்பான செய்தியாக உள்ளது. ஆனாலும் இவை அரசியல் தலைமைகளிடம் எவ்வளவு தூரம் எடுத்துச் செல்லப்படும் என்பது தெரியவில்லை.

இவ் ஆய்வரங்கில் கனேடிய, ஒன்டாரியோ மாகாண முன்னாள் பிரதமர் பொப் ரே விட்டுச் சென்ற கேள்விகள் எமது தீர்வு விடயத்தில் விடை காணப்பட வேண்டியவை.

**தீர்வுகளுக்கான எல்லைகள் என்ன?**

**தீர்வில் வழங்கப்படும் அதிகாரங்கள் என்ன?**

**தீர்வுக்கு இசைவாக மத்தியில் ஏற்படுத்தத் தயாராக இருக்கும் மாற்றங்கள் என்ன?**

**தீர்வில் வழங்கப்படும் குறிப்பான பாதுகாப்பு உத்தரவாதங்கள் என்ன?**

**தீர்வுக்கான மாற்றத்தை நோக்கிய வழிமுறை என்ன?**

**முன்னர் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான பரிகாரங்கள் என்ன?**

**பன்மைத்துவம், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சிமை என்பவற்றுக்கான புலிகளின் அர்ப்பணம் என்ன?**

இவை ஒருபுறமிருக்க, இந்தியாவின் அக்கறை இலங்கை விடயத்தில் மென்மேலும் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா தன்னாலியன்ற உதவிகளை வழங்கு மென அண்மையில் தெரிவித்திருந்தது இங்கு எடுத்து நோக்கப்படக் கூடியது.

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் தடைப் பட்டுப்போயுள்ள நிலையிலும், பேச்சுவார்த்தைக் கான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே, மேற்கொண்டு இதை எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ள நிலையிலும், நோர் வேயின் சிபாரிசில் ஏற்படுத்தப்பட்ட கண்காணிப் பாளர்கள் காலக்கிரமத்தில் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் குறித்துக் கையாலாகாத நிலைக்குச் சென்றுவிட்டதாக உணரப்பட்ட நிலையிலும், சில சந்தர்ப்பங்களில் உண்மைக்கு மாறாக வலிந்த முடிவுகளைத் தெரிவிப்பதாக மிகுந்த விமர்சனத் துக்குள்ளாகியிருந்த நிலையிலும், தற்போது, புலிகளாலும் பொருட்படுத்தப்படாத நிலைக்குப் போய்விட்டதுமன்றி, புலிகளால் எதிர்ப்புக் காட் டப்படும் சம்பவங்களும் நிகழ்ந்தேறி வரும் நிலை யிலும், இந்தியாவின் அக்கறை சற்று முனைப் பான வகையில் அதிகரிக்க நேரிட்டுள்ளது.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் போக் கில் புலிகளை பேச்சுவார்த்தைக்கு எவ்வாறேனும் தருவிக்கும் உத்தியாக முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபை குறித்த விடயங்களும் இந்தியாவுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டி யுள்ளன. இதுவரை பேச்சுவார்த்தைகளில் நிகழ்ந் தேறிவந்த விடயதானங்கள் குறித்து இந்தியா வுக்கு விளக்கமளிக்கப்பட்டே வந்தது. அவ் விளக் கங்களின்போது இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட நம்பிக்கைகள் இப்போது சோதனைக்குள்ளாகும் நிலைமை தோன்றியுள்ளதா என்பதையிட்டே இந்தியா அதிக அக்கறை செலுத்துகிறது.

எனினும் இந்தியாவின் அக்கறைக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியம் இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் புலிகளுக்கோ அந்த அவசியம் இல்லை. எவ்வாறாயினும், இந்தியாவின் நட்புறவுடனேயே இனப் பிரச்சினைக் கான தீர்வைத் தேட வேண்டிய யதார்த்தமே நிலவுகிறது. ■

**மேலும் தற்போதைய அரசாங்கத்தின் போக்கில் புலிகளை பேச்சுவார்த்தைக்கு எவ்வாறேனும் தருவிக்கும் உத்தியாக முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகசபை குறித்த விடயங்களும் இந்தியாவுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டியுள்ளன. இதுவரை பேச்சுவார்த்தைகளில் நிகழ்ந்தேறிவந்த விடயதானங்கள் குறித்து இந்தியாவுக்கு விளக்கமளிக்கப்பட்டே வந்தது. அவ் விளக்கங்களின்போது இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட நம்பிக்கைகள் இப்போது சோதனைக்குள்ளாகும் நிலைமை தோன்றியுள்ளதா என்பதையிட்டே இந்தியா அதிக அக்கறை செலுத்துகிறது.**

அலசுவது-இராஜதந்திரி

# 'ஒரு கை ஓசையாக'

# அரசின் இடைக்கால நிர்வாக யோசனைகள்!

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமரசப் பேச்சுவார்த்தை மீளவும் எப்போது ஆரம்பமாகும்? என்பதே அனைவரிடத்தும் எழுந்துள்ள கேள்வியாகும்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்துவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து சுமுகமாக இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகள் ஆறாவது சுற்றுடன் ஸ்தம்பித்தன.

இந்த ஸ்தம்பித நிலையை நீக்கும் விதத்தில் புலிகளது இடைக்கால நிர்வாகக் கோரிக்கை குறித்துத் தனது யோசனைகளை அரச தரப்பு முன்வைத்துள்ளது.

ஏற்கெனவே அரசாங்கத்தினால் இரு தடவைகள் முன்வைக்கப்பட்ட யோசனைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்திருந்தனர்.

இருந்தபோதிலும் ரணில் அரசு சகிப்புத் தன்மையுடன் புதிய யோசனையைத் தயாரித்து, புலிகளிடம் விசேட நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலமாகக் கையளித்திருந்தது.

இப் புதிய யோசனைகள் இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்டதாயினும், இதனைத் தயாரிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது தரப்பும் நிறையவே அரசியல், சட்ட விடயங்களை ஆராய்ந்துள்ளதையே அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் மட்டுமில்லாது, இங்கிலாந்திற்கும் சென்று சட்ட ஆலோசனைகளைப் பெற்ற நிலையிலேயே இந்த இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகள் அரச தரப்பினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இது விடயத்தில் தற்போது எதிர்க் கட்சி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதையே காண முடிகிறது.

புலிகளிடம் கையளிக்கப்பட்ட யோசனைகளுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவிடம் கொடுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகளுக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதாக எதிர்க் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர்.

அரச தரப்புத் தெரிவித்துள்ள யோசனைகள் ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை வாயிலாகப் பிரத்தியேகமான முறையில் வெளிவந்திருந்தது.

ஆனால் அரச தரப்பின் முக்கிய பேச்சாளரான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். புலிகளிடம் யோசனைகள் கையளிக்கப்பட்டதையடுத்து பத்திரிகையாளரிடம் கருத்து வெளியிடுகையில், "அந்த யோசனைகளில் இருப்பவற்றைப் புலிகளது பதில் கிடைக்கும் வரை விமர்சிப்பதோ அல்லது ஆராய்வதோ எவ்விதத்திலும் நன்மையளிக்காது" எனத் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் அந்தரங்கமான முறையில் நோர்வே விசேட தூதுவர் வெஸ்பேர்க் மூலமாகப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் எவ்வாறு ஒரு பத்திரிகை வாயிலாக வெளிவந்திருந்ததென்பதும், அதனை அப் பத்திரிகைக்கு வழங்கியவர் யார்? என்பதுமே முக்கிய வினாக்களாக இருக்கின்றன.





பத்திரிகை மூலமாக வெளியான இடைக்கால நிர்வாகம் பற்றிய அரசின் யோசனைகளில் நீதித் துறை, பாதுகாப்புத் துறை தவிர்ந்த ஏனைய விடயங்களைப் புலிகள் கையாள்வதற்கான வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

புலிகளது இடைக்கால நிர்வாகக் கோரிக்கை குறித்து அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் தற்சமயம் புலிகளது விரிவான பரிசீலனைக்குள்ளாகியிருக்கின்றது.

தமது தரப்பின் சட்ட மற்றும் அரசியல் ஆலோசகர்கள் சகிதம் அரசின் யோசனைகளைப் பரிசீலிப்பதுடன், மேலதிகமாக தமது தரப்பின் பிரதம பேச்சாளர் கலாநிதி அன்டன் பாலசிங்கத்தின் அறிவுரைகளுக்கமைவாகவே தமது யோசனைகளைப் புலிகள் முன்வைப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிாவாகம் குறித்த கோரிக்கையைப் புலிகள் முன்வைத்தபோது, வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளையே முதன்மைப்படுத்தியிருந்தனர்.

சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே வடக்கு - கிழக்கில் ஏக காலத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டுமென்பது புலிகளது கோரிக்கையாக இருந்தது.

ஆனால், அரச தரப்பினரால் வழங்கப்பட்டுள்ள யோசனைகள் புலிகள் பூர்வாங்கமாகக் கோரியவற்றுக்கும் அப்பாற்பட்டதாக, பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இருக்கின்றது.







எனவே இடைக்கால நிர்வாகக் கோரிக்கை சம்பந்தமாக அரச தரப்பினரால் வெளியிடப்பட்டுள்ள யோசனைகள் அரசியல் வட்டாரங்களிலும் சாதாரண மக்கள் மட்டத்திலும் வாதப்பிரதிவாதங்களுக்குட் பட்டதாகவும் இருக்கின்றன.

அதே சமயம் வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புக்காகவே இடைக்கால நிர்வாகத்தைப் பிரதானமாகக் கோரிய புலிகள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் குறித்தும் தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைக்குள்ளானவர்களாகவே இருக்கின்றனர்.

அரசு தெரிவித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள், முக்கியமாகப் புலிகளை மீளவும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வைப்பதையே கருத்தில் கொண்டதாக இருக்கின்றதென்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது.

எனவே சுமுகமாக நகர்ந்து ஆறு சுற்றுப் பேச்சுக்களைப் பூர்த்தி செய்துள்ள சமரசப் பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுப்பதையே பிரதான நோக்காகக் கொண்ட இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகள், எத்தகைய கோணத்தில் புலிகளால் அணுகப்படும் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் அரசு-புலிகள் சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒரு வருட காலம் பூர்த்தியாகவுள்ளது.

இந்த ஒரு வருட காலத்தில் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இரு தரப்பினாலும் எத்தகைய விடயங்கள் பேசப்பட்டனவென்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை.

சுமுகமாகவும், நல்ல புரிந்துணர்வுடனும் பேச்சுக்கள் இடம்பெற்றன என்று மட்டுமே இரு தரப்பும் குறிப்பிட்டு வந்தன.

ஆனால் புலிகளது இடைக்கால நிர்வாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதையடுத்தே இரு தரப்பும் எவ்வளவு தூரம் புரிந்துணர்வுடன் பேச்சுக்களில் பங்குபற்றியிருந்தன என்பது புலனாகியிருந்தது.

வித்தியாசமான சூழலில் சிரித்துக் குலாவிக் கைலாகு கொடுப்பதன் மூலம் பேச்சுக்கள் சுமுகமாகச் செல்கின்றன என்ற அபிப்பிராயத்தை தமக்குத் தாமே ஏற்படுத்தி, ஏனையோரையும் அந்த அபிப்பிராயத்துக்குட்படுத்த வைக்கும் விதத்திலேயே அரச தரப்பு நடந்து கொண்டிருந்தது.

ஆனால், புலிகளது நிலைப்பாடு சம்பந்தமாகப் போதியளவு புரிந்துணர்வை அரச தரப்புக் கொண்டிராத காரணத்தினாலேயே இடைக்கால நிாவாகச் சமாச்சாரம் இரு தரப்புக்கிடையேயும் இழுபறி நிலையைத் தோற்றுவித்திருந்தது.

இடைக்கால நிர்வாகத்தை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்துவது தொடர்பாகப் புலிகளிடம் தனது யோசனைகளைத் தெரிவித்துள்ள அரசாங்கம், அந்த யோசனைகள் முன்னையவற்றைப் போல முற்றிலும் புலிகளால் நிராகரிக்கப்படலாகாது என்பதையே எதிர்பார்க்கின்றது.

புலிகள், தற்போது அவர்களிடம் வழங்கப்பட்டுள்ள யோசனைகளை முன்னர் போல நிராகரிப்பார்களேயானால் ரணில் அரசு தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் அரசியல் நெருக்கடிகளையே எதிர்நோக்கும்.

ஏற்கெனவே இடைக்கால நிர்வாகம் குறித்துத் தமது எதிர்ப்புக்களை வெளியிட ஆரம்பித்துள்ள எதிர்க் கட்சிகள், அரசின் யோசனைகள் புலிகளால் நிராகரிக்கப்பட்டால் அது குறித்துக் கடுமையாகவே தமது பிரசாரங்களை முன்னெடுக்குமென்றே எதிர்பார்க்கலாம்.


இதன் காரணமாகவே, அரசின் யோசனைகளில் தமக்குத் திருப்திப்படாதவை இருப்பின் அவற்றை விலக்கி, தமது எதிர்பார்ப்புகளை புலிகள் வெளியிட வேண்டுமென அரசு எதிர்பார்க்கின்றது.

இத்தகைய எதிர்பார்ப்பு நல்லதோர் இராஜதந்திர அணுகுமுறையாக இருப்பதுடன், பரந்துபட்ட கருத்துப் பரிமாற்றத்துக்கும் இடமளிப்பதாக இருக்கின்றது.

ஆயினும் இத்தகைய அணுகுமுறையை எதிர்க் கட்சிகள் எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமான முறையில் ஏற்றுக்கொள்ளும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே அரசு - புலிகளுக்கிடையே தற்சமயம் இடைக்கால நிர்வாக யோசனைகள் சம்பந்தமாக எதிர்பார்க்கப்படுகின்ற கருத்துப் பரிமாற்றங்கள் தவறான, குறுகிய நோக்கங் கொண்ட வியாக்கியானங்களால் கொச்சைப்படுத்தப்படாமலிருக்க வேண்டியதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது.

இந் நிலையில் புலிகளது யோசனைகள் அவர்கள் முன்வைக்கும் திருத்தங்கள் என்பவற்றை அரச தரப்பு எதிர்பார்த்த நிலையில் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக யோசனைகள் ஒரு கை ஓசையாக இருப்பதையே அவதானிக்க முடிகிறது. ■



## அதிரடி அய்யாத்துரை

**கட்சிக்காரன்** காலில விழுறதவிடவும் சண்டைக்காரன் காலில விழுறதே மேல் எண்டு சொல்லுவினம். யாரச் சொல்லுறன் எண்டு விளங்கியிருக்கும். உந்த கண்காணிப்புக் குழுக்காறரத்தான் சொல்லுறன். சண்டைக்காரங்களுக்கிடையில சமரசம் செய்ய வந்தவையளுக்கே சங்கடமாப் போயிட்டுது. "மட்டக்களப்பில கல் எறிஞ்சவை வாகனத்துக்கு.... திருமலையில ஹர்த்தால் செஞ்சவை... போதாக் குறைக்கு குரங்குபாஞ்சான் விஷயத்தில உடும்புப் பிடியா நிக்கினம்" எண்டு குழுவுக்கு பிரதித் தலைவரானவர் குமுறுகிறார். ஆப்சிக்கு போய் மாட்டிக் கொண்டமெண்டுதான் யோசிக்கினம் போல.

**எங்கட** காணி அமைச்சர் நடமாடும் சேவை செய்ய திருமலைக்கு வருவதாக அறிவிச்ச உடனயே பொடியள் உசாராகிவிட்டினம். உடன் ஹர்த்தால்! யாழ்ப்பாணத்தில அமைச்சர் ஜெயலத்துக்கு எதிர்ப்பு காட்டினதுக்கும் இதுக்கும் ஒரே தொடுசல்தானாம். அமைச்சர்கள் வர வேண்டாம் எண்டதுதான் தோரணை! எதிர்ப்புக் காட்டிடவும் ஹர்த்தாலைப் பயன்படுத்தி அதே ஹர்த்தாலில கண்காணிப்பாருக்கும் சேத்துத்தான் குட்டு விழுந்திருக்கு. குரங்குபாஞ்சானுக்குப் பதிலடியா. ஹர்த்தாலை என்னதான் பொது அமைப்பு எண்ட பெயரில செய்தாலும் பிரதித் தலைவர், ரெண்டெழுத்தார்தான் நடத்தினதாய் பி.பி.சி.யில சொல்லிப் போட்டார். அது சரி கண்காணிப்புக் குழுவுக்கே இதுதான் கதியா? தறுகப்படிக் கப்பட்ட வசனம்தான் ஞாபகம் வந்தது. கஷ்டப்படுறவங்க கடவுளிட்ட முறையிடுவாங்க. அந்தக் கடவுளே கலங்கி நிண்டால்.....?

**கொழும்புல** வேலை செய்யிறவையளிட்ட உதவும் படி கேட்கினமாம். ரெண்டெழுத்தார் "காசு வேண்டாம். எங்கட பெடியள் வந்தால் விடுங்கோ போதும்" எண்டு வினயமாகக் கேக்கினமாம். காசெண்டால் கைமாறினதோட போயிடும். இது எக்கணம் கைவிலங்கில வந்து முடிஞ்சிடுமோ எண்டு முழுசினமாம் கொழும்பார். வட் டு டு? வித்தவுட் டுயிங் வட் தே வோண்ட் டு டு?.

**தமிழ் அரங்கத்தில** துதி பாடுறவை சிங்கள அரங்கத்தில என்ன சொல்லினமெண்டு யாரேனும் கவனிச்சனீங்களோ? கிட்டடியில நடந்த ஐ.ரி.என். நிகழ்ச்சியில திலான், மகிந்த ஆக்களோட எங்கட ரவியான ராயர் கதைச்சதுதான் எனக்கு வியப்பாக் கிடந்தது. தங்கட தலைவர்மார் அமிரண்ண, யோகேசண்ணையாரைப் பரலோகம் அனுப்பினது ரெண்டெழுத்தார்தானெண்டு கூசாமல் சொல்லிப்போட்டார். மாட்டுப் பட்டால் என்ன செய்யப் போறாரெண்டு பயப்பிடா தேங்கோ. லோயர்மார்தானே? ஏதும் லொஜிக்காப் பேசித் தப்பிவிடுவினம். மற்றொரு சங்கதி. ஏ9 வீதியால நாங்கள் போய்வர வேண்டியதாலதான் ரெண்டெழுத்தாரோட அட்ஜஸ்ட் பண்ண வேண்டியிருக்கிறதா ரவியண்ணா, மாவை, யோசப், சம்பந்தன் எல்லாம் கூட்டாய்ப் போய்க் கதைக்கேக்க இந்தியத் தூதுவருக்குச் சொன்னதாகவும் கேள்வி.

**எங்கட** சுரேஷ் அண்ணர்தான் பாவம். லோயராகத் தெண்டே தெண்டெண்டு தேர்வுச் சோதனை பெயிலாம். படிப்பை விட்டிட்டுப் போராட்டத்துக்கு வந்தவை. போராட்டத்தை விட்டாச்சது, படிக்கலாமெண்டு ஆசைப்பிடினம். பலிக்குதில்லையே!.

**மின்னல்** இந்த முறை முழக்கமாகத்தான் ஒலிச்சுது. ஜூலைப் படுகொலையைப் பேச வந்தவை ஜூலையைத் தாண்டிக் கோரப் படுகொலைக்கு நுழைஞ்சதால திணறிப் போட்டினம். சிறி காந்தருக்குத்தான் சங்கடமாப் போச்சுது. தன்ர கட்சித் தலைவர் சிறி சபாரத்தினத்தின்ர கொலையை யாரோ நினைச்சால் நிப்பாட்டியிருக்கலாமாம். எப்பிடி? இந்தியாவில வைச்சே ரெண்டெழுத்தாரை மடக்கியிருக்க வேணுமெண்டு சொல்லுறாரோ? ஏதோ தெரியாத்தனமாய் வாய் தவறிக் கதைச்சிட்டார் போல. ஆனாலும் பாருங்கோ, அடிச்சவரை விட்டிட்டு அடிச்சவரைத் தடுக்கேல்லையெண்டு அடுத்த வீட்டுக்காறரை நொந்து என்ன பலன்? ■

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## சித்தர் மாந்திரீகம்

சர்வதேச ஸ்திரி புருஷ வசியம் மூலம் மனம் கவர்ந்த வாழ்க்கை அமைந்திடவும், திருமணத் தடை, புத்திர பாக்கியமின்மை, கணவர் மனைவி விவகாரம் ஜோதிடம் கைரேகை மூலம் நிவர்த்தி பெற்றிடலாம்.

**சித்தர் மாந்திரீகம்**

328/A, Aluthmawatha Road, Colombo-15
Tel :- 0722-601108



விளம்பரப் பகுதி

உங்கள்
வியாபாரத்தின்
விருத்திக்கு
முரசில்
விளம்பரம் செய்யுங்கள்

விளம்பரப் பகுதி


# துர்நாற்றம் வீசுகிறது

கொழும்பு நாட்டின் தலைநகரம். அழகான கட்டடத் தொகுதிகள், தலைமைக் காரியாலயங்கள் என அதி முக்கியத்துவம் வாய்ந்த இடம்தான்.

ஆனாலும் நகரத்தின் சுத்தம் பற்றி யோசிக்கும்போது அவ்வளவாகத் திருப்திகொள்ள முடியவில்லை. பல இடங்கள் மிக அசுத்தமாகக் காட்சியளித்தாலும் இன்று அதிக கவனத்தை ஈர்த்த இடமாக இருப்பது தனியார் பஸ் நிலையமேயாகும்.

குணசிங்கபுர பக்கமாக இருக்கின்ற தனியார் பஸ் நிலையத்தை விடவும், இ.போ.ச.பஸ் நிலையத்துக்கு எதிர்ப்பக்கமாக இருக்கும் கடைத் தொகுதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் பஸ் நிலையமே மிக மிக அசுத்தமாக இருக்கிறது. இந்த பஸ் நிலையத்துக்குள் நுழைய முன்னமே துர்நாற்றம் வீசுகிறது. சிறுநீர் நாற்றம் குமட்டிக் கொண்டு வாந்தி வரச் செய்துவிடும். சாதாரணமாக அந்தப் பகுதியால் நடந்து சென்றாலே மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓட வேண்டும் போல் இருக்கும். இதனைப் பற்றி கொழும்பு மாநகர சபை அறிந்திருக்காது என்று நம்ப முடியவில்லை. ஏனெனில் எமது கொழும்பு மாநகர சபையைப் பொறுத்தவரையில் சுட்டிக் காட்டப்படும் எந்தப் பிரச்சினைக்கும் முடியுமான விரைவில் தீர்வு கண்டு வருகிறது என்றே பெரும்பாலும் அறிய முடிகிறது.

இந்த விடயத்தில் தனியே அதிகாரிகளை மட்டும் குற்றம் சுமத்திவிட முடியாது. பயணிகளுக்கும் அதிக அக்கறை அவசியம். தூர இடங்களில் இருந்து வருபவர்கள், அவசரமாக மலசல கூடத் தேவைகளுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் படும் அவலம் வேதனையளிக்கிறது. குறிப்பாக பெண்கள் தவிப்புக்குள்ளாகின்ற நிலை சகிக்க முடிவதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தாலும், மக்கள் அவ் வசதிகளை ஒழுங்காகப் பயன்படுத்த வேண்டும். ஏனோதானோ என நடந்துகொள்வது நம்மையும் நாட்டையும் அசுத்தமாகவே வெளிப்படுத்தும்.

அந்த வகையில் மக்கள் அதிகமாக நடமாடும் இந்தப் பகுதிக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கும் அதே நேரம், போதுமான மலசலகூட வசதிகள் அமைப்பது உட்பட இங்கு தேவையான நடவடிக்கைகளை மக்களின் நலனில் நின்று முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். ■

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:


| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெற விரும்புவோர் **D.D. Enterprises** எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

ஈ-மெயில்: **(E-mail):- murasu@sltnet.lk**


## ஓம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீக உச்சாடனங்கள்





நான் செய்விக்கும் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகமே. இதனால் என் மூலம் நன்மை பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ? இனி என்ன உங்கள் பிரச்சினை, என்னிடம் கெடுதல் வேலைக்கு இடமில்லை. வெளிநாட்டவர்கள் மட்டுமே 24 மணித்தியாலமும் குறை நிறைகளைப் பேசித் தீர்க்க வாய்ப்புண்டு. பிரிந்தவர்கள் என் மூலமாக ஒன்று கூட, காதல் கைகூட, ஓடிப்போனவர் தேடி வர, குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்க கடன் சுமை குறைய, குபேர சாந்தி வாழ்வு பெற, மனப்போக்கு நிலை தடுமாற்றத்தை கட்டுப்படுத்த, தீராத நோய் தீர, திடீர்திருமணம் கைகூட, வெளிநாட்டில் தங்கி வாழ, குடிபோதையை நிறுத்தி சுகமான வாழ்வு பெற, தலை முடி உதிர்வதைத் தடுத்து நீண்டு வளரச் செய்ய, குபேர வாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ, அக்கு வேறு ஆணி வேறாக கைரேகை பார்த்துக்கொள்ள, காண்ட அடிப்படையில் ஜாதகம் கணித்து இதுதான் உங்கள் வாழ்வு எனத் தெரிந்துகொள்ள. என்னை காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை நேரில் சந்திக்கலாம். கடிதத்தில் பதில் பெற நேர அவகாசம் இல்லை. இன்னும் எனக்கு வந்த கடிதங்களில் சில.

(இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை)

**முறக்கொட்டாஞ்சேனை வாசகி : செய்தது பலித்துவிட்டது.**
ஐயா! எனது மகள் திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உண்டு. கணவர் 06 ஆண்டுகளாக பிரான்ஸில் உள்ளார். கணவன் ஜெனார்த்தனிடம் போக முடியாமல் ஆறு ஆண்டு காலமாக மிகுந்த மன வேதனையுடன் இருந்தபொழுது பத்திரிகையில் ஐயா அவர்களின் விளம்பரத்தைக் கண்டு அவரோடு தொடர்புகொண்டு கொழும்பு சென்று அவரின் ஆலயத்தில் பரிகார வேலைகளைச் செய்த பின் 2003ம் ஆண்டு 05ம் மாதம் 09ம் திகதி எனது மகள் தன் கணவன் இருக்கும் இடம் செல்லுவாள் என்று ஐயா கூறினார். ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன் 07ம் திகதியே பிரான்ஸ் போய்விட்டார் என்ற செய்தியை சந்தோசத்துடனும் பெருமையுடனும் அறியத் தருவதோடு ஐயா அவர்கள் ஆண்டாண்டு காலம் மக்களுக்கு நீண்ட நிலையான சேவையை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**லண்டன் அன்பரின் மடல் : கடன் தொல்லை நீங்கி கையில் பணம் சேர்ந்து, மனைவியுடன் ஒன்று சேர்ந்தது.**
வணக்கத்துக்குரிய ஐயா அவர்களுக்கு!
துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கும் எனது குடும்பத்திற்கும் வாழ்க்கையில் வெளிச்சத்தைக் காட்டியமைக்கு எனது முதற்கண் நன்றி ஐயா! எனது வாழ் நாளில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். தற்போது வெகு விரைவில் கனடாவிற்கு எனது மனைவியுடன் போகவுள்ளேன். நிம்மதியாகவும், சந்தோசமாகவும், கடன் தொல்லைகள் இல்லாமலும் கை நிறையச் சம்பாதித்து வாழ்க்கையில் சகல செல்வங்களும் (குழந்தைச் செல்வம் உட்பட) பெற்று எல்லோருக்கும் உதவி செய்து அவர்கள் சந்தோசத்தில் நான் சந்தோசத்தைக் காண எல்லாம் வல்ல துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கு வெற்றியளிக்கச் செய்து தந்த உங்களை மனித தெய்வமாகவே நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை உலகில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் சாமி....

**ஜேர்மன் அன்பரின் மடல் : மகளின் திக்குவாய் குணமாகியது.**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு பிறவியில் இருந்து திக்குவாயாக இருந்த எனது 09 வயது மகளை திக்குவாயில் இருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகின்றோம்.

**லண்டன் அன்பரின் மடல் : எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு! என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்து என்னைச் சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் : 39 வயதில் அதிசயத் திருணம்.**
பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரில் இருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்குக் கோடானு கோடி நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்; குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி,**
அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஐயா! வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத் தடை நீக்கிப் பரிகாரம் செய்து, குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்ஸில் இருந்து இக் கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**ஹற்றன் அன்பரின் மடல் : தீராத தலைவலி தீர்ந்துவிட்டது.**
மதிப்புக்குரிய ஐயாவுக்கு! நெடு நாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**இத்தாலி அன்பரின் மடல் : சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி.**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா! வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோசமாகச் சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்: போதை அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டவர்.**
அன்புக்குரிய ஐயாவுக்கு! எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு எமது குடும்பத்துக்குப் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் : ஜாதகத்தில் கூறியது பலிதம்.**
மரியாதைக்குரிய ஐயா! உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றி அறியாமல் இருந்த எனக்கு இத்தனையாம் ஆண்டு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**நீர் கொழும்பு அன்பரின் மடல்: புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்.**
மாட்சிமை பொருந்திய ஐயா! சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்தி பேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னைப் பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்குக் கண்ணீரால் நன்றி கூறுகிறேன் ஐயா.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிசய குண்டல பூஜை.**
மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விஷேசமாக நடைபெறும் அக்கினி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மைத் துன்பத்தில் இருந்து காத்து வந்ததிற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**சுவிஸ் அன்பரின் மடல்: குழந்தைப் பாக்கியம் கிடைத்தது.**
துர்க்கை சித்தர் அவர்களுக்கு! திருமணம் நடந்து நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்த எனக்கு தங்களின் பரிகாரத்தின் பின் குழந்தை கிடைக்கும் திகதியைக் கூறினீர்கள் ஐயா! நீங்கள் குறிப்பிட்டபடியே எனக்குத் தங்களின் ஞான சக்தியின் மூலம் குழந்தை கிடைத்தது. நானும் எனது குடும்பமும் மகிழ்ச்சியாய் உள்ளோம். எனது நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஸ்ரீ துர்க்கை அம்மனின் சக்தியால் பேசும் மழலை.**
மனித தெய்வமே! உங்கள் தெய்வ சக்தியால் பேசாத எம் 03 வயது மழலையைப் பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நன்மைகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: கணவன் – மனைவி பிணக்கு தீரல்.**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு! சின்னா பின்னமா இருந்த எமது குடும்பத்தை 7000 மைலுக்கு அப்பால் இருந்த வண்ணம், ஸ்ரீ துர்க்கை கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஔடத மூலிகையால் நீண்டு வளர்ந்த கூந்தல்.**
ஐயா அவர்களுக்கு! நீண்ட காலமாக எனது முடி உதிர்ந்து வெளியில் செல்வதற்கு வெட்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தேன். ஐயா அவர்களின் ஔடத மூலிகையால் எனது கூந்தல் வளர்ந்து, கறுப்பாய், அடர்த்தியாய் உள்ளது. ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் : திருமணத் தடை நீங்கியது.**
கருணை உள்ளம்கொண்ட சுவாமிஜீக்கு! எனது அக்காவுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் ஐயா அவர்களிடம் வந்து சாந்திப் பரிகாரம் செய்த பின் அக்காவுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்து சந்தோசமாக உள்ளார். ஐயா அவர்களுக்கு எமது நன்றிகள்.

**மட்டக்களப்பு அன்பரின் மடல் : பிரிந்த காதலி ஒன்று சேர்ந்தது.**
என்னை வாழ வைத்த எனது தெய்வம் ஐயா அவர்களுக்கு!
எனது வாழ்க்கை திசைமாறி என்ன செய்வது என்று தடுமாறிய வேளையில் எனது நண்பனின் மூலமாக தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன். தங்களின் மாந்திரீக பூஜையின் பலனாக என்னைப் பிரிந்து சென்ற என் காதலி என்னிடம் மீண்டும் வந்தாள். எங்களுடைய இரு வீட்டாரின் முழுச் சம்மதத்தோடு எங்கள் இருவருக்கும் நல்லபடியாகத் திருமணம் நடைபெற்றது. ஐயா அவர்கள் கூறியது போல் எனது திருமணத்தின் பின்பு எனக்கு ஒரு நல்ல அந்தஸ்தோடு சந்தோசமாக நலமாக வாழ்கிறேன். எனது இந்த வாழ்க்கை ஐயா அவர்கள் எனக்களித்த அருள் காணிக்கையே! ஐயாவுக்கு எனது பல கோடி நன்றி கலந்த வணக்கம்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிர்ஷ்ட வீடு அமையப் பெற்று நோய் நொடி இன்றி வாழ்கின்றோம்.**
எனது வாழ்வுக்கு ஒளி ஏந்திய எங்கள் குல தெய்வமாகிய ஐயா அவர்களுக்கு!
தங்களின் அருள் ஞான சக்தியால் தங்களிடம் எனது ஜாதகத்தைக் கணித்து பரிகாரங்கள், பூஜைகள் செய்த பின் எனது வீட்டை முழுமையாக கட்டி முடித்தேன். வீட்டில் உள்ளவர்கள் நோய் நொடியின்றிச் சந்தோசமாக இருக்கின்றார்கள். கையில் பணம் தங்குகிறது, பொருளாதார நிலையில் ஐயாவின் அருளால் திருப்தியாக உள்ளோம். எனது குடும்பத்தாருக்கு மதிப்பும், மரியாதையும் எமது சமூகத்தில் கிடைப்பதற்கு வழியமைத்துக் கொடுத்த ஐயா அவர்களுக்கு நாம் விசுவாசத்துடனும், நன்றிக்கடன் பட்டவர்களாகவும் இருப்போம்.

**மன்னார் அன்பரின் மடல் :**
ஐயா! உங்களிடம் தெய்வீக ஞான ஒளிச் சக்தி இருப்பதை மனதார உணர்கிறேன். நன்றி.
மன்னார் கனகசபை.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி**
**பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.AN) J.P.**

**PROF. DR. P.K. SAMY (J.D.G.AN) J.P.**
**SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM, 162. KOTAHENA STREET. COLOMBO-13.**
T.P. : 342464, 342463, 431137. FAX: 0094-1-344831. E.MAIL: *drpksamy@sttnet.lk.*

HOT LINE:
**01- 344832,**
**01- 470615**



## உக்கு என்ன பலன்





**வாழ்வில் நீங்கள் வெற்றி பெற என்ன வழி?**

**கை ரேகை ஜோதிட நிபுணர், மனோவியல் தத்துவ ஆலோசகர் கே.கங்காதரன் அவர்கள்.**

1. வாழ்க்கையின் மர்மத்தை அறிந்து தெரிந்து அதன்படி செயற்பட வேண்டுமா? வாழ்வு சிறக்க எக் காலம் உகந்தது என்று தெரிந்துகொள்ள வேண்டுமா? பெயரின் சப்தங்களால் ஏற்படும் விபரீத விளைவுகள், திருமணப் பொருத்தத்தின் உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமா? நோய்களைத் தடுக்கும் முறையும் வரும் நோய்களை அறியும் என்னவென்று தெரிந்துகொள்ளவும், மனம் நிம்மதி பெறும் வழிகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டுமா?

2. உடல் மச்சங்களால் ஏற்படும் நன்மை தீமைகள் என்னவென்று தெரிந்துகொள்ள உங்களின் ஜனனப்படி வண்டி வாகன யோகமுண்டா என்று அறிந்துகொள்ள, தீய எண்ணங்களில் இருந்து விடுபடுவது எவ்வாறு என்று தெரிந்துகொள்ள, சுய முயற்சியால் வெற்றி பெறும் வழியைத் தெரிந்துகொள்ள, நவரத்தினங்களின் அற்புத சக்திகளும் அதனால் ஏற்படும் குபேர வாழ்வும், வாஸ்து சாஸ்திர முறையின் நன்மைகளும், அதனால் ஏற்படும் குபேர வாழ்வு பெறும் வழிகளைத் தெரிந்து முறைகளை அறிய, இப்படி வழி முறைகளுக்கான தீர்வை உங்களின் கை ரேகையை வைத்தே அக்கு வேறு ஆணி வேறாக அறிந்து தெரிந்து செயற்பட என்னைச் சந்தியுங்கள். என்னிடம் கால அவகாசம் பெற்ற பின்பே உங்களின் கை ரேகையை ஆராய்ச்சி செய்து விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

3. எனது யாகசித்தியின் மூலம் கருமவினைகள், கருமநோய்கள், கடன் தொல்லைகள் இவைகளில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமும், ஐஸ்வரியமும், மழலைச் செல்வமும் பெற்று குபேர வாழ்வு பெற வேண்டுமா? வாஸ்து முறைப்படி குறைந்த செலவில் வீடு கட்டுவதற்கான வரைபடங்கள் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளலாம். இன்னும் இப்படியான அனேக பிரச்சினைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அதில் உலகின் பல நாடுகளுக்கும் சென்று பல வெற்றிகளைக் கண்டு பல ஆய்வுகளைச் செய்து அதை இலங்கை தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும், விரிவுபடுத்தி சாஸ்திரத்தின் உண்மைகளைத் தெளிவுபடுத்தி மக்களின் நெஞ்சில் இடம் பிடித்த ஜோதிட மனோவியல் ஆலோசகர். விதியை மதியால் வெல்லுவது மலையாள மாந்திரிக சக்தியே. அன்று எழுதி வைத்ததை இன்று மாற்றுவது தெய்வீக மூலிகையே. இவை எம்மிடம் மட்டுமே உண்டு.

**சாமி கங்காதரன் (அகில இலங்கை ஜே.பி.) அவர்கள்**
**K.Gangatharan - MA, PHD(MKUSD).JP(AI),**

MA.PHD.(MKUSD).jp (AI)Dip.In.3D.
Home & Auto Card.Uk, (Astrologer & Meditation Consultant)

**Managing Director**
**P.K.Saamy Associated (Pvt) Ltd,**

Raja Engineering Construction,
162, Kotahena Street, Colombo - 13. Sri Lanka.

**Mobil Phone : 0777-388860, Tel: 01-342463-4, 431137**
**Hot Line : 01-344832, 470615**

GOVT - App. No-W/A49819

## இன்னொருவர் பார்வையில்

# "மரணத்தைப் புகழ வேண்டாம்..... வாழ்க்கையைக் கொண்டாடுவோம்"

**1999.07.29 இல் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் பா.உ. நினைவாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த கேதீஸ் லோகநாதன் எழுதியுள்ள அஞ்சலிக் குறிப்பின் தமிழாக்கம் இது.**

**கேதீஸ் லோகநாதன் 1985 இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தமிழர் தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.**

ஜூலை மாதம் 29ம் திகதி கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களின் சிரார்த்த தினம். இந்த அதி உன்னதமான ஆத்மாவுடன் அரசியல் ரீதியாக, உத்தியோக ரீதியாக மற்றும் தனிப்பட்ட ரீதியாகப் பழகியவர்களுக்கு நீலன் எனத் தெரியப்பட்டார். அவரது மரணம் குரூரமானதும் மானுடத்துக்குத் துரோகமானதாகவும் இருந்தபோதும் தனது மரணத்தை போற்றிப் புகழ அவர் நிச்சயமாக விரும்பியிருக்கமாட்டார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்படுவதற்கு சரியாக இரு கிழமைகள் முன்பாக அவசரகால விவாதம் தொடர்பாக தனது இறுதியான பாராளுமன்ற உரையில் இது குறித்து அவர் குறிப்பிட்டிருந்தார். அது யுத்த களத்திலோ அல்லது எந்த வகையிலும் மரணத்தை நாம் போற்றிப் புகழ முடியாது. மறுபக்கமாக வாழ் வினைக் கொண்டாடுவோம். மிகவும் அடிப்படையான மதிப்பாகிய வாழ்வின் புனிதத்தைப் பாதுகாக்கவும், எம்மைப் பலப்படுத்தவும் நாங்கள் தீவிரமாக அர்ப்பணித்துள்ளோம். இவை இன்றி ஏன் அனைத்து உரிமைகளும் சுதந்திரங்களும் அர்த்தமற்றவைகள் ஆகிவிடுகின்றன.

எனவே நீலனின் மனைவி சித்தீக், நீலனின் சிரார்த்த தின நிகழ்வினை ஒட்டி அவருக்கு அஞ்சலி உரை ஒன்றினை எழுதுமாறு கேட்டபோது நான் உடனடியாக அதற்கு இணங்கிக் கொண்டதுடன், நீலனின் இதயத்தில் நெருக்கமாக இடம்பிடித்துக்கொண்ட விடயங்களான பன்முகத்தன்மை, அரசியல் வேறுபாடுகள் மற்றும் வாழ்வதற்கான உரிமை ஆகிய விடயங்கள் மீது, சில எண்ணங்களை எழுதலாம் என நான் தீர்மானித்துக்கொண்டேன். அவ்வாறு செயற்படுகையில் நீலன் ஒரு சர்வதேசவாதியாக இருந்திருந்த போதும், அவர் தமிழ் பேசும் மக்களின் நலன்களை மனதில் கொண்டிருந்தார் எனும் உண்மையில் நான் அக்கறையாக இருந்தேன். தமிழ்ச் சமூகம் மற்றும் அரசு அமைப்புகளுக்கிடையே தற்போது நடைபெற்றுவரும் அபிவிருத்திகளுடன் பிரிக்க முடியாதவாறு இக் கருத்துக்கள் தொடர்புபட்டிருப்பதால் இவற்றின் மீது மிகவும் சுருக்கமாக கலந்துரையாடல் நிகழ்த்த முடியாது.

பன்முகத்தன்மை பற்றிய பிரச்சினையில் தேசிய இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை மூலமான அரசியல் மற்றும் அரசியலமைப்பு இணக்கம் தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலிலும் அல்லது தலையீட்டிலும் நீலன் அவர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களிற்கான பிராந்திய சுயாட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்கு அத்தியாவசியமான முதற் தேவையாக வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளுதல் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றாக மிக உறுதியாக தொடர்ச்சியாகத் தெரிவித்திருந்தார். இடைக்கால நிர்வாகம் அல்லது மாகாண நிர்வாகத்தினை உருவாக்கும் வகையில் ஆலோசனைகள் இடம்பெறும்போதும், கிழக்கில் மக்கள் குடித்தொகையில் குறிப்பிடும்படியான வீதத்தைக் கொண்டதும் வடக்கு மாகாணத்தில் கணிசமான அளவு குடிசனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் மக்களின் தனித்துவமான நலன்களை உருவாக்குவதற்கான பேச்சுக்களில் அனைத்து முயற்சிகளையும் கட்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில் இதனைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது.

உண்மையில் இந்த முற்கூறப்பட்ட விடயம் எதிர்காலத்தில், இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான எந்தவொரு அரசியல் மற்றும் அரசியலமைப்பு இணக்கத்தைக் காண்பதற்குரிய அடித்தளமாக இன்று உள்ளது. அத்துடன் இந்த விடயம் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் மாறுதல்களைக் கருத்திற் கொள்ளாமல் நீலன் உறுதியாக ஆதரவு தெரிவித்து வந்த இந்த நிலை தற்போது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று பன்முகத்தன்மை சமன்பாட்டில் நீலனுக்கு பால் விடயம் மிக முக்கிய கூறாக இருந்தது. இதில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினை (கொழும்பு) மிகச் சிறந்த நிறுவனமாக உருவாக்குவதில் அவர் திகழ்ந்தமையும் அந் நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியவர்களுக்கிடையிலான உறவில் இறுக்கமான பால் விடய அமைப்பு கடைப்பிடிக்கப்பட்டுள்ளமையும் ஆச்சரியத்தினைத் தரும் விடயமாக உள்ளது. பெண்கள் வீட்டு அலுவல்களைக் கவனித்தல், ஜீவனோபாயத்தைத் தேடுதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல் ஆகிய விடயங்களில் மட்டும் முக்கிய பங்கு ஆற்றுவதற்கு, பிரச்சினையானது பெண்களை முன்னோக்கிச் செலுத்தியுள்ளது என்று இல்லாமல், சமூகம் சார்ந்த நடிவடிக்கைகளில் முக்கியமான முடிவுகள் மேற்கொள்வதற்கும் பெண்களை முன்னோக்கிச் செலுத்தியுள்ளது. ஆனால் எதிரிடையாக பிரச்சினைகளுக்கு பின்னரான சூழ்நிலை குறித்த வேறு அநுபவங்களின்போது, அதாவது ஒரு தடவை சமாதானம் ஆரம்பித்தவுடன் மற்றும் மீள் அமைப்புப் பணிகள் தொடங்கியவுடன் பெண்கள் தமது முன்னைய கீழ்நிலைப்பட்ட பணிகளுக்கு மாற்றப்படும் போக்கு காணப்பட்டுள்ளது. இது பெண்கள் அமைப்புகள் மற்றும் இதில் ஆர்வம் கொண்டுள்ள குழுக்கள் இந்தச் சவால்களுக்கு எதிராக கிளர்ந்தெழுவதற்கும் ஆண்கள் அதாவது நீலன் போன்றவர்கள் தனியே ஆதரவாளர்களாக இல்லாமல், தனியே குறியீடுகளாகக் கருதுகின்ற செயற்பாட்டுக்கும் அப்பால் செல்கின்ற ஒருமைப்பாட்டினை விஸ்தரித்துக்கொள்வதற்கும் உரிய விடயமாகும்.



அரசியல் வேறுபாடுகள் குறித்த பிரச்சினையில் அரசின் ஒடுக்குமுறை மற்றும் பாரபட்சத்திற்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பு வரலாறு புலிகளுடன் ஆரம்பித்ததாகவோ அல்லது புலிகளுடன் முடிந்துவிடுவதாகவோ இல்லை என்பதை அடையாளங் கண்டுகொள்ளல் வேண்டும். மிகவும் கஷ்டமான காலங்களில் புலிகள் காட்டிய பாரிய எதிர்ப்பின் அளவிற்கு ஏனைய தமிழ்க் கட்சிகளும் காட்டியிருந்தார்கள் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கது. அரச ஒடுக்குமுறைக்கும் பாரபட்சத்திற்கும் எதிராக அவர்களும் பாரிய தியாகங்களைச் செய்திருந்தனர். இது தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற மிகவும் அநுபவமுள்ள பாராளுமன்றக் கட்சிகளையும் அதே போன்று புலிகள் அல்லாத முன்னாள் தீவிரவாத தமிழ் அரசியற் கட்சிகளையும் உள்ளடக்குகின்றது.

வாழ்வதற்கான உரிமை உட்பட மக்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளை தாங்களே பிரதிநிதித்துவப்படுவதனை மறுப்பதில் புலிகளைப் போன்று அவர்களும் ஒரு தடவை அல்லது பலவேறு சந்தர்ப்பங்களில் நிரந்தரமான தவறுகளை உருவாக்கியுள்ளனர். நீலன் சார்ந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைத்துவம் கூட, அதனுடைய மௌனத்தின் ஊடாக தவறுகளுக்கு உடந்தையாக இருந்துள்ளது. ஆனால் பிரச்சினையின் போது கட்சிகளினால் வாழ்வதற்கான உரிமை அலட்சியமாக நடத்தப்பட்ட விதம் குறித்து அவரது மனவேதனையைத் தனது பாராளுமன்ற உரையில் எதிரொலிக்கச் செய்த அவரது இரு தலையீடுகளைப் பற்றி நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மேலதிக சட்டம், சுருக்கமான விசாரணை மற்றும் எழுந்தமான நிறைவேற்றுதல் ஆகியவை குறித்து விசேட ஆணைக்குழுவின் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்புப் பிரேரணையின் போது 1998 ஜூன் 12ம் திகதி ஆற்றிய உரை முதலாவது ஆகும்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது, "அனைத்து மனித விழுமியங்களினதும் அதி உச்சமான அடிப்படையே மனித வாழ்க்கையின் புனிதம். இந்த அடித்தளத்தின் மீதே ஏனைய அனைத்து சமூக அரசியல் உரிமைகள் யாவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. 1994ம் ஆண்டிலிருந்து இந்தச் சபையில் இருந்த எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் குரூரமாகாட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். முடிவையே கொண்டிராத அரசியல் படுகொலைச் சுழற்சி மட்டும் எமது மக்களின் வாழ்வின் மீது இருண்ட நிழலை உருவாக்குகின்றது. மிக அண்மையில் சரோஜினி யோகேஸ்வரனின் அரசியல் படுகொலை எமக்கு ஒழுக்கச் சிதைவை ஏற்படுத்தியுள்ளதுடன், நாங்கள் நம்பிக்கையீன உணர்வுகளுடன் சமாளிக்கப்பட்டோம். அண்மையில் நிகழ்ந்த சண்டை ஒன்றில் ஒரு சில நாட்களில் இரு தரப்பிலும் நானூறுக்கும் அதிகமான யுத்த வீரர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என அண்மையில் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். யுத்தம் நடைபெறும் வன்னியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் காரணமாக 25 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக இந்தச் சபையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாங்கள் இனியும் நம்பிக்கையீனத்திற்கு சரணாகதி அடைய முடியாது. பதிலாக வாழ்வதற்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சாத்தியப்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமது அதிகாரத்திற்குள் இவைகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

பாராளுமன்றத்தில் நீலனால் கொண்டுவரப்பட்ட மற்றொரு தலையீடு (1998 ஜூலை 8ம் திகதி அவசரகால விவாதம்) அரசியல் வேறுபாடுகளில் அவர் கொண்டுள்ள ஆழ வேரூன்றிய மதிப்பினையும் அர்ப்பணிப்பினையும் வெளிக்கொண்டுவந்துள்ளது. பின்வருமாறு அவரது உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இதனைத் தெளிவாக்கியும் உள்ளது.

"தேசியப் பிரச்சினை தொடர்பாக எமது அடிப்படை அணுகுமுறை மற்றும் எமது கருத்தியல் ஆகியன ஈ.பி.டி.பி.யினரிடம் இருந்து வேறுபட்டிருந்த போதும், களுத்துறையில் அக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தாக்கப்பட்டமைக்கு நாங்கள் சகல வடிவிலான வன்முறைகளையும் வெறுத்து ஒதுக்குபவர்கள் என்ற வகையில் மிகப் பெரிய அளவில் துயரமடைந்துள்ளோம். போட்டிக்குரிய ஜனநாயக அரசியல் தோற்றுவிக்கப்படுவதற்காக குறைந்த பட்சம் அரசியல் சுதந்திரம் நிலவுவதற்கு மிகக் குரூரமான அரசியல் வன்முறைச் சுழற்சி வட்டம் நிறுத்தப்பட வேண்டும்."

ஆனால் நீலனது எச்சரிக்கைகள் பிரயோசனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தனது தலைமைத்துவத்திலிருந்து வந்த கட்டளையின் உள் எண்ணங்கள் புரிந்திருக்காத ஒரு தற்கொலைதாரியின் அரசியல் வன்முறை நடவடிக்கைகளினால் அவனது கொலை இலக்கிற்கு இரையாகி நீலன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார். அந்தக் குரூரமான கணத்தில் தன்னைக் கொலை செய்த கொலைஞனை மன்னித்து விடுவது நீலனின் உதாரணமாக இருந்திருக்கும். அத்துடன் யாருக்குத் தெரியும்? ஒரு வேளை நீலனினதும் கொலைஞனினதும் உயிர்கள் பறிக்கப்பட்ட அந்த நொடிக்கணத்திலாவது அக் கொலைஞன் தன்னை மன்னிக்கும்படி கேட்டிருக்கக் கூடும்.

இந்தச் சூழ்நிலை தொடரக் கூடாது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக எல்லாவற்றுக்கும் எதிராக சமாதானம் என்ற காலத்திலும் ஏகப் பிரதிநிதிகள் என்ற பெயரிலும் தொடர்ச்சியாக அதிகரித்த அரசியற் படுகொலைகள் தொடருகின்றன.

நீலன் இறந்து இரு கிழமைகளுக்குப் பின்னரான எனது அஞ்சலியில் எழுப்பியிருந்த கேள்வி இன்றும் நியாயமானதாக இருந்துவருவதால், அதனை மீண்டும் இங்கு எழுப்புகிறேன். எப்போது இவைகள் எல்லாம் முடிவடையும்?

ஒரு தனிப்பட்ட குறிப்புடன் இதனை நிறைவு செய்ய விரும்புகின்றேன். எனக்கு உள்ளது போல் நீலனுக்கு சமயமும் ஆன்மீகமும் மிகவும் தனிப்பட்டதும் அந்தரங்கமானதுமாக இருந்துள்ளது. ஆயினும் நான் விடைகொண்டிராத காரணங்களுக்காக பகவத் கீதையில் இருந்து ஒரு சுலோகத்தை இங்கு தெரிவிப்பதுடன் இந்த அஞ்சலியை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

**எவையும் அழிக்கப்பட முடியாதவை; ஆதி அந்தம் இல்லாதவை; பிறவாதவையாக மற்றும் அல்லாதவையாக அவனுக்குத் தெரிகின்றபோது எப்படி அந்த மனிதன் கொலையைச் செய்ய முடியும்? அல்லது மற்றவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருக்க முடியும்?**

*(பகவத் கீதை, அத்தியாயம் 2, சுலோகம் 21)*

**நீலனுக்கு ஒரு அஞ்சலி**
**ஆக்கம் : கேதீஸ் லோகநாதன்**

நன்றி 'தி ஐலண்ட்'

# பொன்னாசை குறைகிறதா?



"தங்கம்" பொதுவாக மனிதர்களின் ஆசை உணர்வைத் தூண்டக் கூடியதாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக தங்கத்தை அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் தமது அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டவர்களான பணக்காரர்களாக இருக்கின்றனர்.

ஏழைகளுக்கோ தங்கம் எனும் போது எவரெஸ்ட் சிகரம் நினைவுக்கு வந்துவிடுகிறது. தங்கம் அந்தஸ்த்தை வெளிப்படுத்தும் பொருளாக நிலை நாட்டப்பட்டுவிட்டது. மனிதன் நாகரிகமடைந்த காலத்திலிருந்தே மஞ்சள் உலோகத்தின் மீது மோகம் நிலையாக இருந்து வந்திருக்கிறது. தங்கத்தின் மீதான மனிதனின் அளவு கடந்த ஆசைக்குக் காரணம் அதன் பசுமை கலந்த மஞ்சள் நிறமே ஆகும். அத்துடன் உலகில் மிகக் குறைவாகக் கிடைப்பனவற்றில் தங்கமும் ஒன்று. மனிதனைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியாகவும் தங்கம் முக்கிய சேமிப்புப் பொருளாகவே உள்ளது.

பெண்கள் தங்கத்தின் மீதான தங்களது ஈடுபாட்டைப் பிறருக்குக் காட்டும் வண்ணம் தங்கத்தை உடலெல்லாம் அணிந்து அலங்கரித்து நின்று வெளிப்படுத்த விரும்புகின்றனர். ஆனால் இன்று தங்கம் அணிந்து வெளிச் செல்லும் பெண்கள் பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கத் தொடங்கிவிட்டனர். நாளொரு வழிப்பறியும் பொழுதொரு கொள்ளையுமாய்த் தொடரும் இந்த நாட்களில்; தங்கத்திற்காக பெண்கள் வீதிகளில், வீடுகளில் கொல்லப்படுகின்றனர். பெருமளவு தங்க நகை வைத்திருப்போருக்கு இக் காலத்தில் தங்க நகைகளைப் பாதுகாப்பது மிகவும் கஷ்டமான காரியமாகிவிட்டிருக்கிறது.


பெண்கள் விதம் விதமாக நகைகளைச் செய்வது அவற்றைப் பெட்டியில் பூட்டிப் பாதுகாத்து வைக்கவா என்ற கேள்வி இப்போது பரவலாகப் பெண்கள் மத்தியில் எழுந்து வருகிறது. அச்சத்திற்கு மத்தியில் வெளியில் செல்லும் போதும் விசேட நாட்களிலும் தங்கத்தை அணிந்து வெளியே சென்று வீடு திரும்பிய பின், அதனை மீண்டும் பாதுகாப்பாக வைக்கும் வரைக்கும் இவர்களுக்குப் போதும் போதும் என்றாகிவிடுகிறதாம்.

# மரணம் மனிதனுக்குத்தான், மூளைக்கல்ல!




"க்ரையோனிக்ஸ்" "பனிக்கட்டியில் உறைய வைத்துப் புதைப்பது" என்பது இதன் பொருள். இவ் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு ஆச்சரியமான தகவல்களைச் சொல்கிறது. இதன் மூலம் மனிதர்கள் பல நூற்றாண்டுகள் வாழ்வது சாத்தியமாகலாம் என்கிறது ஆராய்ச்சி உலகம். உலகத்தில் மனித உயிர்கள் பெருகி வருகின்றன. பெரும் வளப் பற்றாக் குறை நிலவுகிறது. விண்ணைத் தொடும் கட்டடங்கள், பாதாள வீடுகள் என உலகத்தை முடியுமானவரை மனிதன் விஸ்தீரணப்படுத்த முயற்சிக்கிறான். முடியுமான வரை அவனது பெருக்கம் உலகில் சாத்தியப்படும். எதிர்வரும் காலங்களில் உலகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கு இடமில்லாமல் போய்விடும். அந்தளவு சனப் பெருக்கம் ஏற்பட்டு வருகிறது. ஆகவே, பிறக்கும் உயிர்களை உயிர்ப்பிக்காமல் அப்படியே பனிக்கட்டியில் உறைய வைத்துப் பாதுகாத்து வேறு கிரகங்களில் மனிதன் வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டவுடன் இவ் உயிர்களை பனிக்கட்டியிலிருந்து வெளியே எடுத்து உயிர்ப்பிக்கலாமாம். இவைகள் எல்லாம் சுத்த பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே என யாராவது நினைத்தால் அவர்கள்தான் பைத்தியக்காரர்கள் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# யார் துடைப்பார் இத் துயரை?




தாய் பெயரை முன் எழுத்தாகப் போடும் சட்டம் பல்வேறு நாடுகளில் இப்போது அமுலுக்கு வந்துவிட்டது. இதனால் நிறையவே ஆண்களுக்கு தூக்கமும் தொலைந்து போய்விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாள் முழுக்க குடும்பத்தைப் பராமரித்து, கணவன் குழந்தைகளைக் கவனித்து, துணி துவைத்து, வீடு பெருக்கி, பாத்திரம் கழுவி சமையல் செய்து வைக்கும் பெண்களை "வீட்டில் சும்மாதான் இருக்கா" (கொஞ்சம் நாகரிகமாக "ஹவுஸ் ஒய்ப்") எனச் சொல்வதற்கு இந்த சமூகத்தின் நாக்குகள் கூசுவதில்லை.

நீண்ட காலமாய் ஆண்கள் பெண்கள் மீது கருணை காட்ட முன்வரவேயில்லை என்ற ஏக்கம் பெண்கள் உலகத்தில் அதிகரித்திருக்கிறது. இத் துக்கத்தின் வட்டத்தினுள்தான், அதன் வீட்டினுள்தான் பெண் உழன்றுகொண்டிருக்கிறாள்.


தாயின் பெயரை முதல் எழுத்தாகப் போடும் பெண்களின் குரலுக்கு, அதனைச் சட்டமாக்கியதற்குப் பலத்த எதிர்ப்புகள் கிளம்பி வருகின்றன. பத்து மாதம் சுமந்து குழந்தையைப் பெற்றெடுத்து அதற்குத் தன்னையே தாரைவார்த்து ஆளாக்கியதில் தாயின் பங்கு அதிகம் எனச் சொல்பவர்கள், அத் தாயின் பெயரை முதலெழுத்தாகப் போடுவதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்? நமது நாட்டிலும் இந்த முயற்சியை நடைமுறைப்படுத்தப் பல பெண்கள் அமைப்புகள் யோசித்து வருகின்றன.

# நீங்களும் படிக்கலாம்! மாற்றுக் குரல்கள்



தருவது - ஆச்சர்சா

# எல்லைகள் மாறிக் கொண்டே இருக்கிறன



முன்பு எப்போதோ படித்த ஒரு துணுக்கு ஞாபகத்திற்கு வருகிறது. சீனாவில் ஒரு முறை பள்ளி மாணவர்களுக்கிடையே ஒரு போட்டி நடைபெற்றது. "சீனாவின் எல்லைகளைச் சரியாக வரைந்து அடையாளப்படுத்த வேண்டும்" என்பதே அப் போட்டி. சரியாக வரைந்து போட்டியில் வெற்றி பெறுபவர் சீன அதிபரின் கையினால் பரிசினைப் பெறும் பாக்கியத்தையும் பெறுவார் என அறிவிக்கப்பட்டது. துல்லியமாக சீனாவின் எல்லைகளை வரைந்து பரிசு பெறுகிறான் ஒரு மாணவன். அடுத்த வருடமும் இப்போட்டி அறிவிக்கப்படுகிறது. ஆனால் முதல் வருடத்தில் பரிசு பெற்ற மாணவனால் மீளவும் பரிசைப் பெற முடியவில்லை. ஏனெனில் அந்த வருடத்தில் சீனாவின் எல்லை மாறிவிட்டிருந்தது. கடந்த வருடத்சில் சரியாக இருந்த விடை இந்த வருடத்தில் பிழையாகிப் போய்விட்டது.

நாடுகளின் எல்லைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஒன்று நாடுகள் ஆக்கிரமிக்கின்றன. அல்லது ஆக்கிரமிக்கப்படுகின்றன. அரியணைகள் மட்டுமல்ல, நாட்டின் எல்லைகளும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் பிரித்தானியாவை "சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்" என நாம் அழைத்தோம். இன்று பிரித்தானியாவில் சூரியன் அஸ்தமிக்கிறது. அந்தளவு அதன் ஆட்சி அதிகார எல்லை குறுகிவிட்டது. உலகத்தின் பெரும் பகுதியை ஆண்ட பிரித்தானிய மன்னர்களின் குடும்ப ஆட்சிக்கு மேல் இன்று இங்கிலாந்தில் கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியன் உடைவு, யூகஸ்லாவிய உடைவு எனப் புதிய புதிய நாடுகள் உருவாகி வருகின்றன. இப்போது நாடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதே பெரும் பிரச்சினையாகிவிட்டது. எல்லை தாண்டுவது ஒரு ஜனநாயகச் செயற்பாடாக அமெரிக்கா பிரகடனப்படுத்தி உள்ளது. ஈராக்கை ஆக்கிரமித்ததிலிருந்து. ... இன்று அமெரிக்காவின் எல்லை உலகின் பெரும் பகுதியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்கின்றனர் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கெதிராகக் குரல் எழுப்புவபர்கள்.

# என் ராசா

## போன தெங்கே...?



"அன்பு செலுத்துவதில் மனிதர்களை மிஞ்சிவிடுவோம்" என்கிறது டயானா என்ற நாய். இது டாபர் மேன் இனத்தைச் சேர்ந்தது. இத்தாலியின் "சினிடெல்லா"வில் வசிக்கும் "அல்லெக்ரிடி" குடும்பத்து வளர்ப்பு நாய் டயானா. அல்லெக்ரிடியை தனியாய் பார்க்கவே முடியாது. எப்போதும் அவருடன் நாய் இருக்கும் என்று ஊர்வாசிகள் வியந்து சொல்லுமளவுக்கு டயானாவிடம் பிரியத்துடனிருப்பவர் அவர். அவருக்குப் பிள்ளைகள் இருந்தாலும் டயானாவுடன்தான் அதிக நேரம் செலவழிப்பார்.

இந் நிலையில் திடீரென்று ஒரு நாள் அல்லெக்ரிடி மாரடைப்பால் மரணமடைந்தார். இறுதிச் சடங்கில் டயானாவும் கலந்துகொண்டது. ஊர்வாசிகளைப் போலவே கல்லறையிலிருந்தும் திரும்பிவிட்டது. ஆனால் இரவு நேரங்களில் மட்டும் அது எங்கோ போய்விடுவது தெரிந்தது. அதனால் வீட்டார் இரவில் அதைச் சங்கிலியால் கட்டினார்கள். நான்கு நாட்கள் பிரச்சினையில்லாமல் சென்றன. ஐந்தாம் நாள் அதிகாலையில் டயானாவைக் காணவில்லை. சங்கிலி அறுந்திருந்தது. அதை ஊரெல்லாம் தேடி அலைந்தும், பொலிஸில் புகார் செய்ய வேண்டியதுதான் பாக்கி.

கணவன் இறந்த ஒரு வாரம் கழித்து சமாதியைத் தரிசிக்கச் சென்ற அல்லெக்ரிடியின் மனைவி மரியா சமாதியருகே நாய் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். சமாதியில் பொறிக்கப்பட்டிருந்த எஜமானரின் படத்தை அது நக்கிக் கொண்டு சோகமாய் காணப்பட்டது. அவசர அவசரமாய் பிரார்த்தனையை முடித்து நாயுடன் காரில் வீட்டுக்குத் திரும்பும் வழியில் கல்லறைக் காவலாளி காரை நிறுத்தி டயானாவைக் குறித்து விசாரித்தான். "அது தெரு நாய் என நினைத்து அங்கிருந்து பலமுறை விரட்டியதாகவும், ஓடிச் செல்வதைப் போல் போக்குக் காட்டிவிட்டு திரும்பவும் சமாதியருகே வந்துவிடுவதாகவும் வியந்து சொன்னான்.

அன்றிரவும் சங்கிலியை அறுத்துக்கொண்டு கல்லறைக்கே ஓடிவிட்டது. திரும்பவும் வீட்டிற்கு அழைத்துச் சென்றபோதும் அது வீட்டில் தங்கவில்லை. இப்படி நாலைந்து முறை நடந்தது. இனி கட்டி வைப்பதில் பயனில்லை என்று புரிந்துகொண்ட வீட்டார் அதை அவிழ்த்து விட்டுவிட்டார்கள்.

அல்லெக்ரிடி மரணமடைந்து நான்காண்டுகள் ஆகிவிட்டன. இந்த நான்காண்டுகளும் டயானாவின் இருப்பிடம் அல்லெக்ரிடியின் சமாதிதான். சமாதி மீதுள்ள படத்தைப் பார்த்தவாறு அது சுருண்டு படுத்திருக்கிறது. அவ்வப்போது வீட்டிற்குச் சென்று மரியாவையும், பிள்ளைகளையும் பார்த்துவிட்டு வருகிறது. இரவு நேரங்களில் எங்கும் தங்குவதில்லை. சமாதி அருகே படுத்துக்கொள்வதை வழக்கமாய்க் கொண்டிருக்கிறது. தன் ராசா திரும்பும் நாளை எதிர்நோக்கி!





# ஜனனி

## தமிழக அரசியலைக் கலக்கும்

தமிழக அரசியல் எதிர்பாராத ஒரு நெருக்கடியைச் சந்தித்திருக்கிறது. உண்மையில் இது அரசியல் நெருக்கடி அல்ல. சசிகலாவின் குடும்பப் பிரச்சினை. சசிகலாவின் கணவர் நடராஜனுடன் அந்த மாதிரியான தொடர்புகளைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு பெண்ணையும் அவரது. தாயாரையும் போதைப் பொருள் வழக்கில் கைது செய்து பொலிஸில் அடைத்திருக்கிறார்கள். இப்போது இந்தச் சம்பவம் அங்கே விசுவரூபம் எடுத்திருக்கிறது.

காந்தக் கண்ணழகி, கஞ்சா அழகி, மயக்கும் தேவதை இந்த அடைமொழிகள் தற்போது தமிழ் நாட்டில் ஏன் டெல்லியிலும் கூட பரபரப்பாகப் பேசப்படும் ஜனனி என்ற அந்தக் கட்டழகிக்குத் தமிழகப் பத்திரிகைகள் வழங்கும் வர்ணிப்பு வாசகங்கள்.

மதுரை அன்பு நகரில் வசித்து வந்த ரெஜினாவின் மகளான ஜனனியின் வாழ்க்கை அவரது தந்தை பாண்டியதேவரின் திடீர் மரணத்துக்குப் பின்னர் தடம் மாறியது.

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு ஏயார் ஹொஸ்டஸ் கனவில் அலைந்தார் ஜனனி. இந்தத் துறை குறித்துப் படிக்கவும் செய்தார். ஆனால் ஜனனிக்கு இதைத் தவிரவும் வேறு துறைகளில் நிரம்பக் கெட்டித்தனம் இருந்தது. எப்படியோ இவருக்குச் சில சினிமாப் புள்ளிகளின் தொடர்பு கிடைக்க சில காலம் ஹீரோயின் கனவோடு சென்னையை வலம் வந்தார்.

ஜனனியை சினிமாவில் நடிக்க வைத்து பெரிய அளவுக்கு கொண்டு வருவதாக ஆசை வார்த்தை கூறி அவரது உடலை முழுமையான ஒத்துழைப்போடு பயன்படுத்திக்கொண்டிருக்கிறார் மதுரையைச் சேர்ந்த பிரபல நடிகர். இந்த நடிகர் தன்னுடன் புரிந்த லீலைகள் குறித்து ஜனனி தன் டயறியில் ஏகத்துக்கும் எழுதிக் குவித்திருக்கிறார். இப்போது அந்த டயறி பொலிஸாரின் கையில் சிக்கியிருக்கிறது. எப்படியிருந்தும் பல காலம் ஜனனியின் செழிப்பான உடலில் பலனடைந்த இந்தக் கறுப்பு தங்கம் பின்னர் அம்போ என்று கைவிட்டது. ஆனால் இப்போது காலம் ஜனனியின் நிலையை மாற்றியமைத்திருந்தது. அவருக்குப் பெரும் புள்ளிகளுடன் தொடர்பு. சென்னை, டெல்லி அரசியலில் கூட காரியம் சாதிக்க முடியுமான அளவு செல்வாக்கை வளர்த்துக்கொண்டார்.

இந் நிலையில் சசிகலாவின் கணவருடன் ஜனனிக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே தனது தந்தையின் நண்பரான நடராஜன் ஜனனி குடும்பத்துக்கு பயன்மிக்க வகையில் உதவி இருக்கிறார். இந்த உதவிகள் பின்னர் ஜனனி மீது அனுதாபம், நட்பு, அன்பு, காதல் அதன் பின்னர்..... என்று நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போயிருக்கிறது.

நடராஜன் ஜனனிக்கெனத் தனியான பங்களா வாங்கிக் கொடுத்து, சகல வசதிகளையும் வழங்கி ரொம்பவும் சுகமான வாழ்வளித்திருக்கிறார். சசிகலா மூலம் நடராஜனுக்கு வாரிசு இல்லாத இடைவெளியை



ஜனனி பயன்படுத்திக்கொண்டதாகக் கூறுகிறார்கள். வாரிசு ஒன்றை வழங்குவதாகக் கூறி இந்த செண்டிமெண்ட் மூலமாவே நடராஜனைத் திரு மணத்திற்கும் ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறார் ஜனனி. விஷயம் ரொம்பத் தூரம் போன பிறகு உளவுத்துறையினர் சசிகலாவின் காதில் போட்டு வைக்க போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் ஜனனியும் அவரது அம்மாவும் கைதாகியுள்ளார்கள்.

இப்போது இந்த விஷயத்தில் நாளுக்கு நாள் புதிய தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்க சசிகலா மிகவும் உடைந்து போயிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இதற்கிடையில் ஜனனியின் பங்களா ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட அவரது டயறி சொல்லும் கதை சசிகலாவை மேலும் எரிச்சலடைய வைத்திருக்கிறது. நடராஜனோடு தான் நெருக்கமாகிய விதத்தை மிகவும் நிதானமாக எழுதி வைத்திருக்கிறார் ஜனனி. இதன் சுருக்கமான சாராம்சம் சசிகலாவுக்கும் நடராஜனிற்கும் இடையிலான இடைவெளியால்தான் நடராஜன் தன்னிடம் சரணடைந்தார் என்று ஜனனியின் டயறிக் குறிப்பு சொல்கிறது.

சசிகலா நடராஜனை விவாகரத்துச் செய்வது குறித்து ஆராய்ந்து வருவதாக ஒரு புறமும் சமாதானப் படுத்தும் முயற்சிகள் நடப்பதாக இன்னொரு புறமும் பத்திரிகைகள் எழுதித் தள்ளுகின்றன. எப்படியிருந்தாலும் தமிழக அரசியலில் ஒரு மோனிக்காவாகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கிறார் ஜனனி.

தமிழக அரசியலில் சில மாற்றங்களைச் செய்ய நடராஜன் திட்டமிட்டதாகவும் இதற்கென டெல்லியிலும் தமிழகத்திலும் சில முக்கிய புள்ளிகளின் அனுசரணையைப் பெற ஜனனியைப் பயன்படுத்தியதாகவும் எல்லாம் அங்கே வதந்திகள் உலாவுகின்றன. எது உண்மை, எது பொய் என்பது ஜனனிக்கும் நடராஜனுக்கும்தான் முழுமையாகத் தெரியும்.

இந்த விஷயம் அம்பலத்துக்கு வந்ததும் ஜனனியைப் பயன்படுத்திய எவரும் வாய் திறக்கவில்லை. ஜனனியும்தான். ஜனனி பேசத் தொடங்கினால் பல முக்கிய புள்ளிகளின் முகத்திரை கிழியும் என்கிறார்கள். குறிப்பாக ஒரு கறுப்பு நடிகர், பல அரசியல் புள்ளிகள் இவரது சேவையைப் பெற்றவர்கள் எனக் கூறப்படுகிறது. ■

---




மலையக மக்கள் இலங்கையின் வரலாற்றில் தொடர்ந்தும் தொழிலாளர் வர்க்கமாகவே கருதப்படுவார்கள். ஆனாலும் துரதிர்ஷ்ட வசமாக உழைப்பினால் உயர்ந்த நிலையினை அடைய முடியாமல் வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனை வகையான உரிமைப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் மலையக மக்களைப் பொறுத்த வரை வறுமைப் போராட்டம்தான் எந்தக் காலகட்டத்திலும் தலைதூக்கி நிற்கிறது. இவர்களின் தேவையென்பது வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து ஆரம்பிக்கிறது. பிள்ளைகளுக்குப் போதிய கல்வியைக் கற்றுக்கொள்ள முடியாமை, அவர்களுக்குப் போஷாக்கான உணவு கிடைக்காமை, தொழிற் பயிற்சிகள் பற்றிச் சிந்திக்கக் கூட முடியாதளவு பின் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டில் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் சென்றாலும் குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாத ஊதியமே வருமானமாகக் கிடைக்கிறது. பெற்றோர்கள் வேலைக்குச் செல்வதால் வளர வேண்டிய பிள்ளைகள் கவனிப்பாரற்ற சூழலில் தாங்களாக வளர்வதால் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் ஏற்படும் இடைவெளி. இவ்வாறான நிலைமை தொடர்கதையாகிப்போய் விட்டால் ஆங்காங்கே தலை காட்டும் சமூகச் சீரழிவுகள், காது கூசும் படியான வார்த்தைப் பிரயோகங்கள் என ஒரு சமூகம் தொடர்ந்தும் பின் நோக்கிய பயணத்தில் செல்வது என்பது கவலைக்குரியதே.

இவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவது யார்? இந்தக் கேள்வி பல தடவை கேட்கப்பட்டும் விடை காண முடியாமலே போயிற்று. அரசியல் நோக்கம் கொண்டவர்களுக்கு இந்த மக்கள் வெறும் வாக்காளர்களாக மட்டுமே தெரிகின்றனர் என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. எந்த அரசாங்கம் மத்திய அரசில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் அவர்களோடு பங்காளர்களாகக் கை கோர்த்துக்கொண்டு, ஏதாவது ஒரு அமைச்சுப் பொறுப்பை வகித்துக் கொண்டு, குறிப்பாக தோட்ட மக்கள் சார்ந்த ஒரு அமைச்சுப் பொறுப்பையும் பெற்றுக்கொள்வதில் வலு அக்கறையாக இருக்கும் அரசியல்வாதிகள், அந்த அதிகாரங்களை முடியுமான அளவு தோட்டப்பகுதி மக்களின் சிறப்பான வாழ்க்கை குறித்துப் பயன்படுத்துவது மிகவும் அரிதாகவே இருக்கிறது. இதற்காக வேறு அமைச்சுப் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லோரும் அந்தந்தப் பிரதேச மக்களின் எல்லா நன்மைகளுக்கும் காரணமாக உழைக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது.

மொத்தத்தில் சேவையாற்றக் கூடிய அதிகாரத்தில் இருக்கும் போது சுய திருப்தி காணக்கூடிய அளவாவது மக்கள் நலன் குறித்துச் செயலாற்ற வேண்டும் என்பதே மக்களுக்குள்ள ஆதங்கம் என்பதை மக்கள் பிரதிநிதிகளாகப் பேசிக் கொள்பவர்கள் மனங்கொள்ள வேண்டும்.

ஒரு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படும் போராட்டங்களை விடவும் பெறப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு செயலாற்றுவதே சிறப்பானதாகும். எவரையும் சுட்டிக்காட்டி எரிச்சல்படுத்துவதோ, குறை கூறுவதோ நோக்கமாக இருக்கக் கூடாது.

இன்னும் அதிகப்படியான தேவை மக்களுக்குத் தேவை என்பதைத் தெளிவுபடுத்துவதே இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஓரளவு படித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவி தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பது முதல் கல்வியின் வளர்ச்சி குறித்து ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை இனங்கண்டு நிறுவுதல் என்பன பல வழிகளில் நன்மையளிக்கும்.

சிறுவர்கள் வேலையாட்களாக பிற இடங்களுக்கு அனுப்பப்படாமல் தடுக்க முடியும். இளைஞர்கள், யுவதிகள் கொழும்பை நோக்கித் தொழில் தேடி அலையாமல் தடுக்க முடியும். ஆனால் இவ்வாறு பொருளாதாரப் பிடிக்குள்ளிருக்கும் குடும்பத்தை விடுவிக்கப் புறப்படும் சிறுவர்களையோ, இளைஞர் யுவதிகளையோ வெறுமனே தடுப்பது அறிவுசார் முடிவாகாது. மாற்றீடாக இவர்களுக்கு வருவாய் தரக்கூடிய தொழில் முறைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி ஒரு சூழல் உருவாகுமானால் சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கவும், துர்நடத்தைகளிலிருந்து இளைஞர், யுவதிகளைக் காப்பாற்றவும் ஓரளவு முடியும்.

நல்ல திட்டங்களைத் திட்டமிடுவதோடு மட்டும் நின்றுவிடாது அவற்றைச் செயல் வழியாகவும் அமுல்படுத்த வேண்டும்.

மலையக மக்களுக்குப் பிரஜா உரிமை கிடைப்பதற்கான முன்னெடுப்பு, வாக்காளர்களாக தம்மை பதிவு செய்துகொள்ள கொழும்பு வாழ் தமிழர்களுக்கு வாய்ப்புக் கேட்டு தரும்படி திறம்பட செயலாற்றியமை மற்றும் குடியிருப்பு தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கும் முகமாக அரசிடம் அழுத்தம் கொடுப்பதற்கு ஆர்வமுடையமை என்பன பாராட்டுக்குரியதே. எனினும்

> **ஒரு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்யப்படும் போராட்டங்களை விடவும் பெறப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு செயலாற்றுவதே சிறப்பானதாகும்.**

சாதிக்க வேண்டிய இவ்வாறான பல விடயங்கள் இருக்கின்றன. அவையும் கவனத்தில் கொள்ளப்பட்டால் எல்லோருக்கும் சந்தோசம்தான்.

நன்மை தரக்கூடிய விடயங்களோடு ஒத்துப்போவதும், அத்திட்டங்களை ஆரம்பிக்கப் பெருமளவு பங்களிப்புச் செலுத்துவதும் இன்றியமையாத ஒன்றாகவே கருதப்படுகிறது.

வாக்குறுதிகளாக மக்களிடம் சமர்ப்பித்த, ஆக்கபூர்வமான பலன் தரக்கூடிய திட்ட, வரைபுகளை நிறைவேற்றிக் கொடுக்க மகிழ்ச்சியான ஆரம்பம் அவசியம். அது இன்றைய பொழுதாக அமையட்டும் என்று ஒவ்வொருவரும் ஆறுதலடைவோம். ■

# சதாமின் அவலக் கதி



சதாமின் புதல்வர்களான உதேய் மற்றும் குசேய் ஆகியோர் கொல்லப்பட்டுவிட்டதாகக் கூறி அமெரிக்கா இறந்த உடல்களின் புகைப்படங்கள் என்று சிலவற்றையும் வெளியிட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே அவர்களை அமெரிக்கா கொன்றது என்பதை ஈராக்கியர்கள் பெரும்பாலும் நம்பத் தயாராக இல்லை. முதல் காரணம், ஏற்கெனவே அமெரிக்க அதிகாரிகளும் ஊடகங்களும் பல முறை சதாமையும் அவரது மைந்தர்களையும் கொன்றுவிட்டதாக இப் புரளியும் நம்பத் தயாராகயில்லை மக்கள். எனவேதான் இந்த இருவரையும் கொன்றதாக அமெரிக்கா நினைத்த அவர் இன்னமும் அதைக் கிடைக்கப்பெறவில்லை என்பதே ஈராக்கியர்களின் கருத்து.

சதாமும் அவரது மைந்தர்களும் கொடுமையான ஆட்சியாளர்களாக நடந்துகொண்டிருந்தபோதிலும் இப்போது சதாமின் மகன்கள் வீரத்துடன் இறந்ததாக சதாமை எதிர்க்கும் ஈராக்கியர்கள் கூட கூறுகிறார்கள். இறுதி வரை அமெரிக்கப் படையினரை எதிர்த்துப் போரிட்டு அவர்கள் உயிர் விட்டார்கள் என்பது இந்தச் சகோதரர்கள் மீது இருந்த அவப் பெயரை ஓரளவு துடைத்துவிட்டது. சதாம் பிடிபட்டால் நிலைமை இன்னும் மோசமாகலாம் என்பதை அமெரிக்காவே சுட்டிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். சதாமின் மகன்கள் இறந்ததும் ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கெதிரான தாக்குதல்கள் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது முன்பிருந்ததை விடத் தீவிரமடைந்திருப்பது புதிய தலைவலி. இத்தனைக்கும் கொல்லப்பட்டவர்கள் உதேய் மற்றும் குசேய்தானா என்று உறுதியாகக் கூட இல்லை. சதாம் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் எப்படியும் தனது மீள எழுச்சி ஆகிய நம்பிக்கையுடன் அவர் இருப்பார் என்றுதான் ஈராக்கியர்கள் கருதுகிறார்கள். என்ன இருந்தாலும் அத்தனை பெரிய மாடமாளிகையில் வசித்து ஆட்சி புரிந்துவிட்டு, இன்று ஒவ்வொரு இடமாக மாறி மாறி உயிரைப் பாதுகாப்பதற்காக ஒளிந்து வாழ்வது என்பது சற்று அவலமானதுதான்.



# தடுப்பு

எதிர்பார்த்திருக்கவில்லை. கார் இப்படி நடு ரோட்டில் பிரச்சினை கொடுக்கும் என்று. பம்பரில்தான் பழுது போல் தெரிகிறது. எதற்கும் ஒரு தரம் கீழே கவனித்தால் திருத்தி விடலாம். கையால் எட்டிப் பிடிக்க முடியவில்லை. காருக்குக் கீழாக இன்னும் கொஞ்சம் உள்ளே நுழைவோம் என்றால் அதுவும் முடியவில்லை.



# வசீகரிக்கும் ஓவியங்கள்

இது ஒரு அழகான வர்ண ஓவியம் என்றா நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. இது உண்மையான நிழல் படம் ஒன்றே ஓவியமாக உருமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அழகான காட்சிகள், உருவங்களைப் படம் பிடித்து, அவை Digital முறையில் உருமாற்றம் செய்யப்படுகிறது. வெவ்வேறான படங்களை ஓவியமாக மாற்றியமைத்துள்ள நவீன கலை முயற்சியே இது. இக் கலைத்துறையை Digital Art என்று கூறுகிறார் இதனை வடிவமைத்த நம் நாட்டு ஓவியக் கலைஞர் பொ.ரவீந்திரன். வித்தியாசமான முயற்சிக்குப் பாராட்டுக்கள்.





ஆம்! பார்த்த உடனே புரிந்திருக்குமே..... பாராளுமன்றம்தான். வேறு எங்கே இப்படியெல்லாம் கட்டிப் புரண்டு சண்டை பிடிப்பதைக் காண முடியும். ஆனால் ஒரு வித்தியாசம். இது இலங்கை இந்திய பாராளுமன்றங்கள் அல்ல. அறிவுபூர்வமான அரசியல்வாதிகள் இருக்கும் ஜப்பான் பாராளுமன்றத்தில்தான் இப்படி ஒரு சண்டை கடந்த வாரம் நடந்தது. ஈராக் அமைதிகாக்கும் படைக்கு ஜப்பான் இராணுவத்தினரையும் அனுப்பும் திட்டத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக் கொண்டவர்கள் மோதிக்கொண்டார்கள்.

# நாய்க்குத் தூக்குத் தண்டனை

நாயைத் தூக்கிலிட்டுக் கொல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியாத அளவு சீரியஸான வழக்கு.

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் பூர்ணியா என்ற இடத்தில் வசிக்கும் 80 வயதான ஜாக்கிதேவி என்பவரின் செல்லப் பிராணியான நாய், அந்த வழியால் சென்று வரும் 50 பேரைக் கடித்துவிட்டது. பாதிக்கப்பட்ட ஒருவர் இந்த நாய்க்கு எதிராக வழக்குத் தொடர்ந்ததில் நாயைத் தூக்கிலிட்டுக் கொல்லுமாறு பூர்ணியா பகுதி நிர்வாக அதிகாரி பொலிஸாருக்கும் மாநகர ஆட்சியாளர்களுக்கும் உத்தரவிட்டிருக்கிறார். இந்த நாயை எதிர்வரும் ஆகஸ்ட் 15ம் திகதி தூக்கிலிடும் தருணத்திற்காகக் காத்திருப்பதாகக் கூறுகின்றனர் பொலிஸார். ஆனால் இந் நாயின் சொந்தக்காரர் இந்தத் தீர்ப்புக் குறித்துக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.



இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எத்தனையோ நல்லதும் கெட்டதுமாக, பொருட்களும் சேவைகளும் பழக்க வழக்கங்களும் கூட வந்து சேருகின்றன. 'மாடலிங்' விஷயத்தில் இந்தியா இலங்கையை விடப் பல படி முன்னால் இருக்கிறது. மும்பாய் 'பேஷன் ஷோ' உலக அளவில் பிரபலமானது. ஆனால் பக்கத்து நாடான இங்கு சொல்லிக் கொள்ளும்படியாக ஒரு 'மொடல்' அழகியையாவது கூற முடியுமா...? ஏன் நாங்கள் எல்லாம் பார்த்தால் 'மொடல்கள்' போல் தெரியவில்லையா என்று கேட்பது புரிகிறது.

மும்பையில் இந்த நாட்களில் Lflw என்ற பிரபலமான 'பேஷன் ஷோ' நடக்கிறது. அதில் கலந்துகொண்ட அநாலிசா டொனிசோ என்ற அழகி தன் வளமான அழகை இப்படிக் காண்பிக்கிறார். வேறு சில அழகிகளும் இங்கே இருக்கிறார்கள்.





## தொழில் என்று வந்துவிட்டால்....

தொழில் என்று வந்துவிட்டால் புலிக் குகைக்குள் நுழையவும் முதலை வாயில் கையை விடவும் தயங்கக் கூடாது என்று சொல்கிறார் இந்த இளைஞர். இப்படி முதலை வாய்க்குள் கையை, தலையை விட்டு, பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைப்பதுதான் இந்த இளைஞருக்குத் தொழில். சீனத் தலைநகரான பெய்ஜிங் மிருகக்காட்சிச் சாலையில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது. ■



## எலி வீடு

எந்தவொரு சிறிய இடத்திற்குள்ளும் புகுந்து தமது கைவரிசையைக் காட்டிவிடும் ஆற்றல் எலிகளுக்கு உண்டு. அதுவும் மைக்ரோமைஸ் மினூட்டர்ஸ் என்ற மிகச் சிறிய வகை எலிகளுக்கு இந்தத் திறமை இன்னும் அதிகமாக உண்டு. என்றாலும் விவசாயத்தில் முறையற்ற இரசாயனப் பாவனை காரணமாக இந்த எலி வகைகள் அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'டெனிஸ் போல்' ஒன்றிற்குள் இவ்வகை எலிகளுக்கு வீடமைத்துக் கொடுக்கும் புதிய சேவை ஒன்றைத் தொடங்கியிருக்கிறது பிரிட்டிஷ் டெனிஸ் கழகம் ஒன்று. சிம்போலிக்காக 'டெனிஸ் போல்' வீட்டுக்குள் இருக்கும் ஒரு எலியை கிளேமோகன் என்ற மிருக பாதுகாப்பு நிதியத்திற்கு இந்த டெனிஸ் கழகம் வழங்கியது. ■


## உயரத்திலிருந்து ஒரு கொலை!

இப்படியும் கொலை செய்வார்களா என்று வியப்போடு கேட்கின்றன பிரிட்டிஷ் பத்திரிகைகள். படத்தில் இருக்கும் 20 வயது இளைஞரான ஸ்டீவன் ஹில்டரின் பொழுதுபோக்கு பரசூட்டில் இருந்து குதிப்பது. கடந்த வாரம் பரசூட்டில் இருந்து விழுந்து இந்த இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்தார். 13 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானத்திலிருந்து குதித்தபோது இவரது பரசூட் இயங்காமல் போக அந்த சுற்றுவட்டாரத்துக்குள்ளேயே விழுந்து இவரது உடல் சுக்குநூறாகிப் போனது. இப்போது இது ஒரு கொலையாக இருக்கலாம் என்று விசாரணையாளர்கள் கருதுகின்றனர். பொதுவாக பரசூட்டில் குதிப்போர் இரண்டு பரசூட் பொதிகளை வைத்திருப்பார்கள். ஸ்டீவன் ஹில்டரின் இரண்டு பரசூட்களிலும் கயிறுகள் வெட்டப்பட்டுக் கிடந்தன. இவர் பரசூட்டைத் திறந்தபோது அது பட்டம் போல் வேறொரு திசையில் பறக்க, இவர் பரிதாபகரமாக கீழே விழுந்தார். இப்படி இரண்டு பரசூட்களிலும் கயிறு மர்மமாக அறுந்து போக வாய்ப்பில்லை என்று கருதும் பொலிஸார் குறிப்பிட்ட பரசூட் பயிற்சி நிலையத்துடன் தொடர்புடைய பலரை விசாரித்திருக்கிறார்கள்.



## தகவல் பெட்டி





## மொழிபெயர்ப்பு

நாய்களின் பாஷையை மொழி பெயர்க்க மொழி பெயர்ப்புக் கருவி வந்துவிட்டது. வள் வள், பௌ பௌ என்று நாய்களின் வித்தியாசமான குரைப்பு ஒலிகள் எதனை உணர்த்துகின்றன என்று மனிதர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் கருவி ஒன்றை ஜப்பானின் நிறுவனம் ஒன்று தயாரித்திருக்கிறது. இந்தக் கருவியின் பெயர் மியோலிகுவெல். இலங்கை மதிப்பில் சுமார் 7000 ரூபா வரை பெறுமதியானது.

அடுத்த செப்டெம்பர் அளவில் சந்தைக்கு வரவிருக்கும் இந்தக் கருவியை நாயின் கழுத்தில் கட்டிவிட்டால் அது எழுப்பும் சத்தத்தின் அர்த்தம் என்ன என்பதை மனித மொழிக்கு மாற்றிக் காண்பிக்கும் இக் கருவி.

## பக்திக் கூந்தல்

பெண்களுக்குக் கூட இல்லாத கூந்தல் வளம் சில ஆண்களுக்கு இருக்கிறது. குறிப்பாக சாமியார்களுக்கு. தங்கள் தோற்றத்தைப் பார்த்ததுமே மக்கள் அப்படி ஒரு பக்திப் பரவசத்துக்குள் மூழ்கிவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டு காடு போல தலை முடியை வளர்த்து வைத்திருப்பார்கள். இதில் உள்ள சுகாதார பிரச்சினை ஒரு புறம் இருக்க, பார்ப்பவர்களுக்கு பக்திக்குப் பதிலாக இவர்கள் மேல் பரிதாபம்தான் ஏற்படுகிறது. இந்தியாவின் கௌஹாத்தி பிரதேசத்தில் உள்ள சாமியார் ஒருவர் தன்னைவிட நீளமாகத் தனது தலை முடியை வளர்த்து வைத்துக்கொண்டு போஸ் கொடுக்கிறார்.



# கடுப்பில் சிம்ரன்

டிசம்பர் மாத இறுதியில் சிம்ரனுக்கு திருமணம் நடக்கும் என்று பத்திரிகைகள் எழுதித் தொலைக்க கடுப்பில் இருக்கிறார் சிம்ரன். 'இவர்கள் யார் எனது திருமணத் திகதியை நிச்சயிக்க' என்று தனக்குத் தெரிந்தவர்களிடம் பொரிந்து தள்ளியுள்ளார். "இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு திருமணம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை" என்று கூறிவரும் அவர் தான் யாரையும் காதலிக்கவில்லை என்று மீண்டும் பிளேட்டை மாற்றிப் போட்டிருக்கிறார். அந்த டில்லி இளைஞருக்கு அனுதாபங்கள்.



தருண் — திரிஷா
படம்: எனக்கு 20 உனக்கு 18

# முத்தமிட மறுத்ததால் அறை வாங்கிய நடிகை

'வேதம்' படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக நடித்தவர் சாக்ஷி. தற்போது சரத்குமாருக்கு ஜோடியாக 'மானஸ்தன்' படத்தில் நடித்து வருகிறார். இவரது தங்கை சில்பாவும் திரைப்படங்களில் நடிக்கிறார்.

மோகன் பாபு தயாரிக்கும் படம் ஒன்றில் இந்த சில்பா, மோகன் பாபுவின் மகன் விஷ்ணுவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இந்தப் படத்தில் ஹீரோ விஷ்ணுவின் உதட்டோடு உதடு வைத்து முத்தம் இட முடியாது என்று கூறியதற்காக மோகன் பாபுவிடம் அறை வாங்கியுள்ளார் சில்பா. ஹைதராபாத் ஸ்டூடியோ ஒன்றில் படப்பிடிப்பு நடந்தபோது காட்சியின்படி விஷ்ணுவை சில்பா பல செக்கன்கள் இறுக்கமாக அணைத்து முத்தமிட வேண்டும். இதனைச் செய்ய மறுத்ததால்தான் மோகன் பாபு சில்பாவை கன்னத்தில் அறைந்ததாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக தனது சகோதரி சார்பில் நடிகை சாக்ஷி மும்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# 'ரகசியமாய்'

'ரகசியமாய்' என்ற பெயரில் ஒரு படத்தை இயக்குகிறார் அமுதன். இந்தப் படத்தில் பூகம்பக் காட்சிகள் ரொம்பவும் முக்கியத்துவத்துடன் எடுக்கப்படுகின்றன. இதற்காக குஜராத் சென்று பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்த்து அங்கே 'ஷூட்டிங்' நடத்தியிருக்கிறார்கள்.

# ஹரி இயக்கத்தில் சிம்பு

'சாமி' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து ஹரி இயக்கும் புதுப் படத்தில் சிலம்பரசன் நடிக்கிறார். இந்தப் படத்தைத் தொடர்ந்து அவர் இயக்கப்போகும் இப் படத்துக்கு 'அய்யா' என்று பெயரிட்டிருக்கிறது.

# காதலியின் பாட்டியிடம் சுளுக்கு எடுக்கப் போன சிவா

'காக்க காக்க' என்று இரட்டைச் சொல்லில் பெயர் வைத்தாலும் வைத்தார்கள் இப்போது அதே பாணியில் 'தீண்ட தீண்ட' என்ற பெயரில் இன்னொரு படம் தயாராகிறது.

புதுமுகங்களான சிவா, ஷாவ்யா ஆகியோருடன் பலர் நடிக்கிறார்கள். ஷாவ்யா மீது சிவாவுக்குக் காதல். ஷாவ்யாவின் பாட்டி சுளுக்கெடுப்பவர். இந்தச் சாட்டில் தனக்கு காலில் சுளுக்கு ஏற்பட்டுவிட்டதாகக் கூறி ஷாவ்யாவின் வீட்டுக்குப் போகிறார் சிவா. பாட்டி காலில் எண்ணெய் தடவ அங்கே சுளுக்கேதும் இல்லை என்று பாட்டிக்குப் புரிந்துபோகிறது. உடனே அந்த இடத்தில் பாட்டி சுளுக்கை ஏற்படுத்தி இனிமேல் இப்படியான வேலை செய்யாதே என்று எச்சரிக்கிறார். அசடு வழிகிறது சிவாவுக்கு. இப்படி ஒரு காட்சி 'தீண்ட தீண்ட' படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

# ரொமேன்ஸாக வளரும் 'டச்'

நிஜமோ காதல் நிஜமோ....
நீராகி நிலமாகி காற்றாகி வானாகி தீயாக மாறும்....
காதல் தீயாக மாறும்.

'டச்' படத்திற்காக சிநேகன் எழுதிய வரிகள் இவை. ஹரிஸ் ராகவேந்தர், சின்மயா ஆகியோர் பாடியிருக்கிறார்கள். தேவாவின் இசையிலமைந்த பாடல் இது. புதுமுகங்களான ஜெய், இஷிதா ஜோஷி இவர்களுடன் விவேக், மலையாள நடிகர் முரளி உட்படப் பலர் இதில் நடிக்கிறார்கள்.

வேகமாக வளர்ந்து வருகிறது 'டச்'. இளம் உள்ளங்களை 'டச்' செய்யும் விதத்தில் ரொம்பவுமே ரொமேன்ஸாக பல காட்சிகளை எடுத்திருக்கிறார்கள். (இங்கே உள்ள படத்தைப் பார்த்தால் தெரியவில்லையா!) என்ன வகையான கதை என்றெல்லாம் கேட்கா தீர்கள். இப்போது அதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்.





பிரியங்கா திரிவேதி
படம்: ஜனனம்

சி
னி
வி
சி
ட்

# மினி சினி

✪ 'கோவில்பட்டி வீரலட்சுமி' படம் கொமர்சியலாக பெரிய அளவு சாதனை படைக்காவிட்டாலும் சிம்ரனின் நடிப்பு பரவலாகப் பாராட்டப்பட்டிருக்கிறது. இன்னொரு பூலான்தேவி பாணியில் படம் முழுவதும் சிம்ரன் புரியும் சாகசங்கள் அவரை இன்னொரு கோணத்தில் தமிழ் சினிமாவுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது என்று பலரும் புகழ்ந்துள்ளார்கள்.

✪ அருண்குமாருடன் நடிக்கும் 'ஜனனம்' படத்தில் பிரியங்கா திரிவேதி ரொம்பவுமே கவர்ச்சி காட்டிவிட்டதாகக் கடுப்பில் இருக்கிறார்கள் முன்னணிக் கவர்ச்சி நடிகைகள். மும்தாஜ், ஜூனியர் சில்க் ரேஞ்சுக்கு கதாநாயகிகளே போய்விடுவார்கள் என்றால் எங்களுக்கு எங்கே வேலை இருக்கப் போகிறது என்பதுதான் இந்தக் கவர்ச்சிப் புயல்களின் மனவருத்தம்.

✪ சங்கரின் 'பாய்ஸு'ம், 'விசில்' திரைப்படமும் இளைஞர்கள் மத்தியில் கணிசமான வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கின்றார்கள். 'பாய்ஸ்' முழுக்க முழுக்க வித்தியாசமான காட்சிகள், ஆடை அலங்காரங்கள் என்று கலக்கியிருக்கிறார்கள். தமிழ் திரைப்படத்தின் வரம்புகளுக்குள் ஒரு நல்ல கதை என்று 'விசில்' திரைப்படத்தை வர்ணித்திருக்கிறார், எழுத்தாளரும் இத் திரைப்படத்தின் கதாசிரியருமான சுஜாதா.

✪ 'சக்ஸஸ்' படத்தில் நடிக்கும் சோனியா அகர்வால் தமிழில் ஒரு ரவுண்ட் வருவார் என்று நிறையவே நம்புகிறார்கள். நடிப்பு எப்படிப் போனாலும் ஆடைக் குறைப்பில் அவரது பரந்த மனப்பான்மை, தமிழில் இவரை வாழ வைக்கும் என்பது கோடம்பாக்கத்தின் நம்பிக்கை.

✪ என்னதான் இல்லை என்று மறுத்தாலும் ஜோதிகாவுக்கும் சூர்யாவுக்குமிடையில் அழகானதொரு நெருக்கம் இருப்பதை 'காக்க காக்க' திரைப்படத்தின் இயக்குநர் கௌதம் பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். தன் படத்தில் காதல் காட்சிகளில் நடித்தபோது இந்த இருவரினதும் நெருக்கத்தைத் தெளிவாகக் காண முடிந்தது என்று கூறும் கௌதம், படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் இரசிகர்களே இதைப் புரிந்துகொள்வார்கள் என்று சொல்கிறார்.

✪ சிநேகாவும் ஸ்ரீகாந்தும் ஒரே காரில் ஊர் சுற்றுவதாகக் கூறப்படுகிறது. ஓரிடத்தில் ஸ்ரீகாந்தின் கார் வந்து நிற்க, தனது காரில் வரும் சிநேகா ஆள்அரவமற்ற இடத்தில் வைத்து ஸ்ரீகாந்தின் காருக்குள் ஏறிக்கொள்வதாகவும் பின்னர் கறுப்புக் கண்ணாடி வாகனத்தில் சென்னையை சுற்றி வருவதாகவும் நேரில் கண்டவர்கள் சொல்கிறார்கள். இருவரும் லேட்டர்ஸ்ட்டாக 'ஜிம்' ஒன்றில் மெம்பர் ஆகியிருக்கிறார்கள். 'பார்த்திபன் கனவு' படப்பிடிப்புக்காக இலங்கை வந்தபோதுதான் முன் எப்போதுமில்லாத அளவு இவர்களது 'நட்பு' டெவலப்பானதாகக் கூறுகிறார்கள்.



சிம்ரன்
படம்: கோவில்பட்டி வீரலட்சுமி



விஜயகாந்த் — கிரண்
படம்: தென்னவன்

## கமல் வீட்டில் கௌதமி

கமல் பற்றி ஏதாவது கிசுகிசு எழுதாவிட்டால் பலருக்குத் தூக்கம் வராது என்ற நிலையில்தான் தமிழ்த் திரையுலகம் இருக்கிறது. இப்போது லேட்டஸ்ட் சமாச்சாரம், 'கௌதமி கமல் வீட்டில் தங்கியிருக்கிறார்' என்பதுதான்.

'சண்டியர்' படப்பிடிப்புக்காக கௌதமி பல வழிகளிலும் கமலுக்கு உதவி வருவதாகவும் இருவருக்குமிடையில் டைப்பான நட்பு மலர்ந்துவிட்டதாகவும் முன்னர் கிசுகிசு கசிந்திருந்தது. இப்போது இது இன்னும் ஒரு படி டெவலப் பாகிவிட்டதாகச் சொல்கிறார்கள். கௌதமி தனது குழந்தையுடன் கமல் வீட்டுக்கே குடிபெயர்ந்துவிட்டதாகத் தெரிய வருகிறது. சரிகா வீட்டை விட்டுப் போனதும் வெறிச்சோடிக் கிடந்த கமலின் வீட்டுக்கு கௌதமி விளக்கேற்றுவார் என்று சொல்கிறார்கள். சரிகாவின் இடத்தை எல்லா வகையிலும் கௌதமி நிரப்புவாரா...?

## அஜித்தின் குறி தவறுமா?

கார் ரேஸில் அகில இந்திய ரீதியில் புகழ் பெற்றுவிட்ட அஜித்குமார் அடுத்து கைவைத்திருப்பது நோ.... கண் வைத்திருப்பது குறி பார்த்துச் சுடும் விளையாட்டில். இப்போது இவருக்கு நடிப்பும் கார் ரேஸும் அலுப்புத்தட்டி வருகிறது போல் இருக்கிறது. இதனால் புதிய புதிய சாதனைகள் படைப்பதில் ஆர்வம் காட்டுகிறார். குறி பார்த்துச் சுடும் கழகம் ஒன்றில் தன்னை அங்கத்தவராக இணைத்துக்கொண்டிருக்கிறார் அஜித்.



ஜெய் — இஷிதா ஜோஷி
படம்: டச்

## ...ன் சவாலாக இருப்பதைத்தான் விரும்புகிறேன்"

...குடும்பப் பாங்கான படம்.
...ன். இரண்டு வெவ்வேறு
...பண்ணியதால், லிங்குசாமி
...வர் என மக்கள் நினைத்து,
...டமிருந்து எதிர்பார்க்கிறார்
...உங்களைப் பொறுத்தவரை
...ப்படித்தான் பண்ண
...ட்டமிட்டா இந்த
...யும்

இது திட்டமிட்டுச் செய்ததுதான். குடும்பப் பாங்கான படம் பண்ணிவிட்டு, அடுத்த படம் வேறு மாதிரி இருக்க வேண்டுமென்றுதான் 'ரன்' பண்ணினேன். சினிமாவுக்கு வரும்போதே நினைத்துத்தான் வந்தேன். ஒவ்வொரு படமும் வெவ்வேறு மாதிரி இருக்க வேண்டுமென்று திட்டமிட்டேன். எனக்கு யாராவது வரையறை கொடுத்தாலே பிடிக்காது. அதிலிருந்து மீள எப்போதும் முயற்சித்துக்கொண்டே இருப்பேன். எனக்கே நான் சவாலாக இருப்பதைத்தான் விரும்புகிறேன். நம்முடைய சாயத்தை நாம்தான் பூச வேண்டும். பிறர் வந்து பூசக் கூடாது.

இந்த விஷயத்தில் ஸ்ரீதர் சார் என்னை மிகவும் பாதித்தவர். அவருடைய ஒவ்வொரு படமும் வெரைட்டியாக இருக்கும். 'நெஞ்சம் மறப்பதில்லை'யும் எடுப்பார். 'காதலிக்க நேரமில்லை'யையும் எடுப்பார். அதே மாதிரி பாசில் சார், 'பூவிழி வாசலிலே', 'பூச்சூடவா', 'வருஷம் 16' என வித்தியாசமாக எடுப்பார். நான் இரசித்த டைரக்டர்களெல்லாம் இப்படி இருப்பதால், நானும் அப்படி இருக்கிறேன் என்று நினைக்கிறேன். இது எனக்கு வரம்தான், சாபம் கிடையாது. சாபமாக எப்போது இருக்குமென்றால், 8,10 படங்கள் பண்ணிய பிறகு எல்லாமே பண்ணியாகிவிட்டதென்று புதிதாகத் தேடுவோமே அப்போது அது சாபம். லவ், குடும்பம், அரசியல் எனத் தொட்ட பிறகுதான், அடுத்து பாட்டே இல்லாமல் எடுக்கலாமா? சண்டை இல்லாமல் எடுக்கலாமா என்று யோசிக்கிற நிலை உருவாகும்.

**☞ பாரதிராஜா கிராமத்துக் கதைகளில் ஒரு அழுத்தமான சலனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அது போல் பாலச்சந்தர் மத்தியதர வாழ்க்கைப் போக்கிலமைந்த கதைகளில், மணிரத்னம் தொழில்நுட்பம் மற்றும் அடுத்த கட்ட தமிழ் சினிமாவின் தரம் போன்றவற்றில் சலனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது போல் நீங்களும் இப்போது வந்துள்ள புது இயக்குநர்களும் அந்த மாதிரி சலனம் எதையேனும் ஏற்படுத்தியிருக்கிறீர்களா?**

சினிமாவை ஒரு கட்டத்துக்குக் கொண்டுபோக வேண்டுமென்று திட்டமிட்டெல்லாம் பாரதிராஜா படம் பண்ணியிருக்க மாட்டார். அவரிடம் கேட்டாலும், இப்படி நினைத்து 'பதினாறு வயதினிலே' படம் பண்ணினேன், என்று சொல்ல மாட்டார். மயிலுன்னு ஒரு கேரக்டரைப் பண்ணினார். இதை இப்போது இன்ஸ்டிட்யூட்டில் போட்டுப் பார்த்துவிட்டு, அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போக இதைப் பண்ணினார் என்று நாம்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். எனக்குத் தெரிந்ததைப் பண்ணுகிறேன். அது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதைப் பொறுத்து எனக்கு ஒரு இடம் கிடைக்கும்.

**☞ அடுத்த புரொஜெக்ட்?**

ஆகஸ்ட் மாதம் படப்பிடிப்புக்குப் போகிறோம். ஜனவரி 14ந் தேதி படம் வெளிவருகிறது.



## சங்கடத்தில் ரஜினி

திரைப்படத் தயாரிப்புச் செலவுகள் எக்கச்சக்கமாய்க் கூடிக்கொண்டு போவது குறித்து ஜெயலலிதாவைச் சந்தித்துத் தீர்வு காண வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் பலர் நடிகர் சங்கத் தலைவர் என்ற வகையில் விஜயகாந்தை நெருக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் கெப்டன் இதற்கு உடன்படவில்லை. சூப்பர் ஸ்டாரும் அம்மாவைச் சந்திக்கத் தயங்குகிறாராம். காரணம் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக அரசு நடத்திய பேரணியின்போது தனது ரசிகர் மன்றக் கொடியை வழி நெடுகிலும் ஏற்றிவைத்து தன்னுடைய நற்பணி மன்றம் குறித்து நடத்திய பிரசாரம் அம்மாவின் காதுகளுக்கு எட்டியதுதான்.

## மறுக்கும் இளையராஜா

இளையராஜாவுக்கு வெளிநாடுகளில் உள்ள இரசிகர்களைப் பயன்படுத்தி பல நாடுகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்த சிலர் இளையராஜாவைத் தூண்டினார்கள். ஆனால் அண்மைக் காலமாகப் பல கலை நிகழ்ச்சிகள் நட்டத்தில் நடப்பது ஒரு
...புறமிருக்க விமர்சனங்களுக்கும் உள்ளாகி வருவதால் இப்போதைக்கு இந்த
...சி எல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம் அவர்.

## பார்த்திபனின் 'காதல் கிறுக்கன்'

'காதல் கிறுக்கன்' என்ற பிரமாண்டமான தயாரிப்பு ஒன்றில் நடிக்கிறார் பார்த்திபன். வித்தியாசமான வேடம் என்று அவர் சொல்கிறார். இதில் கதாநாயகியாக ரிச்சா பலோட் ஒப்பந்தமாகியிருக்கிறார். இவர் 'அல்லி அர்ஜுனா', 'ஷாஜகான்' படங்களில் நாயகியாக நடித்தவர். இவர்களுடன் வினித், வடிவேல், நாசர் உட்படப் பலர் நடிக்கிறார்கள்.



சோனியா அகர்வால்
படம்: சக்ஸஸ்

## பூக்காத மொட்டுக்கள்

நீ அழுதால்
எனக்கு
வலிக்கின்றது என்றாய்
அதனால் தான்
காதலா!
இப்போதும்
சிரிக்கின்றேன் போலியாய்

உன் மார்பில்
தலை சாய்த்து
உறங்கிடக் கனவு
கண்டேன்
உறவினர்கள்
புடை சூழ
உன் தாலியை
ஏற்றிடக்
கனவு கண்டேன்

இப்போது
உன் தாலியை
வேறொருத்தி ஏற்றிட
நான் பார்த்திருக்கின்றேன்
யாரோ ஒருத்தியாய்

எனக்கு
கண்ணீர் வரவில்லை
நான் அழுதால்
உனக்கு வலிக்குமே
என்பது தான்
நினைவுக்கு வருகின்றது.

சசிகலா ராஜ்குமார்,
திருகோணமலை.

## என்னிதய தேவதைக்கு.....

அன்பின் அர்த்தங்களை
அடர்த்தியாக்கித் தந்தவளே....

உன்னிதழ் குவிப்புகளில்தானே
மோட்சம் பெறுகிறதென் மனசு!
உயிரின் அந்தம் வரை
உறைந்து கிடப்பவளே
உன் நினைவுகளைச் சுமக்காத
நெஞ்சத்தில் சுகமெப்படிச் சுரக்கும்..?

தேவி...
சுவாசக்காற்று சுடுகின்ற தூரத்தில் நின்று
இருவருக்குமிடையே இடைவெளி
காட்டாது இம்சிக்குமுன்
இன்பங்களை வார்த்தைகளில்
எப்படி வரையறுப்பேன்.

நொடிக்கு நொடி மூச்சுக்கு மூச்சு
உனைத்தானேயடி உள்ளிழுத்து
மாறாக என்னை வெளிவிடுகிறேன்.

பாலைவனத்தில் பால் வார்த்தவளே....!
சோலைக்குயிலாய் என்
சோடிக்குயிலாய் கூடிக்கொள்ள ஓடிவா

உன்னையடைந்தவுடன்
மண்ணில் மடிந்துவிடவும்
எனக்குச் சம்மதம்.

'மலைக்குயில்' து.பிரபாஹர், ஹப்புத்தளை.



## மக்கிப் போன வாழ்வு

மக்கு என் காதில்
அடிக்கடி ஒலிக்கின்ற
மந்திரமது.

ஏனோ தெரியவில்லை
அப்பாவுக்கு
நானென்றால்
வேப்பங்காய் கசப்பு.

எதைச் செய்தாலும்
ஏச்சும் பேச்சுந்தான்
நல்லது செய்தாலும்
நச்சரிப்புத்தான்

பள்ளி செல்கையில்
பாலகன் நான்
நூற்றுக்கு நூறுமார்க்கு
வாங்கிய என்னை
அப்பா கேட்டாரே
யாரைப் பார்த்தெழுதி
நூறு மார்க்கு
வாங்கினாயென்று.

என் மேல் எனக்கிருந்த
நம்பிக்கையது
என்னை பெற்ற
அப்பாவுக்கு எள்ளளவும்
இருக்கவில்லை.

ஐந்தாம் வகுப்பிலேயே
அடித்தார் என்படிப்புக்கு
அப்பாவே சாவுமணி.

மக்கு மக்கென்று
மாடு மேய்க்க
அனுப்பி வைத்தார்
எந்தனது
பள்ளிக் கனவெல்லாம்
கள்ளிக் காடாச்சு.

மந்தைகளை நான்
மேய்த்தாலும்
என் தந்தை என்னை
மதிக்கவில்லை
கனவிலும் கூட அவர்
கனிவாகப் பேசவில்லை.

கனவுகளுடனேயே
காலங்கள் கழிந்தன
என்னோடு படித்த
என்சக நண்பரெல்லாம்
அரசாங்க வேலையிலே
அருமையாக இருக்கிறார்கள்.

எருமைகளுடனேயும்
ஏச்சும் பேச்சுமாக
என் வாழ்க்கை இருக்கிறது.

மக்கு மக்கென்று
சொல்லி சொல்லியே
என் மலரும் வாழ்வதனை
மக்கிப் போகச் செய்துவிட்டார்.

மாணிக்கன் இளங்கோ,
மட்/அரசினர் ஆசிரியர்
கலாசாலை.




## பூவிற்குப் பிறந்த நாள்

முட்புதருக்குள்
பூத்திருக்கும்
மலரே
கயவர்களுக்கு மத்தியில்
நீ
காயப்பட்டுப் போனதில்
வலி உனக்கு மட்டுமல்ல....
எனக்கும் தான்....!

இரத்தம்
உறிஞ்சும்
அட்டைகளுக்கு
பூக்களின் வலி
புரிவதில்லை....!

தீயவர்களின்
தீ நாக்கு சுட்டு
நீ
சாம்பராகிவிடப் போவதில்லை...
சமாதானப் படுத்திக் கொள்....
உன்னை
சாந்தப்படுத்திக் கொள்....
இத்தீயில் - உன்னை
புடம்போட்டு
மெருகேற்றிக் கொள்....!

வஞ்சனைகள்
வரும்போது
வாழ்த்துக்களும்
உன்னை
வந்து சேரும்....!

நீ
பூத்த நன்னாளில்
பூக்களும் பெருமைகொள்ளும்....
புதிதாய் நம்மில் ஒரு
பூவென்று....!

நீ
மலர்ந்து மணம் வீசு....
உன்னை
சூடிக்கொள்ள - ஒரு
சுயம்வரமே நடக்கும்...!

கவலை கொள்ளாதே....
வசந்தத்தை
உனதாக்கிக் கொள்....
வாலிபம்
மறைந்து விட்டாலும்
வாழ்த்திக் கொண்டிருப்பேன்
உன்னை.....!

ராம்.யுவராஜ், கண்டி.



## நேற்றைய நிலவு

தூரமாகிப் போன - என்
நிலாத் துண்டை பார்க்கிறேன்
காயங்களும் கசிவுகளும்
இன்னும் காயவில்லை....

ஈரங்கள் இரக்கமில்லாமல் சிலிர்க்கிறது
மனசுக்குள் ஒரு சிவப்பு ரோஜா
மீண்டும் அதே வர்ணனைகளுடன் - என்
கனவுகளை முள்ளாய் காயப்படுத்துகிறது!

இன்று நான்...
நீர்வீழ்ச்சி போல் சுதந்திரமாய்
பூந்தென்றல் போல் புதுமையாய்
கற்காலத்தைப் போல் தூரமாய்
இன்னும் கொஞ்சம் ஈரமாய் வாழ்கிறேன்.

கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் -
இன்னும்
என் காதல் உயிருக்கு போராடுகிறது!
இறுக்கிப் பிழியப்பட்ட இதயச்சக்கை
காதல் கசிவுகள் நிரந்தரமாய் நேற்றோடு
வந்து பார்க்கும் போது நிலா நிமிர்ந்தபடி
நானோ தலை குனிந்தபடி

ஆம்! நான் தான் நிலவை கேட்டேன்
இப்போதும் கேட்கிறேன்.
நேற்றைய ஒளி வட்டத்தில்
இன்றைய விம்பங்கள்

பால் முகம் பார்த்த நிமிடங்களும்
தேன் குரல் கேட்ட நாளிகைகளும்
பூவிதழ் ஸ்பரிசங்களின் புள்ளிவிபரமும்
இந்த நிலாத்துண்டுக்கு எங்கே தெரியப்
போகிறது!

மீண்டும் அந்த முகிலுக்குள்....
முக்காடு இட்டபடி முணுமுணுக்கிறது
நிலா!

ம.விஜயதர்சினி, அழுபொத்துவலை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

மிருக கதாபாத்திரங்களினூடாக மனித இயல்புகளைச் சித்தரிப்பது இலக்கியங்களில் காணக் கிடைப்பதுதான். மிகச் சிறந்த உதாரணம், ஜோர்ஜ் ஆர்வெலின் 'விலங்குப் பண்ணை'. எல்லா விலங்குகளிடமிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் மனிதனிடம் வந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக நாய் - மனிதக் குணாதிசயங்கள், பழக்கங்களுக்குக் குறியீடாக வரும்படி பல எழுத்தாளர்களால் படைக்கப்பட்டிருக்கிறது. 'ஜாக்' லண்டனில் பிரபலமான ஒரு நாவல். முழுக்க முழுக்க 'பக்' என்ற நாயைப் பற்றியது.

தமிழிலும் நகுலனின் 'நாய்கள', பசுவய்யாவின் 'நடுநிசி நாய்கள்', ஞானக் கூத்தனின் 'பாடையின் கீழ் போகும் நாய்' போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

நாய்கள் குறித்து எழுதுவதாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டு, பிரமிள், பசுவய்யா, ஞானக்கூத்தன் போன்றோர் தமக்குள் நையாண்டி யுத்தத்தை நடத்திக்கொண்டுமிருந்திருக்கிறார்கள்.

நாய்க் குரைப்பு பற்றிச் சொல்லும் மூன்று கவிதைகள் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக.....

### நாய்க் குரைப்பின் காலங்கள்

நாய்க் குரைப்பின் பொருள் எனக்குத்
தெரியும்போது
என் பொருள் சிக்கலும் விடுபட்டுப்
போகும்.
என்னைச் சுற்றி சதா இந்த நாய்க்
குரைப்பு.
என் குடியிருப்பு அப்படி.

நாய்க் குரைப்பின் பொருள் பற்றி நான்
யோசிப்பது ஏனெனில்
வேறெங்கும் பொருளற்ற தீவிரமும்
இப்படிப்
பீறிடுவதை நான் கண்டதில்லை.

தன் உடலிலுள்ள ஒவ்வொரு
அணுவையும் குவித்து
அடி வயிற்றை எக்கி
சூன்யத்தில் தலை தூக்கி
நாய்கள் குரைப்பதை நீங்களும்
கவனித்திருப்பீர்கள்.

நாய்களுக்கு அவற்றின் குரைப்பின்
பொருளோ பொருளின்மையோ
தெரியும்போது
அவை எப்படிக் குரைக்கும்?

குரைக்குமா?

ஒரு சமயம் அவை குரைப்பதை விட்டு
வாலை மட்டும் ஆட்டிக்
கொண்டிருக்கலாம்.

அந்தக்காலம் இப்போதை விடவும்
நன்றாக இருக்கும்.

—பசுவய்யா.



### நாய்

காலம் கடந்துண்ணும் எதிர்மனைப்
பார்ப்பான்
எச்சிற் கலையைத் தெருவில் எறிந்தான்.

ஆள் நடவாத தெருவில் இரண்டு
நாய்கள் அதற்குத் தாக்கிக் கொண்டன.

ஊர்துயில் குலைந்து நாய்கள்
குரைக்கவும்
அயல்தெரு நாய்களும் ஆங்காங்கு
குரைத்தன.

நகர நாய்கள் குரைப்பது கருதிச்
சிற்றூர் நாய்களும் சேர்ந்து குரைத்தன.

நஞ்சை புஞ்சை வயல்களைத் தாவிக்
கேட்கும் குரைச்சலின் குறைச்சலைக்
கேட்டு
வேற்றூர் நாய்களும் குரைக்கத்
தொடங்கின.

சங்கிலித் தொடராய்க் குரைத்திடும்
நாய்களில்
கடைசி நாயை மறித்துக்
காரணம் கேட்டால் என்னத்தைக் கூறும்?

—ஞானக் கூத்தன்.

### என்னைச் சுற்றிலும்

எல்லா நாய்களும் அலைகின்றன
எல்லா நாய்களும்
மோப்பம் பிடிக்கின்றன.
முகத்தை முகத்தைப் பார்க்கின்றன
பின்னாலேயே வருகின்றன
பயந்து ஓடினால் துரத்துகின்றன
கொஞ்சம் பழகிவிட்டால் போதும்
நக்கத் தொடங்கி விடுகின்றன.

தெரு நாய்களுக்குப் பெயரில்லை
வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவை
வீட்டு நாய்களும்....
என்றாலும், எல்லா நாய்களும்
ஒரே நாய்கள் தான்.

பார்க்க சாது மாதிரித் திரிகிற
Belt போட்ட நாய்களிடம்
எப்போதும் ஜாக்கிரதையாகவே
இருக்க வேண்டியிருக்கிறது.

யாராக இருந்தாலும்
கண்டு கொள்ளாமல் இருக்கிற
ஓரிருவரைத் தவிர
எல்லோரையும் விரோதியாகப் பார்க்கிற
நாய்களும் உண்டு.

இந்தத் தெரு நாய்களுக்கு
அந்தத் தெரு நாய்கள்
பெரும்பாலும் சிநேகிதமாய்
இருந்ததில்லை.

ஒத்த குணத்தில்தான் இருக்கின்றன.
எல்லா ஜாதி நாய்களும்!
இருந்தாலும், ஒதுங்கிப் போகிற
தெருநாயைப் பார்த்து
காரணமில்லாமல் குரைப்பதில்தான்
Balcony நாய்க்கு பரம சந்தோஷம்.

என்ன செய்ய....?
எப்போதோ விரட்டி விரட்டி
கடித்த அல்லது கடிக்க வந்த
நாய்க்காக, எல்லா நாய்களையும்
விரோதம் பாராட்ட வேண்டியிருக்கிறது.

—மா.காளிதாஸ்

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி —



பெயர்: எம். இர்பான்
வயது: 22
முகவரி:
P.O. BOX-31784
DOHA - QATAR.
பொழுது போக்கு:
பேனா நண்பர்கள்



பெயர்:
பி. தேவநேசன்
வயது: 18
முகவரி:
123/33, கடையாகுளம்,
சமகி மாவத்தை,
புத்தளம்.
பொழுது போக்கு:
கவிதை எழுதுவது.



பெயர்:
அ.அஞ்சலாதேவி
வயது: --
முகவரி:
லோட்டன் வீதி,
மானிப்பாய்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: என்.எம். சுஜன்
வயது: 23
முகவரி: A.B.V. ROCK GROUP,
P.O.BOX-1684,
BURAITHA SITE -03,
AL QASSIM, K.S.A.
பொழுது போக்கு:
கிரிக்கெட், இசை.

# எப்போதும் பொலிவுடன்

குடும்பத்தில், பெண் என்பவள் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக, பொலிவுடன் காட்சியளித்தால் அந்தக் குடும்பம் எப்போதும் மகிழ்ச்சியான குடும்பமாக அமையும்.

சிலர் எப்போதும் 'உர்ர்' என்று முகத்தை வைத்துக்கொண்டு, சிடுசிடு வென்று பிறரின் மீது எரிந்து விழுவதுண்டு.

மகிழ்வார். இப்படிப்பட்ட பெண்களைப் பார்க்கும் எவருக்கும் மனதிற்குள் சந்தோஷம் பிறக்கும். அந்தப் பெண்ணின் கணவரோ அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்களோ சந்தோஷமடைவர்.

ஆனால் ஒரு சில பெண்கள், தங்களைத் தாங்களே குறைபாகக் காட்டும் நிலையில் உள்ளனர். தினம் குளிக்காமல், நல்ல ஆடைகள் அணிந்து கொள்ளாமல், தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல், வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பு இல்லாமல் வாழ்ந்து வருவார்கள். இவர்களின் இத்தகைய நிலைமையைப் பார்த்து மற்றவர்களும் முகம் சுழிக்க ஆரம்பிப்பார்கள்.

அதிலும் ஒரு குழந்தைக்குத் தாயான பிறகு, பெண்களில் பலர் தங்



சில குடும்பத்தில் எவ்வளவு பொருளாதாரப் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டிக்கொள்ளாமல் சிரித்த முகத்தோடு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது உண்டு. இதுதான் அந்தக் குடும்பத்திற்கு மகிழ்ச்சியைத் தரும்.

பெண்கள் மகிழ்ச்சியாய் இருப்பதற்குப் பணம், நகை, பட்டுப் புடவை... போன்றவை மட்டும் காரணமாய் அமைந்துவிடுவதில்லை. இவை போன்ற எந்தப் பொருளும் இல்லாத, வசதிகள் குறைந்த பல பெண்கள் எப்போதும் சந்தோஷத்தை முகத்தில் தவழ விடுவதுண்டு.

ஆக, மகிழ்ச்சி என்பது அவரவரின் மனதைப் பொறுத்த விஷயமாகவே அமைந்துவிடுகிறது.

ஒவ்வொரு பெண்ணும் தன்னை மகிழ்ச்சியாய் வைத்துக்கொள்வதற்கு அவள் தினமும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு புதுப் பொலிவுடன் திகழ வேண்டும்.

பெண்களில் பலரும் தினமும் தங்களை அலங்கரித்துக்கொண்டு, நல்ல ஆடைகள் உடுத்தி, தலையில் பூச்சூடு

களை அலங்கரித்துக்கொள்வதையே விட்டுவிடுவார்கள். "அதுதான் ஒரு குழந்தை பிறந்தாச்சே! இனிமேல் என்னத்தை அலங்கரிச்சு, என்ன ஆகப் போகிறது" என்ற ரீதியில் பேசிக்கொண்டிருப்பார்கள்.

ஆனால் இத்தகைய மனப்போக்கு விலக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உங்கள் குழந்தையும், கணவரும் உங்களைப் பார்த்துச் சந்தோஷமடைவதற்கும், அவர்களின் கவலையை மறப்பதற்கும் நீங்கள் பொலிவுடன் காணப்பட வேண்டியது அவசியம்.

இங்கு நான் அலங்கரிப்பது என்று சொல்வது 'பியூட்டி பார்லர்' சென்று அலங்கரித்துக்கொள்வதன்று, எளிமையாக முகம் கழுவி, தலை வாரி, சுத்தமான ஆடைகளை அணிந்துகொண்டாலே போதுமானது.

ஆக, நீங்கள் எந்த வயதுப் பெண்ணாக இருந்தாலும் சரி, எப்போதும் முகப் பொலிவுடன் காட்சியளியுங்கள். அது உங்களுக்கும் சந்தோஷத்தைத் தரும். பிறரும் உங்களைப் பார்த்துச் சந்தோஷமடைவார்கள்.

# லேடீஸ்

## ஸ் பெ ஷ ல்

## இருதய நோய்கள் வராமலிருக்க 9 வழிகள்

1. நாள் தோறும் நாலு கிலோ மீட்டராவது நடக்கவும்.

2. குறிப்பிட்ட நேரத்தில் உணவு சாப்பிட, வேலைக்குப் போக, விளையாட, உறங்க என்று ஒரு கால அட்டவணையை வகுத்துக்கொண்டு அதன்படி செயற்படுங்கள்.

3. பேருந்து, ரயில், விமானப் பயணம் புறப்படுபவர்கள் சற்று முன்னதாகவே அந்த இடத்துக்குச் சென்று விடுங்கள். கடைசி நிமிடப் பதற்றம் இருதயத்துக்குக் கடும் எதிரி.



4. சாப்பிடும்போது எந்தக் கவலையையும் மனதில் ஏற்றிக்கொள்ளாதீர்கள்.

5. இனிமையாக, சிரித்துப் பேசுவது இருதயத்துக்கு நல்லது.

6. ஒவ்வொரு நாளும் படுக்கப் போகுமுன், அன்று நீங்கள் செய்த சாதனைகளை நினைத்துக் கவலையின்றி உறங்கச் செல்லவும்.

7. துன்பமான செய்திகளையும் சகஜமாக எடுத்துக்கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள்.

8. உரையாடல், விருந்து, மது, செக்ஸ்... எல்லாவற்றிலும் எல்லை மீறாமல் இருக்கவும்.

9. தியானம் செய்வது இருதயத்துக்கு மருந்து.

# பெண்ணே... நீயும் பெண்தான்!

சாதிக்க வேண்டும் என்ற எண்ணமுடைய எவருக்கும் தன்னம்பிக்கை மிக மிக முக்கியம். இந்த விஷயத்தில் ஆண்களை விட தன்னம்பிக்கையில் அபார நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பெண்கள்தான் என ஓர் ஆய்வில் நிரூபித்திருக்கிறார்கள்.

இன்று, பெண் சமுதாயம் இந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்ததற்குக் காரணம் பெண்களின் மனதில் தோன்றிய தன்னம்பிக்கைதான்.

பொதுவாக வாழ்க்கைச் சூழலில் பல சந்தர்ப்பங்களில் ஆண்களை விடவும் மிகுந்த பிரச்சினைகளுக்கும், சிரமத்திற்கும் ஆளாகுவது பெண்கள்தான். இப்படி ஏற்படும் வாழ்க்கைப் பிரச்சினைகளால் துவண்டுவிடாமல், தன்னால் முடியும், தன்னால் எதையும் தாங்கிக்கொள்ள முடியும், தன்னால் முன்னேற முடியும் என தன்னம்பிக்கை வைக்கின்ற பெண்களே முன்னேற்றமடைய முடியும். அவர்கள்தான் வாழ்க்கையில் பல சாதனைகளை நிகழ்த்தி இருக்கின்றனர்.

பெண்களுக்கு தன்னம்பிக்கை என்பது அவர்களின் பிறவிக் குணமாக அமைந்துவிடுகிறது. கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கிக்கொண்டு எப்படியும் வாழ்ந்து காட்டியே தீருவது என்பதில் பெண்கள் ஆண்களை விட ஒருபடி உயர்ந்துதான் நிற்கின்றனர்.

தங்கள் வாழ்க்கை முன்னேற்றமடைய வேண்டுமானால் தன்னம்பிக்கை அவசியம் என்பதனை உணர்ந்த பெண்களே வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

பெண் முன்னேற்றத்தின் முதல் துவக்கமே தன்னம்பிக்கையிலிருந்தான் ஆரம்பிக்கிறது. பெண் சாதனையின் அஸ்திவாரத்தை ஆராய்ந்தால் அதில் முழுவதும் நிரம்பியிருப்பது தன்னம்பிக்கையே.

தன்னம்பிக்கைதான் ஆதாரம்.



தன்னம்பிக்கைதான் மூலம். இதை ஒவ்வொரு பெண்ணும் உணருதல் வேண்டும்.

தன் கணவனாலேயே வஞ்சிக்கப்படும் பெண்கள், இந்த சமுதாயத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவருமே போராடி, உயர்ந்து வந்ததற்குக் காரணம் அவர்களின் தன்னம்பிக்கைதான். வெற்றி பெற்ற எல்லாப் பெண்களுமே அதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் தன் மனதில் தன்னம்பிக்கையை விதைத்துக்கொண்டால் எக்காலத்திலும் அவர்களுக்குப் பிரச்சினையே இல்லை.

# வெங்காயத்தின் மகத்துவம்



நமது சினிமாக்காரர்கள் முருங்கைக்காயை ஒரு 'செக்ஸ்' ஆகாரமாகவே தமிழ் சமூகத்தில் பிரபல்யப் படுத்திவிட்டார்கள். உண்மையில் முருங்கைக்காய் உடம்புக்கு நல்லதுதான். ஆனால் தமிழ்ப் படங்களில் காண்பிப்பது போன்று அது ஒன்றும் அந்தச் சமாச்சாரத்தை 'டெவலப்' செய்யும் உணவல்ல. அதிகளவு உடல் உஷ்ணத்தைக் குறைக்கவும் சிறுநீரகத்தோடு சம்பந்தப்பட்ட சில வியாதிகளுக்கும் முருங்கை நல்ல மருந்து. ஆனால் வெங்காயம் இருக்கிறதே இது உண்மையாகவே ஆண்களுக்கு சிறந்ததோர் ஆகாரம். ஆண்மை விருத்திக்கு உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். சிறிய வெங்காயம் மட்டுமல்ல, பம்பாய் வெங்காயம் என்று நாம் அழைக்கும் பெரிய வெங்காயமும் இந்த விஷயத்தில் பயன் தரக் கூடியது.

## 8வது பிறந்தநாள் வாழ்த்து 23.07.2003



### செல்வி திருநாவுக்கரசு லட்சனி

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு.திருமதி திருநாவுக்கரசு-விக்கினேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி லட்சனி தனது 8வது பிறந்த நாளை 23.07.2003ல் கனிகிரியில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, தங்கை தனிஷி, சுவிஸிலுள்ள சித்தப்பா, சித்தி, அண்ணன்மார்களான பிரவீன், பிரேன், ஜோன்சன், மஞ்சு அக்கா குடும்பம், தம்பி மாதுரன், ராஜா மாமா குடும்பம், நகுலேஸ்வரன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம், ஆனந்தன் மாமா குடும்பம், செல்வா மாமா குடும்பம், சீலன் செல்வம் மாமா குடும்பம், குயின்சன் மாமா, நேசன் மாமா, தாஸ் மாமா குடும்பம், கதிரை மலை மாமா,

லண்டனிலுள்ள அண்ணன்மார்களான விநதன், கிருபாகரன், குகன் மாமா குடும்பத்தினர், சாந்தன் மாமா குடும்பத்தினர், டோஹாவிலுள்ள குகன் சித்தப்பா, ரூபன் சித்தப்பா, ஜேர்மன் சிவாஜினி பெரியம்மா குடும்பம், மட்டுநகர் துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசைத் தம்பி மாமா குடும்பம், திருகோணமலையைச் சேர்ந்த உதயன் மாமா குடும்பம், யாழ்ப்பாணத்திலுள்ள பெரியந்தை சின்னத்தம்பி புனிதவல்லி, சின்னத்தை சின்னராஜா மலலிகாதேவி குடும்பத்தினர், அப்பம்மா மந்தகுட்டி, பெரியம்மா மார்களான விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி குடும்பத்தினர், போரதனையிலுள்ள அண்ணா அக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

### 22.07.2003



செல்வன் பா.பிரணவன்

தற்போது சென்னையில் வசித்துவரும் இலங்கையைச் சேர்ந்த திரு.திருமதி பாலகிருஷ்ணன்-சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரணவன் தனது முதலாவது பிறந்த நாளை 22.07.2003 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, இத்தாலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், லண்டனில் வசிக்கும் சித்தி, சித்தப்பா, அண்ணா, பாபு பெரியப்பா குடும்பத்தினர், சந்துரு பெரியப்பா குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் பாட்டி, அப்பப்பா, அம்மம்மா, அக்காமார், அத்தை, மாமா குடும்பத்தினர், சித்தப்பா, சித்தி குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலைகளையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : என்.தேவானந்தா (பெரியப்பா)

"நீ இன்னும் தூங்கலையா? ஏதாவது ட்ராங்க் விலைஸர் தரட்டுமா? எனக்கும் தூக்கமில்லை. லோபில போய் ஒரு ஃபோன் கால் பண்ணிட்டு வந்தேன்" என்றார்.

மறுநாள் காலையில் நாங்கள் பெங்களூர் போக ப்ளேன் பிடித்தோம். எங்கள் ஹனிமூன் புனிதப் பயணம் துவங்கியது. ஏர்பஸ் விமானத்தில் நான் போனதே இல்லை. எதற்குப் பொய் சொல்வானேன். "விமானத்திலேயே நான் போனதில்லை!" என்றேன்.

"நகர்றதே தெரியாது" என்றார். அலுமினிய தள்ளுவண்டிகளும் மொசைக் தரையில் சறுக்கி விளையாடும் பணக்காரக் குழந்தைகளும் எங்கும் சீருடை ஆசாமிகளும் எல்லாரும் எல்லாத் திசையிலும் நடக்க என்னை வழியனுப்ப அப்பா, அம்மா,ஜெயந்தி மற்றும் சில அத்தைகளும் சித்தாப்பாக்களும் வந்திருந்தார்கள். சன்னலுக்கு வெளியிலிருந்து டாட்டா காட்டியபோது அம்மா, "நான் சொன்னதெல்லாம் ஞாபகம் வெச்சுக்கோ!" என்றாள்.

என்ன சொன்னாள் என்று குழப்பமாக இருந்தது. சமீப காலத்தில் அம்மா ஏதும் சொல்லவில்லை. பிறந்ததிலிருந்து அவ்வப்போது "அதைச் செய்யாதே இதைச் செய்யாதே" என்று எச்சரிக்கையாகவே, தடையுத்தரவுகளாகவே வளர்த்தாளே, அந்த அறிவுரைகளைக் குறிப்பிடுகிறாள் போலும்!

நான், "கவலைப்படாதம்மா, சமத்தா இருக்கிறேன்" என்றேன்.

அப்பா ஏர்போர்ட் புக் ஸ்டாலில் புத்தகம் வாங்க உள்ளே அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள் என்று வருத்தப்பட்டார். "செக்யூரிட்டிக்காக" என்று அர்ஜுன் சொன்னார். எக்ஸ்ரே மிஷினில் என் கைப்




பையைச் செலுத்தி, அந்தப் பக்கம் பெற்றுக்கொள்வது, பெண் போலீஸ் என் மார்பை கருவியால் தடவுவது, அந்தப் பக்கம் தூண்களைச் சுற்றி சுகமான இருக்கைகள், எல்லாமே புதுசாக இருந்தன எனக்கு.

கையில் வரைந்திருந்த மெகிந்தியும் கலகலக்கும் வளையல்களும் எங்கள் ஹனிமூன் நோக்கத்தைப் பகிரங்கமாக அறிவித்தன. எனக்கு வெட்கமாக இருந்தது. படிக்கப் புத்தகம் எடுத்து வரவில்லை. அர்ஜுன் ஓயாது பேசிக் கொண்டிருந்தார். டைம் பத்திரிகையுடன் பிஸினஸ் இண்டியாவும் இகனாமிக் டைம்ஜும் வாங்கினார். எனக்காக ஒரு ஃபெமினா வாங்கியிருந்தார்.

## அங்கம் 07

ப்ளேன் கிளம்பக் காத்திருக்கும் போது, நான் சில்லி சிக்கன் செய்வது பற்றியும் மெனோபாஸ் ட்ரபிள் பற்றியும் ஒல்லியான மங்கையின் கார்டிகன் சிரிப்புக்களையும் சம்பந்தமில்லாமல் படித்துக்கொண்டிருக்க அர்ஜுன் சினேகிதர் ஒருத்தரை சக பயணியாகப் பார்த்து, அவருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"கங்கிராஜுலேஷன்ஸ்! ஷி




இஸ் வெரி ப்ரெட்டி. என்னம்மா இவங்கிட்ட இருக்கிற பழக்க தோஷங்களையெல்லாம் சொல்லிட்டானோ இல்லையோ?"

நான் புரியாமல் மையமாகச் சிரித்தேன்.

"ஏய் சங்கர்" என்று அர்ஜுன் அதட்ட,

"அவ பாட்டுக்கு உண்மைன்னு நினைக்கப் போறா, சங்கர் தமாஷுக்குச் சொல்றான்" என்றார்.

### எழுதுவது - சுஜாதா

"சிகரெட் கிகரெட் எல்லாம் ஏதும் கிடையாது. ரொம்பத் தங்கமான பையன். என்ன, அப்ப இப்ப த்ரீ ஒக்ளாக் ஃபோர் ஒக்ளாக் என்று...."

"ஏய்! ஷட் அப் மேன்!" என்று அர்ஜுன் அதட்ட, அந்த சங்கர் எனப்பட்டவர் சிரித்து,

"ஸீ யு இன் பெங்களூர்" என்றார்.

"அ ஹோம் ரெக்கர்" என்று அவரைப் பார்த்து சிரித்து டாட்டா காட்டி, "அவன் சொல்றதையெல்லாம் நம்பாதே" என்றார்.

"அவர் என்ன சொன்னார்? புரியவே இல்லையே...."

"புரியலை? நான் ரேஸுக்குப் போவேனாம்?"

"ரேஸ்னா?"

"குதிரை ரேஸ்! எப்பவோ ஒரு தடவை அங்க ஒரு கஸ்டமரைச் சந்திக்கிறதுக்குப் போனேன். அதிலிருந்து பிடிச்சான்" என்றார்.

"எப்ப ஏர்போர்ட்ல பார்த்தாலும் கேட்டுகிட்டே இருப்பான்" என்றார்.

அந்த ஆசாமியை மறுபடி க்யூவில் பார்த்தபோது அர்ஜுன், "கொஞ்சம் இரு, அந்த போர் போகட்டும். அப்புறம் போகலாம்" என்றார்.

விமானம் அத்தனை பிரமாண்டமானது என்று எனக்கு ஐடியாவே இல்லை. மேலே அலுமாரியும் எதிரே டிபன் சாப்பிட மடக்கு மேசையுமாக ஏறக்குறைய முன்னூறு பேர் உட்கார வசதியாக.

"இது இத்தனை பளுவை வைத்துக்கொண்டு எப்படி மேலே பறக்கும்?" என்றேன்.

சன்னலுக்கு வெளியே பார்த்த போது, ஒரு ஃபியட் காரை வேறு ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

விமானம் கிளம்பும் முன் எனக்கு அவர்தான் பெல்ட் போட்டு விட்டார். அப்போது எனக்கு அந்த பயம் வந்தது. இந்த விமானம் விழுந்து நொறுங்கப் போகிறது என்று அர்த்தமற்ற பயம் வந்து ஆட்கொள்ள, அர்ஜுனைப் பிடித்துக் கொண்டேன்.

"ஏன் உன் கை நடுங்கறது?"

"ரொம்பப் பயமாக இருக்கு."

"என்ன பயம்?"

சொல்லவில்லை, சிரிப்பார் என்று தோன்றியது.

"இதுக்கு முன்னால ப்ளேன்ல போனதில்லையா?"

இல்லை என்று தலையாட்ட, விமானம் கிளம்பி கொஞ்ச தூரம் மெல்லப் போய், பிறகு திடீர் என்று பலமான விசில் சப்தத்துடன் வேகமாகப் புறப்பட்டு எவ்வியது. என் வயிற்றைக் கவ்வியது. கரும் பஞ்சுப் பொதிகள் போல மேகங்கள் சனன்லுக்கு வெளியே விசிறியடிக்க, கொஞ்சம் தூக்கித் தூக்கிப் போட,

"விழப் போறது விழப் போறது" என்று சொல்லிக்கொண்டே,

"அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளி தரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட் பெருஞ்ஜோதி"

என்று என்ன என்னவோ முணுமுணுக்க ஆரம்பித்தேன். அந்த உணர்ச்சி வெள்ளம் புதுசாக இருந்தது எனக்கு. ஏன் இப்படி என்று எனக்கே வியப்பாக இருந்தது. எரிக் காஜங்கின் Fear of Flying ஞாபகம் வந்தது.

"ரேகா! இஸ் எனிதிங் ராங்?" என்றார் அர்ஜுன்.

ஹோஸ்டஸ் பெண்கள் யாரையும் காணோம். ஏதோ இந்த விமானத்தில் கோளாறு. அதனால் எல்லாரும் பைலட்டுக்கு உதவி செய்யப் போயிருக்கிறார்கள். சக பயணிகள் எதுவுமே நடக்கவில்லை போல பேப்பர் படித்துக்கொண்டு சாந்தமாக இருப்பது வியப்பாக இருந்தது.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

# டைட்டானிக் நாயகிக்கு இரண்டாவது கணவரின் முதல் பரிசு



டைட்டானிக் நாயகியாக வந்த கேத் வின்ஸ்லட்டை அத்தனை சுலபத்தில் மறந்துவிட முடியாது. அவர் தனது இரண்டாவது திருமண பந்தத்திற்குள் புகுந்துள்ளமை புதிய செய்தி.

டைட்டானிக் திரைப்படத்தில் அந்த ஆசை ததும்பும் காமக் கண்களோடு காதலனை பார்த்துக் கணவனுக்குத் தெரியாமலேயே கண்களால் மொழி பேசிய அந்த நாயகியின் திருமண வாழ்வின் முதற் பகுதி பெரும்பாலும் டைட்டானிக் போலவே ஏமாற்றம்தான் என்கிறார்கள் கேத் வின்ஸ்லட்டின் நண்பிகள். முன்னதாக ஹொலிவூட் தயாரிப்பாளரான ஜிம் த்ரிபோல்டனை இரண்டு வருடங்களுக்கு முன்னர் மணம் முடித்த கேத் வின்ஸ்லட் அவர் மூலம் பெண் குழந்தை ஒன்றுக்கும் தாயாரானார். ஆனால் இவர்களது மண வாழ்வில் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. டைட்டானிக் நாயகிக்கு அவரது புதிய கணவரான அவரும் ஒரு இயக்குநர்தான். ஸேம் மெண்டேஸுடன் இரகசியத் தொடர்பு இருந்ததாகச் செய்திகள் வெளியாகியதும் பிரச்சினை வெடித்தது. தனது முன்னைய விவாகத்தின்போது தான் நல்ல முறையில் நடந்து கொண்டதாக கேத் வின்ஸ்லட் கூறுகிறார். இதற்கு நேர் எதிரான கருத்தை அவரது முன்னாள் கணவர் கூறுகிறார். எவ்வாறெனினும் கேத் வின்ஸ்லட்டுக்கு தன்னுடன் முன்னதாகவே இசகுபிசகான தொடர்பு எதுவும் இருக்கவில்லை என்று புதிய கணவரும் கூறி வருகிறார்.

இவர்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர்தான் திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் நாயகி நான்கு மாதங்கள் கர்ப்பமாக இருப்பதாகச் சொல்கிறார். என்ன இருந்தாலும் இவர் தனது



முதல் குழந்தைப் பேறு குறித்து ரொம்பவும் அலுத்துக்கொள்கிறார். "சிவந்த கன்னங்களும் சிலிம்மான உடம்பும் உற்சாகமுமாக இருக்கும் நான் வயிற்றில் சுமையோடு கன்னம் வீங்கிப்போய் நடக்கவும் முடியாமல் மூச்சு வாங்கிக் கொண்டு இருக்கும் கர்ப்ப காலம் வேண்டாம் என்று போகிறது" என்கிறார். அப்படியாயின் ஏன் இரண்டாவது குழந்தை என்று நிருபர் ஒருவர் கேட்டபோது "அது இரண்டாவது கணவனின் முதல் பரிசு" என்று சிரித்துக்கொண்டே சொல்கிறார் வின்ஸ்லட்.

# இது எல்லாம் தகவல் தொழில் நுட்பத்தின் புரட்சி என்பதா.....?

என்னதான் தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சி கண்டாலும் அதற்காக இப்படியுமா?

மொபைல் தொலைபேசியில் எஸ்.எம்.எஸ். தகவல் மூலம் விவாகரத்து செய்ய முடியும் என்று மலேசிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருக்கிறது.

இனிமேல் மலேசியாவில் மொபைல் போன் மூலமாகவே முஸ்லிம் இளைஞர்கள் விவாகரத்துச் செய்துகொள்ளலாம்.

இப்படி எஸ்.எம்.எஸ். முறையில் அனுப்பப்படும் தகவல் தெளிவானதாக, சந்தேகத்திற்கு இடமில்லாததாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று மலேசியப் பிரதமர் மஹதிர் மொஹமத்தின் ஆலோசகர் ஒருவரை மேற்கோள் காட்டி "தி நியு ஸ்ரெயிட் டைம்" நாளேடு சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் மொபைல் டெலிபோஃன் மூலம் ஒருவர் தனது மனைவியை விவாகரத்துச் செய்வதாகத் தகவல் அனுப்பினார். இது செல்லுபடியாகாது என வழக்குத் தொடரப்பட்ட போது குறிப்பிட்ட தகவல் தெளிவானதாக இருந்ததினால் அதை ஏற்றுக் கொள்ள முடியும் என்று நீதிமன்றம் கூறிவிட்டது.


இதற்கிடையில் சவுதி அரேபியாவில் திருமணம் செய்த மறு நிமிடமே தனது மனைவியை விவாகரத்துச் செய்திருக்கிறார் ஒருவர்.




சவுதி அரேபியாவைச் சேர்ந்த இந்த நபர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். திருமணம் முடிந்தவுடன் தம்பதியினரைப் புகைப்படம் எடுத்து அதனை நினைவுப் பரிசாக வைத்துக்கொள்ள விரும்பினார் மைத்துனர். இதனால் ஆத்திரமடைந்த இந்த நபர், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோடு நின்றுவிடாமல் மனைவியையும் விவாகரத்துச் செய்துவிட்டார். உலகிலேயே மிகக் குறைந்த அளவு நேரம் கணவன் மனைவியாக இருந்தவர்கள் அவர்களாகத்தான் இருக்க முடியும் என்று சவுதி அரேபிய செய்தித் தாள் ஒன்று எழுதியுள்ளது. ■

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?



உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது.
எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

## உள மருத்துவம்


### வெளியிட அச்ச நோய் (AGORAPHOBIA)

வனஜா 28 வயது பட்டதாரி ஆசிரியை. அண்மையில்தான் அவள் திருமணம் நடந்திருந்தது. பாடசாலைக்குத் தினமும் பஸ்ஸில் செல்வது அவளது வழக்கம். ஒரு நாள் பாடசாலைக்குச் செல்லுவதற்கு குறுகிய காலமே இருந்ததால் பஸ்ஸினைப் பிடிப்பதற்காகப் பாதையைக் கடக்கும்போது வேகமாய் வந்த வாகனம் ஒன்று இவளின் அருகே வந்து 'கிரீச்' என்ற சத்தத்துடன் 'பிரேக்' போட்டு நின்றது. ஒரு கணம் தான் வாகனத்தால் அடிபட இருக்கின்றாள் என்று நினைத்த போதிலும், அந்த நேரம் வனஜாவால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இந்தச் சம்பவம் காரணமாக ஏற்பட்ட பயத்தினால் அன்று பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியவில்லை. வீடு சென்று தனது மற்றைய கடமைகளை நிறைவேற்றிய அவர் இந்தச் சம்பவத்தை ஓரளவு மறந்து விட்டிருந்தார். அடுத்த நாள் பாடசாலை செல்வதற்குத் தயாரானார். வீட்டை விட்டு வெளியேறி பஸ்தரிப்பிடத்துக்கு வந்து பஸ்ஸிற்குக் காத்திருக்கும்போது இனந் தெரியாத ஒரு பயத்துக்கு உள்ளானார். வயிற்றுக்குள் பந்து ஒன்று உருளுவது போலவும் தொண்டைக்குள் ஏதோ ஒன்று இருந்து அடைப்பது போலவும் உணர்ந்தார். நெஞ்சு படபடப்பு ஏற்பட்டதுடன் வியர்வையால் அவர் நனைவதை உணர்ந்தார். தொடர்ந்தும் பஸ் தரிப்பிடத்தில் நிற்க முடியவில்லை. அவ் வழியே வந்த ஓட்டோ ஒன்றை நிறுத்தி வீடு திரும்பினார். வீடு அண்மிக்க அவரது பயம் குறைந்தது. மாலை வீடு திரும்பிய கணவருக்கு நடந்த விடயங்களைக் கூறி பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதை நினைத்து வருந்தினார். ஓய்வும் மனமாற்றமும் அவளுக்கு உதவும் என்று நினைத்ததால் இருவரும் திரைப் படம் ஒன்றுக்குச் செல்லத் தீர்மானித்தனர். புதிதாய் வெளியாகியிருந்த நகைச்சுவைத் திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதற்கு திரைப் பட மாளிகைக்குச் சென்றனர். இவர்கள் செல்லும்போதே திரையரங்கு இரசிகர்களால் நிரம்பியிருந்தது. ஆயினும் இருவர் அருகருகே இருக்கக் கூடியவாறு இரண்டு இருக்கைகளை திரைக்கூடத்தின் நடுவே கண்டுபிடிக்க முடிந்தது. திரைப்படமும் தொடங்கியது. வனஜாவுக்குச் சிறிது சிறிதாகப் பயமும் தொடங்கியது. ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தப்ப நினைப்பது போலவும் சனக் கூட்டத்தின் நடுவே மாட்டிக்கொண்டிருப்பது போலவும் உணர்ந்தார். தொடர்ந்தும் அவரால் திரைப்படத்தைப் பார்க்க முடியாதவாறு பயம் அதிகரித்தது. முதலில் இடைவேளை வரை சமாளிக்க நினைத்தபோதிலும் அவரால் முடியவில்லை. கணவனிடம் தனது பிரச்சினையைக் கூறி ஒருவாறாகத் திரைக்கூடத்துக்கு வெளியே வந்தபோதுதான் அவளுக்கு ஓரளவு நிம்மதி கிடைத்தது. வீடு திரும்பிய பின்னர் எந்த ஒரு மனக்கலக்கமோ பயமோ இன்றி நாளாந்த வேலைகளை அவளால் செய்ய முடிந்தது. ஒரு வாரத்துக்குப் பாடசாலைக்கு லீவு போட்டுவிட்டு ஓய்வெடுத்தால் எல்லாவற்றையும் மறக்க முடியும் என்று நினைத்தார். மூன்று நாட்கள் எந்த விதமான பிரச்சினையுமின்றி மகிழ்ச்சியுடன் நகர்ந்தன. வீட்டு வேலைகள், தொலைக் காட்சி பார்ப்பது, வானொலி கேட்பது என்று தனது பொழுதைக் கழிக்க முடிந்தது. மிகவும் சுறுசுறுப்பான வாழ்க்கை ஒன்றுக்குப் பழக்கப்பட்டுப்போயிருந்த வனஜாவுக்கு வீட்டினுள் தொடர்ந்து இருப்பது ஏதோ ஒரு மாதிரி இருந்தது. அடுத்த நாள் வெள்ளிக்கிழமையாக இருந்ததால் கோயிலுக்கும் அருகிலுள்ள பல்பொருள் அங்காடிக்கும் செல்லுவதற்குத் தீர்மானித்தாள். பூஜைக்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு கிளம்பியபோது நேரம் 10 மணியைக் கடந்திருந்தது. வீட்டை விட்டு இறங்கி அயலாரிடம் வீட்டைக் கவனிக்கச் சொல்லிவிட்டு கோவிலுக்கு செல்ல ஆரம்பித்தாள். வீட்டை விட்டுக் கொஞ்சத் தூரம்தான் அவள் சென்றிருந்தாள். அவளை வாட்டி வதைத்த பய உணர்வு மீண்டும் தோன்றியது. சிறிது சிறிதாக அதிகரிக்கவும் செய்தது. மீண்டும் ஒரு முறை முயற்சி தோல்வியுற்றதால் வீடு திரும்பினாள். அவள் ஏற்கெனவெ தீர்மானித்தபடி பல்பொருள் அங்காடிக்கும் அவளால் செல்ல முடியவில்லை. வீட்டு வேலைகள் முடிந்த பின்னர் அயலவர் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் கதைப்பது ஓரளவுக்கு அவளது பொழுதுபோக்காக மாறியிருந்தது. இப்படியே நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் காலை தனது வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தபோது அழைப்பு மணி கேட்டதனால் வெளியே விரைந்தாள். தபாற்காரன் பதிவுத் தபால் ஒன்றை ஏந்தியபடி நின்றிருந்தான். அந்தத் தபாலைப் பெற வீட்டுக்கு வெளியே படிகளில் இறங்கியபோது அவளால் முடியவில்லை. அண்மைக் காலமாக ஏற்பட்டிருந்த பய உணர்வு மீண்டும் தோன்றியது. அயலில் நின்றிருந்த ஒரு தம்பியிடம் பதிவுத் தபாலைப் பெற்றுக் தருமாறு கூறிவிட்டு வீட்டுக்குள் மீள நுழைந்தபோதே நிம்மதி கிடைத்தது. வீட்டுக்கு வெளியே செல்லுவதை நினைக்கும்போதே பயம் ஏற்பட ஆரம்பித்தது. வீட்டினுள் அடைந்து கிடப்பது மட்டுமே அவளுக்கு நிம்மதியைத் தந்தது. சுறுசுறுப்பாக நடமாடிக்கொண்டிருந்த வனஜா வீட்டினுள்ளே அடைந்திருப்பது அவளுக்கு மட்டுமல்ல, அவளை அறிந்திருந்த அனைவருக்குமே புதுமையாகவும் வருத்தமாகவும் இருந்தது. ஒரு வார கால விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தாலும் அவளால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. வீட்டுக்கு வெளியே படிகளில் இறங்க முடியாதுள்ளபோது பாடசாலைக்குச் செல்லுவது எவ்வளவு சாத்தியம். எங்கே போவதாயிருந்தாலும் அவளுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. இப்படியான நிலைமை தொடர்ந்ததால் உறவினர் ஒருவரின் ஆலோசனைப்படி அவர் உளமருத்துவத்துறையின் உதவியை நாடினார். வனஜா வெளியிட அச்ச நோயால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

(தொடர்ந்து வரும்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 11. 1947



ஆண்டவன் அடியில் 10 08. 2002

அமரர் திரு இராமலிங்கம் சிற்சபேசன்
முன்னாள் ஊழியர், தெல்லிப்பளை
பல நோக்கு கூட்டுறவு சங்கம்

பாசத்தின் இருப்பிடமே! பண்பின் உறைவிடமே! அப்பா! நீங்கள் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்று ஆண்டொன்று ஆனாலும் இரு விழி சிந்திய நீர்த்துளிகள் இன்னும் காயவில்லை. மாண்டவர்கள் மீண்டதில்லை என்று உணர்ந்த பின்பும் ஏங்குகின்றோம். அப்பா! மாறாது மாறாது உங்கள் அன்பு முகம் என்றும் எங்களை விட்டு அகலாது.

*மனைவி, மக்கள், மருமக்கள், பேரன், மாமன், மாமி, மைத்துனர், மைத்துனி.*


# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்க்ள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.27க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. தேவராஜன் ஆனந்தகுமரன் ஹேகித்த, வத்தளை.
2. ம.குருச்சந்திரன், சிவன் வீதி, திருகோணமலை.
3. தா.சொர்ணம், வங்களாவடி வீதி, வேலணை.
4. திருமதி.எம்.சுந்தரேசன், நர்சிங் ஹோம் வீதி, ஹட்டன்.
5. இ.நிஷாந்தினி, வாசல வீதி, கொழும்பு - 13.
6. ரி.அமுதா, கில்லர்னி, பொகவந்தலாவ.
7. செல்வி.நிஸாதா நவாஹிர், எருக்கலம்பிட்டி, மன்னார்.
8. சுமையா மொஹமட், தண்ணீர்த் தாங்கி வீதி, திக்வெல.
9. வே.கந்தசாமி, பட்டியடிச்சேனை, கல்குடா.
10. ஜெ.ஜெயந்தினி, திருக்கடலூர், திருகோணமலை.

## குறுக்கெழத்துப் போட்டி 29

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | 7 |
| 8 | 9 | 10 | 11 | ■ |
| 12 | 13 | 14 | ■ | 15 |
| 16 | 17 | ■ | ■ | 18 |
| ■ | 19 | 20 | 21 | 22 |

**இடமிருந்து வலம்**

1. வில் வித்தையின் குரு
7. நெருப்பு
8. இந்திய உப பிரதமர் (குழம்பியுள்ளது)
12. இது கடலின் அடியிலிருந்து கிடைப்பது. ஒலி தரும்
16. கோரை வகையைச் சேர்ந்தது. பாய் செய்யலாம். (திரும்பியுள்ளது)
19. இதிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்று விஞ்ஞானம் சொல்கிறது. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. துஷ்யந்தனையும், சகுந்தலையையும் தன் சாபத்தால் பிரித்துவைத்த முனிவர்.
3. பெண் (குழம்பியுள்ளது)
9. ஒரு மாதம் (குழம்பியுள்ளது)
15. பனங்காயை இப்படி அழைப்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி 27 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| க 1 | ங் 2 | கா 3 | ரு 4 | ■ |
| ரு 5 | ■ | கை 6 | ■ | ள் 7 |
| மா 8 | ன் 9 | ரி 10 | வ 11 | க 12 |
| ன் 13 | ■ | ■ | ளி 14 | ■ |
| ■ | ■ | போ 15 | ■ | மா 16 |
| ஆ 17 | த் 18 | தி 19 | ஞ 20 | டி 21 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 06.07.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-29**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


## ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

### வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792


Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 594727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

03

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-08-2003

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**வவுனியா வாசகிக்கு அதிர்ஷ்டம்!**

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

பா. யோகானந்தி
வினோஷன் A.P.O. கூமாங்குளம், வவுனியா

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# மாற்றுத் தீர்வின் மர்மம் என்ன?

புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பிய இடைக்கால நிர்வாக யோசனை விபரங்கள் வெளியானால் இப்படி ஒரு சங்கடத்தில் சிக்க வேண்டி வரும் என்று அரசாங்கம் எதிர்பார்த்திருக்காது.


புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்குவது குறித்த உறுதிமொழியை அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்திலேயே வழங்கி இருந்தது. பின்னர் அது குறித்துப் பல தடவை பேச்சுக்கள் நடத்தப்பட்டு தற்போதைய நிலையில் அப்படியொரு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதில் அரசும் புலிகளும் கருத்தொருமிப்புக்கு வந்தனர். சில நாட்கள் இந்தச் சபை குறித்த பேச்சுக்கள் சமாதான அரங்கிலிருந்து ஓரங்கட்டப்பட்டு மறக்கப்பட்டிருந்தன. ஆனால் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தியதன் பின்னர் மீண்டும் தமது பழைய கோரிக்கையைக் கையில் எடுத்ததோடு அத்தகையதொரு இடைக்கால நிர்வாக சபை எவ்வாறான வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் கடுமையான நிலைப்பாட்டையும் எடுத்திருந்தனர்.

அரசாங்கம் ஜனாதிபதி, முஸ்லிம் காங்கிரஸ், புலிகள் என்று முத்தரப்பு சமாளிப்பை மனதில் கொண்டு தயாரித்து, புலிகளுக்கு வழங்கிய முன்னைய இரண்டு யோசனைகளும் நிராகரிக்கப்பட்ட நிலையில், மூன்றாவதாக அனுப்பிய யோசனை ஏராளமான சிக்கல்களுக்குள் மாட்டித் தவிக்கிறது. இப்போது உண்மையில் புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பிய யோசனையின் உள்ளம்சம் தொடர்பாகவே பல நிலைக் குழப்பங்கள்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாக யோசனை ஒன்று குறித்த ஆவணம் அனுப்பப்படவிருப்பதாகச் சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த யோசனையின் விபரங்களை வெளியிட முடியாது என்றும் அவ்வாறு வெளியிட்டால் அது பல்வேறு சர்ச்சைகளுக்கும் வழி வகுக்கக் கூடும் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் அரசாங்கம் புலிகளுக்கு அனுப்பியதாகக் கூறப்படும் ஒரு ஆவணத்தின் விபரங்களை 'சண்டே டைம்ஸ்' செய்தித்தாள் கடந்த 20ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டது. இந்த விபரம் வெளியானதோடு அரசாங்கமே எதிர்பார்க்காத புதிய குழப்பங்கள் எழுந்தன. ஜனாதிபதிக்கு ஒரு யோசனையும் புலிகளுக்கு வேறொரு யோசனையும் அனுப்பி ஜனாதிபதியைத் தவறான வழியில் இட்டுச் சென்றதாக பொ.ஐ.மு. அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டியது.

'சண்டே டைம்ஸ்' வெளியிட்ட ஆவணத்தில் புலிகளுக்கு வழங்கப்படப்போகும் இடைக்கால நிர்வாக அமைப்பில் காணி, இறைவரி, பாதுகாப்பு மற்றும் பொலிஸ் துறைகள் உள்ளடக்கப்பட மாட்டாது என்று



தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் புலிகளுக்கு அனுப்பிய யோசனை என்று கூறி ஜனாதிபதிக்கு அரசாங்கம் கொடுத்த ஆவணத்தில் இந்த நான்கு துறைகளும் இடைக்கால நிர்வாகத்தின் கீழ் புலிகளின் கைகளுக்கே வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

இப்போது 'சண்டே டைம்ஸ்' செய்தித்தாள் வெளியிட்ட ஆவணத்தை ஒத்த அதாவது காணி, இறைவரி, பாதுகாப்பு, பொலிஸ் துறைகள் உள்ளடக்கப்படாத ஒரு நிர்வாக அமைப்பு பற்றியே தாங்கள் புலிகளுக்குப் பிரேரித்ததாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருங்கிய வட்டாரங்களில் கூறி வருகிறார்.

முதலில் அரசாங்கம் ஒரு ஆவணத்தைப் புலிகளுக்கு அனுப்பியது. பின்னர் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்போர்க் அந்த யோசனைகளைத் திருத்தி அமைத்திருக்கிறார். இந்தத் திருத்தத்தின் போது மேற்சொன்ன நான்கு துறைகளையும் புலிகளுக்கு வழங்க அரசாங்கம் உடன்பட்டதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு வெஸ்போர்க்கின் ஆலோசனையுடன் திருத்தப்பட்ட ஆவணத்தின் பிரதிதான் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்போது 'சண்டே டைம்ஸ்' வெளியிட்ட ஆவணத்தின் அதிகாரங்களையே புலிகளுக்கு வழங்க தாம் ஒப்புக்கொண்டதாக பிரதமர் கூறி வருவது புதிய குழப்பம். அதாவது புலிகளுக்கு இந்த நான்கு துறை சார் அதிகாரங்களையும் வழங்க முதலில் வெஸ்போர்க் மூலம் உடன்பாடு தெரித்துவிட்டு பின்னர் "இல்லை, இல்லை. 'சண்டே டைம்ஸ்' வெளியிட்டது போன்ற ஒன்றைத்தான் புலிகளுக்கு வழங்க இருந்தோம்" என்று கூறுவது ஆசை காட்டி மோசம் செய்வது போன்ற செயலாகத்தான் தெரிகிறது.

எவ்வாறெனினும் இந்தப் பிரச்சினைக்கு உறுதியானதோர் தீர்வைச் சொல்ல பிரதமரால்தான் முடியும். ஜனாதிபதிக்கு அனுப்பியது

> **ஜனாதிபதிக்கு அரசாங்கம் கொடுத்த ஆவணத்தில் இந்த நான்கு துறைகளும் இடைக் கால நிர்வாகத்தின் கீழ் புலிகளின் கைகளுக்கே வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது.**

என்ன? புலிகளுக்கு முதலில் அனுப்பியது என்ன? வெஸ்போர்க் எதையெல்லாம் திருத்தினார். அவற்றை வழங்க அரசு ஒப்புக்கொண்டதா? அப்படியாயின் இப்போது பிரதமர் கூறும் 'சண்டே டைம்ஸ்' ஆவணத்தின் உண்மைக் கதை என்ன? இதற்கெல்லாம் விடை சொல்ல பிரதமரால் மட்டுமே முடியும்.

இவை ஒருபுறமிருக்க இந்த யோசனையைப் புலிகள் ஏற்பார்களா? அப்படி ஏற்றாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், குறிப்பாக முஸ்லிம்கள் தொடர்பில் இன்னமும் தெளிவான முடிவுகள் எடுக்கப்படாத புறச் சூழலில் இந்த இடைக்கால யோசனையினதும் கதி என்ன என்பதை ஊகிக்க முடியாமல்தான் இருக்கிறது. தெளிவாக இருக்கும் ஒரே விடயம் இதில் ஏகப்பட்ட குழப்பங்கள் உண்டு என்பதுதான். □

---

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

## 23 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

### தந்தை செல்வாவின் கவலை

தமிழரசுக் கட்சி முன்வைத்த எல்லாத் திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டபோதும் பதினோராவது தீர்மானம் குறித்தே தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மத்தியில் கவலை இருந்தது. நாட்டின் அனைத்துச் சட்டங்களும் சிங்கள மொழியில் ஆக்கப்பட்டு அதனுடன் தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்படுமென அத் தீர்மானம் தெரிவித்தது. இதற்கு பண்டிதர் கா.பொ. இரத்தினம் ஒரு திருத்தத்தை முன்வைத்து இருந்தார். இதில் சிங்களமும் தமிழும் சட்டம் இயற்றும் மொழிகளாக இருக்க வேண்டுமெனவும், உத்தியோகபூர்வ மொழிகளிலும் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து மொழிகளிலும் இணைப்பு அனைத்துச் சட்டங்களுக்கும் சேர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். ஜெயக்கொடி முன்வைத்த திருத்தத்தில் பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் அம்சங்கள் சேர்க்கப்படுவதாக இருந்தால் விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். நான்கு நாட்கள் நீடித்த விவாதத்திற்குப் பின்னர் திருத்தங்கள் தோல்வி கண்டன. திருத்தத்திற்கு 87 உறுப்பினர்கள் எதிராகவும், 13 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 57 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதனையடுத்து அரசியலமைப்புச் சபையின் விவாதங்களைப் புறக்கணிக்கப் போவதாக சா.ஜே.வே. செல்வநாயகம் அறிவித்தார்.

இத் தருணத்தில் திரு. செல்வநாயகம் கூறுகையில் "அரசியலமைப்பின் தன்மை, குடியுரிமை உட்பட்ட பல்வேறு அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக இப்போது வரையறை செய்யப்படுவது அவசியம். நாங்கள் முன்வைத்த அனைத்துத் திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் பிரதமரை நேரில் சந்தித்து சமரசத் தீர்வுகளைக் காண விரும்புகிறோம். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் இவற்றுக்கு தீர்வு காண முடியாது. மாறாக பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் விட்டுக்கொடுப்புகளின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். பிரதமருடனான எமது சந்திப்புகளின் போது அரசியலமைப்பு விவகார அமைச்சரோ மற்ற முக்கிய அமைச்சர்களோ கலந்துகொள்ளவில்லை. ஆகக் குறைந்தபட்ச உரிமைகளுக்காவது அரசியலமைப்பு மூலம் உத்தரவாதமளிக்கப்பட வேண்டுமெனப் பிரதமருக்கும் அரசியலமைப்பு விவகார அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்தோம். எமது கருத்துக்கள் உன்னிப்பாகச் செவிமடுக்கப்பட்டன. சுமுகமான கலந்துரையாடல்களாகத் தொடர்ந்தன. இதனால் எமது கருத்துக்கள் தீவிரமான கவனத்தைப் பெறுமென நாம் நம்பிக்கொண்டிருந்தோம். ஆனால்



அடிப்படைத் தீர்மானங்களில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படாதது கண்டு கவலை கொள்கிறோம். இதனால் அரசியலமைப்பின் மூலம் எமது மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்னும் கவலை தரும் முடிவுக்கு நாம் வர வேண்டியதாகியுள்ளது. அரசியலமைப்புச் சபையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதால் ஆக்கபூர்வமான பயன் எதுவும் கிடைக்குமென எண்ண முடியவில்லை. இந்தத் தீர்மானத்தை எடுப்பதன் மூலம் எவரையும் எதிர்ப்பதாக எண்ண வேண்டாம். மாறாக எமது மக்களின் தன்மானத்தைக் காக்க முற்படுகின்றோம் என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும்" என்றார்.

### சமஷ்டியிலிருந்து பிரிவினைக்கு.

அரசியல் நிர்ணய சபையின் அமர்வுகளைப் புறக்கணிப்பதாகத் தமிழரசுக் கட்சி எடுத்த முடிவுடன் ஒத்துப்போகா யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான சி.எக்ஸ்.மார்ட்டின் மறுத்தார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சோசலிசக் கொள்கைகள் அமுல்படுத்தப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்பது அவரது கருத்தாக இருந்தது. அத்துடன் தமிழரசுக் கட்சியின் தலைமை தீவிரவாத இளைஞர்களின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து போவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். இந்த நிலையில் சி.எக்ஸ்.மார்ட்டின் அவர்களைக் கட்சியிலிருந்து ஏன் விலக்கக் கூடாது என்று விளக்கும்படி கேட்டு செல்வநாயகம் அவர்கள் ஒரு கடிதம் அனுப்பினார். இதற்குப் பதிலளித்த மார்ட்டின் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கும் சட்டங்கள் தேசிய அரசுப் பேரவையில் முன்வைக்கப்படுமென்ற வாக்குறுதியை பிரதமர் தமக்கு வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் இந்தக் கருத்தில் தான் தனிமைப்பட்டிருக்கவில்லை எனவும் ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் நிர்ணய சபையில் தமது பங்களிப்பைத் தொடர வேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் மார்ட்டினுக்கு எழுதிய இரண்டாவது கடிதத்தில் மேலே குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் செல்வநாயகம் விபரமாக விளக்கினார். "ஒரு தடவை அடிபடலாம். ஆனால் இரண்டாவது தடவையாகவும் அடி வாங்க நேருவது அவமானகரமானது. அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க மற்றும் பின்னர் பிரதமராக வந்த டட்லி சேனநாயக்க ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட இரு ஆவணங்கள் என்னிடம் உண்டு. அவற்றில் வழங்கப்பட்டிருக்கும் உறுதிமொழிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. 1960ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி எண்ணிறைந்த வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக் கவிழ்ப்புக்கு எமது உதவியைப் பெற்றது. ஆனால் பதவிக்கு வந்ததும் சுதந்திரக் கட்சி வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டது. 1962ல் பாராளுமன்றத்தில் நடந்த விவாதமொன்றில் இவை அனைத்தையும் நான் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

(தொடர்ந்து வரும்....)

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

# விபத்து

**இளையவன்**

"இந்தச் சாவு விபத்தில்லை கொலை... கொலை...படுகொலை.. பட்டப்பகலில் நடுவீதியில் அநியாயமாக நடந்த கோரக்கொலை....இதை விபத்து எண்டு சொல்லிக் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப்போட நானொண்டும் பைத்தியக்காரனில்லை."

சபாரத்தினத்தின் குரல் உரத்து ஒலித்தது. வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணைப் பிரிவின் சுவர்களில் பட்டு எதிரொலித்தது. சட்ட வைத்திய அதிகாரியும், கூட இருந்த வைத்தியசாலை ஊழியர்களும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து முழித்தனர். கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்த சபாரத்தினத்தின் முன்னால் அவரது மூத்த மகன் செண்பகராசன் உயிரற்றுக் கிடந்தான். சடலத்தை அழகுபடுத்தும் மலர்ச்சாலை ஊழியர்கள் சிலர் கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தனர். சட்ட வைத்தியரும், மரண விசாரணை அதிகாரியும் முகத்தில் கவலை தேங்க நின்றிருந்ததைக் கண்டு அவர்கள் மௌனமாகினர். சடலத்தை இனிமேலாவது தூக்கிச் செல்லலாமோவென விழிகளால் வினாத் தொடுத்தனர்.

மரணவிசாரணை அதிகாரி சட்ட மருத்துவரை உற்று நோக்கினார். சட்ட மருத்துவர் சடலத்தின் மீது கையை வைத்தார்.

"இது சுவாசப்பை....இந்த எலும்பு முறிந்து இதயத்தைத் தாக்கியுள்ளது. திடீர் மரணத்திற்கு காரணம் இதுதான். வேகமாக வந்த பாரமான வாகனத்தில் பலமாக மோதியதால் நெஞ்சக் கூட்டின் எலும்பு முறிந்து போயுள்ளது. இவ் எலும்பு முறிவுதான் மரணத்திற்குக் காரணமானபோதும் மேலும் பல எலும்பு முறிவுகளும் உள்ளன. உரசல் காயங்களும் இருக்கிறது. இங்க முகம் முதல் கை, கால் உட்பட உடம்பெங்கும் பல உரசல் காயங்கள்.... பார்க்கிறீங்களோ..... இதெல்லாம் உரஞ்சுப்பட்ட காயங்கள்.... இதுகளப் பார்க்கிறப்போ விபத்தில்தான் இந்த மரணம் நடந்திருக்க வேணும்."

வைத்தியர் நிதானமாக வார்த்தைகளை எடுத்து அடுக்கினார். சபாரத்தினம் எந்தப் பதிலும் கூறாமல் தேம்பித் தேம்பி அழுதார்.

"ஐயா...இது விபத்தில்லை.... கொலை எண்டு நீங்கள் சந்தேகப்பட்டால்... ஆரில சந்தேகப்படுறியள்.... எப்படி இந்தக் கொலை நடந்திருக்கலாம் எண்டு நினைக்கிறியள்.... எண்டதுகளைச் சொல்ல வேணும். அப்பத்தான் விசாரணையைத் தொடரலாம். இல்லாட்டி விசாரணையை இடைநிறுத்திப்போட்டு சவ அடக்கத்திற்கு ஏற்பாடு செய்ய வேணும். இப்ப என்ன செய்யிறது. சொல்லுங்கோ, எங்களுக்கு நேரம் போகுது."

மரண விசாரணை அதிகாரி அவசரப்படுத்தினார். இந்த வேளையில் செண்பகராசனின் தம்பி அன்பரசன் அவ் இடத்திற்கு வந்து சேர்ந்தான். எல்லோரது பார்வையும் அவன் மீது



படர்ந்தது. மலர்ச்சாலையின் ஊழியர்கள் அன்பரசனை பார்வையாலேயே துழாவி உத்தரவு போட்டனர்.

"தம்பி இது விபத்தல்ல...கொலை எண்டு அப்பா சொல்லுறார். அதால மரண விசாரணையை முடித்து சடலத்தை அனுப்ப இயலாமல் இருக்கு...." வைத்தியர் மெல்லிய குரலில் இழுத்தார்.

கவலை தேங்கிய நெஞ்சத்துடனும், கண்ணீர் மல்கிய விழிகளோடும் அன்பரசன் பேசத் தொடங்கினான்.

"இதோ சடலமாய் கிடக்கும் செண்பகராசன் எனது மூத்த சகோதரர். வயது 32. இன்னமும் திருமணமாகாதவர். எனினும் இவருக்கு காதலி ஒருவர் இருக்கிறார். அவரது குடும்பத்தினர் மூலமாக எனது சகோதரருக்கு இனிப்பு வகைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்தில் சந்தைப்படுத்தும் அலுவலுகராக வேலைவாய்ப்புக் கிடைத்திருந்தது....."

"உங்கள் குடும்ப விவகாரங்கள் இங்கு தேவையற்றது. எனினும் இவரது மரணத்துடன் தொடர்புபடக் கூடிய விடயங்களாக மட்டும் சொல்லலாம். இவரது மரணத்தின் பின்னணியில் ஏதேனும் சதி இருக்கலாம் என்று சந்தேகப்படுகிறீர்களா?"

மரண விசாரணை அதிகாரி கேள்வி எழுப்பினார்.

"சம்பவ தினமான நேற்றுக் காலையில் எனது சகோதரர் தனது மோட்டார் சைக்கிளில் தனது கம்பெனி அலுவலகம் நோக்கிப் புறப்பட்டார்."

"என்ன ரக மோட்டார் சைக்கிள்? வாகனத் தொடரிலக்கம் என்ன?"

"ஹீரோ ஹொண்டா ரகம். 78-9099 இலக்கமுடையது. விபத்தில் சிக்கி உருக்குலைந்து போயிருக்கும் மோட்டார் சைக்கிள் அதுதான்."

குறிப்புப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கூறினார்.

"பிரதான வீதியில் கண்டயினர் வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்தேன். திடீரென ஏதோவொரு சத்தம் கேட்டது. வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி ஓடிப்போய் பார்த்தபோது மோட்டார் சைக்கிள் உருண்டோடிக் கொண்டிருந்தது. இவரது மேலுடுப்பு ஒன்று கண்டயினர் கொழுக்கியில் தொங்கிக் கிடந்தது. பின் பக்கச் சில்லுக்கு முன்பாக வாகனத்திற்குக் கீழே முனகல் சத்தம் கேட்டது. எனது கிளீனரின் உதவியுடன் வாகனத்திற்கு கீழ் கிடந்த இவரைத் தூக்கி வெளியில் கொண்டு வந்தேன். அப்போது அவருக்கு உணர்வு ஏதும் இருந்ததாக எனக்கு நினைவில்லை. தேகம் முழுவதும் இரத்தக் காயங்கள் இருந்தன. உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். அதனிடையில் ஸ்தலத்திற்கு பொலிஸார் விரைந்து வந்துவிட்டனர்." கண்டயினர் வாகனத்தின் சாரதி கூறி நிறுத்தினார்.

"நேற்றுக் காலையில் பிரதான வீதி வழியாக கண்டயினர் வாகனம் வந்துகொண்டிருந்தது. அவ் வாகனத்தை வலப்பறமாக முந்திச் செல்ல மோட்டார் சைக்கிளில் வந்தவர் முயன்றிருக்கிறார். அப்போது எதிர்ப்புறமாக வாகனங்கள் வந்து கொண்டிருந்ததால் கண்டயினர் வாகனத்திற்கு சமாந்தரமாக சமீபமாக நெருங்கிச் சென்றிருக்கிறார். அவ்வேளையில் மோட்டார் சைக்கிள் வாகன மோட்டி அணிந்திருந்த மேல் சட்டை கண்டயினரின் கொழுக்கியில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். அது மோட்டார் சைக்கிளோட்டி நிதானம் இழக்கக் காரணமாயிருக்கலாம். இதனாலேயே விபத்து நேரிட்டிருக்கலாம்." பொலிஸ் கான்ஸ்டபிளின் வாக்கு மூலம் வெளிப்பட்டது.

"சந்தர்ப்ப சூழ் நிலைகளைப் பார்க்கும்போது விபத்து என்றே தீர்ப்பளிக்கத் தோன்றுகிறது." மரண விசாரணை அதிகாரி கூறிவிட்டு நிமிர்ந்து சபாரத்தினத்தை உற்று நோக்கினார். "இல்லையில்லை....இது கொலை... பட்டப் பகலில் நடந்த படுகொலை....." உரத்த குரலில் சத்தமிட்ட சபாரத்தினம் மேலும் தொடர்ந்தார்.

"விற்பனை அலுவலர் வேலை கிடைச்சிட்டுது. எல்லா ஊர்களுக்கும் போய் வர வேணும். அதுக்காக எனக்கு மோட்டார் சைக்கிள் தேவை. எனவே அதற்குப் பணம் வேண்டும் என்று செண்பகராசன் அறிவித்ததும் உடனடியாக ஊரில் எனக்கிருந்த வயல் நிலத்தை விற்றுவிட்டு எழுபத்தையாயிரம் ரூபா அனுப்பி வைத்தேன். இரண்டு மாதங்களுக்கு உள்ளேயே இப்படி நேரும் என்று நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை." தேம்பித் தேம்பி அழுதார்.

"இங்க கிடப்பது எனது மகனின் சடலம் மட்டுமல்ல. இந்த நாட்டில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியாத அப்பாவி மக்களின் ஆன்மா." வெண்கலக் குரலில் அவரது கூற்று எதிரொலித்தது.

"கட்டுப்பாடில்லாத வாகன இறக்குமதி.... குண்டும் குழியுமாகக் கிடக்கும் வீதிகளைத் திருத்தாத அசமந்தப் போக்குகள்....வீணான ஆடம்பரத்தை விரும்பும் அகம்பாவம்.... இவைதான் எனது மகன் செண்பகத்தைக் கொலை செய்த கொலைகாரர்கள். இந்தக் கொலைகாரர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க முடியுமா உங்களுக்கு?"

"செத்தவன் செத்துப் போனான். எப்பிடிச் செத்தான் எண்டு ஆராய்ச்சி பண்ணி என்னத்தைக் கிழிக்கப் போறியள். விபத்து எண்டு எழுதினால் இன்ஸ்யூரன்ஸ் கிடைக்கலாம். கொலை எண்டு எழுதினால் விசாரணை முடியாது."

"ஆடம்பரத்தை நாடிச் சென்ற அகம்பாவத்தின் தற்கொலை எண்டு கூட எழுதலாம். ஊரில இருந்த நிலத்தை உழுதுகொண்டிருந்தால் உயிரும் மிஞ்சியிருக்கலாம். நான் இப்ப என்ன செய்ய? பிள்ளையும் இல்லை! சொத்தும் இல்லை."

தலையிலும் மார்பிலும் இரு கைகளாலும் மாறி மாறி அடித்தபடி அவர் புலம்பிக்கொண்டிருந்தார்.

மரண விசாரணை அதிகாரி அன்பரசனைப் பார்த்தார்.

"இங்க தாருங்கோ" என்று கையை நீட்டி அவர் வைத்திருந்த கடதாசிக் கட்டுக்களை வாங்கிய அன்பரசன் காட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டான்.

சடலத்தைக் தூக்கிக் கொண்டு மலர்ச்சாலை ஊழியர்கள் அப்பால் நகர்ந்தனர்.

"என்ன நடந்தது? என்ன தீர்ப்புக் கூறியிருக்கிறார்?"

சபாரத்தினம் தொடர்ந்து கேள்வி எழுப்பினார்.

"அப்பா வாங்கோ போவம். நடந்தது நடந்து போச்சு. என்ன தீர்ப்பை எப்படி எழுதினால் என்ன? போன உயிர் திரும்பி வரவா போகுது?" அன்பரசன் தந்தையை அரவணைத்தபடி வைத்தியசாலையின் சவச்சாலையிலிருந்து வெளியேறினான்.

## இவ்வார சிறு கதைகள்

# எதிர்பாராதது?

**பாலா.சங்குபிள்ளை, கொழும்பு.**

கண்மணி அந்த நள்ளிரவு வேளையில் தோல் பையைச் சுமந்தவாறு புகையிரத நிலையம் நோக்கி நடந்தாள். கொழும்பில் செமினார் ஒன்றிருப்பதாகவும் லயத்திலிருந்து இரவு புகையிரதத்தில் போவது கஷ்டம் என்பதால் டவுனில் உள்ள தன் சகதோழியின் வீட்டில் தங்கி செல்வதாக ஏற்கெனவே வீட்டில் சொல்லி விட்டாள். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

ஆனால் அவள் தன் அன்புக் காதலன் அருணாசலத்துடன் கொழும்புக்கு ஓடப் போகிறாளென்பது பாவம் அவர்களுக்குத் தெரியாது. கண்மணி ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்கிறாள். அருணாசலம் டவுணில் சிங்கர் தையல் இயந்திரக் கடையில் முகாமையாளனாக இருக்கிறான். இருவரும் ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் வெவ்வேறு சாதி. இருவரும் ஒன்றாகவே பஸ்ஸில் பயணம் செய்வார்கள். ஆரம்பத்தில் புன்னகை, அப்புறம் நலம் விசாரிப்பெனத் தொடர்ந்த நட்பு அப்புறம் காதலாக மாறியது. ஆனால் சாதி இருவரின் காதலுக்கும் தடையாக நின்றது. இந்தக் காதல் விஷயம் வெளியே தெரிந்தால் நிச்சயமாக இரண்டு குடும்பத்திற்குமிடையில் வெட்டுக் குத்துதான். அதிலும் அருணாசலத்தின் தந்தை, இந்த சாதி விடயத்தில் மிகவும் கண்டிப்பானவர்.

கண்மணி வீட்டில் அவளுக்குப் பிறகு இரண்டு தங்கைமார்கள் இருந்தார்கள். தந்தையும் தாயும் தோட்டத்தில் வேலை. ஒரே அண்ணன் ஆனந்தன் நுவரெலியாவில் தொழில் செய்கின்றான்.

தீவிரமாக சிந்தித்து இருவருமே ஒரு முடிவுக்கு வந்தார்கள். கொழும்புக்கு ரயிலேறிவிடுவது. அங்கே அருணாசலத்துக்குத் தெரிந்த நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களின் மூலம் இருக்க இடமும் ஒரு வேலையும் தேடிக்கொள்ள முடியும்.

கண்மணி வேகமாக நடந்தாள். அநேகமாக அருணாசலம் அவளுக்காக புகையிரத நிலையத்தில் காத்திருப்பான். அவள் வேகமாக அடியெடுத்து வைத்தாள். இலேசாக மழை தூறியது. அப்போது தூரத்தில் யாரோ இரண்டு பேர் வேகமாக நடந்து வருவதைப் போல இருந்தது.



இருட்டில் சரியாக அடையாளம் தெரியவில்லை. அருகில் வரவர அடையாளம் தெரிய கண்மணி திக்குமுக்காடிப் போனாள். அது வேறுயாருமல்ல. அவள் அண்ணன் ஆனந்தனும் யாரோ ஒரு பெண்ணும்.

"கண்மணி இந்த நேரத்துல நீ எப்படி இங்கே....?"

"கொ....கொழும்புல செமினார்...."

"ஒரு வகையில உன்னைக் கண்டதும் நல்லதாப் போயிடுச்சி.... இது யாரு தெரியுதா...நம்ம பக்கத்து லயத்துல இருக்கானே அருணாசலம், அவனோட தங்கச்சி வனிதா. நுவரெலியாவுலதான் படிக்குது. எனக்கும் இவளுக்கும் எப்படியோ தொடர்பு உண்டாகிடுச்சி. இருவரும் திருமணம் முடிக்கிறதா முடிவு பண்ணிட்டோம். இதுக்கு மேலயும் அங்கேயிருந்தா பிரச்சினை. அதுதான் கொழும்புக்குப் போறதுக்காக பஸ்ல வந்து இறங்கினோம். ட்ரெயின் ரெண்டவர் லேட்டாம். இங்கே எனக்கு தெரிஞ்ச நண்பனொருத்தன் இருக்கான். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு போகலாமுன்னு வந்தா நீயும் வந்துட்டே. கண்மணி இந்த விஷயத்தை இப்போதைக்கு வீட்டுக்கு சொல்லிடாதே. கொஞ்ச நாளைக்கு என்னாலை வீட்டுக்குக் காசு அனுப்ப முடியாது. நீதான் சமாளிக்கணும். கொழும்புல வேலை தேடிக்கிட்டு அப்புறமா வீட்டுக்கு வாரேன். அருணாசலத்துக்கோ அவங்க அப்பாவுக்கோ இந்த விஷயம் தெரிஞ்சா இவளை வெட்டிப் போட்டுடுவாங்க...சரி நீயும் வா... இங்கே தங்கிட்டு சேர்ந்தே கொழும்பு போகலாம்....

"இல்லண்ணா! இந்த நிலமையில நானும் கொழும்புக்கு வாரது நல்லாயிருக்காது. அங்கே ஏதாவது பிரச்சினை வந்தா அப்பா அம்மா எப்படி சமாளிப்பாங்க.... அதுனால நீங்க போங்க. நான் நண்பி வீட்டிலேயே தங்கிட்டு காலையில லயத்துக்குப் போயிடுறேன்...."

கண்மணி கனத்த இதயத்துடன் தோழியின் வீட்டை நோக்கி நடந்தாள். அவள் ஒன்று நினைக்க வேறொன்று நடந்துவிட்டது. தான் போனாலும் அண்ணன் குடும்பத்தைக் கவனிப்பானென்று நினைத்தாள். ஆனால் அண்ணன் அவள் காதல் வாழ்க்கையையே ஆட்டம் காண வைத்துவிட்டானே. ஊமை கண்ட கனவைப் போல அவளால் இந்த விஷயத்தை வைத்துக்கொள்ளவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் சிலையாக இருப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?"


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

### எந்தையும் தாயும்

**வி**.எஸ்.காண்டேகரின் 'கிரௌஞ்ச வத'த்தை விஷ்ணு சகஸ்நாமம் போல் பாராயணம் பண்ணியவன் நான். காண்டேகரைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தியதற்காக கா.ஸ்ரீ.ஸ்ரீக்கு ஒரு கோயிலே கட்டலாம்.

'கரித்துண்டு' போன்ற அற்புத



நவீனங்களை எழுதிய டாக்டர்.மு.வரதராசனார் அவர்கள் இந்த காண்டேகரைச் சந்திப்பதற்காகக் கோலாப்பூர் வரை போனார். பேரறிஞர் அண்ணா கூடி காண்டேகரை சிலாகித்து எத்தனை சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார்.

இப்படிக் கதைப் பித்தும், ஓவியப் பித்தும் என்னை ஆட்டிப் படைத்த இளம் பிராயத்திலே, நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினேன். அதன் பெயர் 'நேதாஜி' நேதாஜியின் இந்திய தேசிய இராணுவம் இளைஞர்களை ஈர்த்திருந்த காலமது.

இலக்கிய ஆர்வலர்களாக விளங்கிய ஸ்ரீரங்கத்து இளைஞர்களின் விஷயதானங்களைத் தாங்கி வந்த இந்தப் பத்திரிகையில், நான் ஏராளமான படங்களைப் பக்கத்திற்குப் பக்கம் வரைந்து தள்ளினேன்.

முதல் வந்த பிரதி தயாரானவுடன் அதை வெளியிடுவதற்கு ஒரு முக்கிய பிரமுகரைத் தேடி அலைந்துகொண்டிருந்தபோதுதான், ஸ்ரீரங்கத்திற்கு சின்ன அண்ணாமலையும் கல்கியும் வந்து சேர்ந்தார்கள்.

திருச்சி அர்ச்.சூசையப்பா கல்லூரியில் பேராசிரியராக இருந்த கோபால அய்யங்கார் என்பவர் ஸ்ரீரங்கத்தில் 'ராஜாஜி கல்ச்சுரல் அசோசியேஷன்' எனும் ஓர் அமைப்பை நடத்தி வந்தார். அதனுடைய ஆண்டு விழாவிற்குத்தான் கல்கியும், சின்ன அண்ணாமலையும் வந்திருந்தார்கள்.

எப்படியாவது கல்கி அவர்களை அழைத்து எங்களது கையெழுத்துப் பத்திரிகையை வெளியிடச் செய்ய வேண்டும் என்று எனக்குள் ஓர் அரிப்பு!

நண்பர்களைப் படைதிரட்டிக் கொண்டு கல்கி அவர்களைப் பார்ப்பதற்காகப் போனேன். ஸ்ரீரங்கத்தில் சீமி அய்யங்கார் என அழைக்கப்படும் தனவந்தரின் வீட்டில் கல்கி அவர்கள் தங்கியிருந்தார்கள்.

நண்டுஞ் சிண்டுமாக நாங்கள் நாலைந்து பேர் போய் கல்கி அவர்களின் காலில், சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துவிட்டு, கையெழுத்துப் பத்திரிகையையும் அவரிடம் நீட்டி விஷயத்தைச் சொன்னோம்.

"விழாவிற்கு வருவதற்கில்லை" என்று கல்கி அவர்கள் மூர்த்தண்யமாக மறுத்துவிட்டார். ஏற்கெனவே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகள் அவருக்கு அன்று இரவு பத்து மணி வரையில் இருப்பதாகச் சொல்லி, சின்ன அண்ணாமலை எங்களைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்.

கல்கி அவர்களை எப்படியும் அழைத்து வந்துவிடலாம் என்கின்ற அசட்டுத் தைரியத்தில், என் வீட்டுக் கூடத்தில் ஒரு கூட்டத்தையே நான் கூட்டி வைத்திருந்தேன். என் தாயார் வேறு சொஜ்ஜி, பஜ்ஜியெல்லாம் சுடச் சுடத் தயார் செய்து வைத்திருந்தார்கள்.

"கல்கியைக் கையோடு கூட்டி வருகிறேன்" என்று வீதியிலுள்ள அத்தனை பேர்களிடமும் நான் சவடால் அடித்திருக்கிறேன்.

எனவே "கல்கி வரமாட்டார்" என்பதை அவர்களிடம் சொன்னால், கிண்டலும் கேலியுமாக என்னைக் கிழித்துப் போட்டுவிடுவார்களென்று நண்பர்களோடு கொள்ளிடம் மணலில் போய் உட்கார்ந்துகொண்டேன்.

எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் இரவல் வாங்கி விரித்துப் போட்டிருந்த ஜமக்காளங்களெல்லாம் என் வீட்டில் கல்கி அவர்களின் காலடித் தாமரை பதியக் காத்திருந்தன.

கொள்ளிடக்கரையில் நண்பர்களோடு கலந்து ஆலோசித்ததில், எதிர் வீட்டு மாமாவைத் தலைமையேற்க வைத்து, பத்திரிகையை வெளியிட்டு விடலாம் என்று முடிவாயிற்று.

நான், வீடு திரும்பும்போது இரவு பத்து மணி ஆகிவிட்டது.

அவமானத்தைப் பொறுத்துக் கொண்டு எதிர் வீட்டு மாமாவைத் தலைவர் நாற்காலியில் உட்கார வைத்து விழாவைத் தொடங்கினேன்.

ஒரு வாண்டுப் பயல் 'வாழிய செந்தமிழ்' பாடிக்கொண்டிருக்கையில், என் வீட்டு வாசலில் திருச்சி வானொலி நிலையத்தைச் சேர்ந்த கப்பல் போன்ற கார் வந்து நின்றது.

கூடத்திலிருந்து அனைவரும் அடித்துப் பிடித்துக்கொண்டு வாசலுக்கு ஓடி வந்தோம். பம்பரில் சின்னம் பதிக்கப் பெற்றிருந்த அந்தக் காரிலிருந்து, திருச்சி வானொலி நிலைய அதிகாரி திரு.பார்த்தசாரதி அவர்களும் தொடர்ந்து கல்கி அவர்களும் இறங்கினார்கள். சின்ன அண்ணாமலையும் உடன் வந்திருந்தார்.

வியப்பில் எங்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

"இங்கே யார் வாலி?" என்றார் கல்கி. "அடியேன்தான்" என்று கைகளைக் கூப்பினேன்.

"என்னமோ உன்னெ ஏமாத்தக் கூடாதுன்னு தோணித்து, அதனாலதான் வந்தேன்...." என்று செல்லமாக என் தோளைத் தட்டினார். உச்சி முதல் உள்ளங்கால் வரை எனக்குள் ஒரு மின்சாரம் ஓடியது.

வீட்டுக் கூடத்தில் விழா தொடங்கியதும் கல்கி அவர்களின் கையில் கையெழுத்துப் பத்திரிகையைக் கொடுத்தேன். அவர் அதை மெதுவாகப் புரட்டிக்கொண்டே திருச்சி வானொலி நிலைய அதிகாரி திரு. பார்த்தசாரதியைப் பேசச் சொன்னார்.

பார்த்தசாரதி அவர்களைப் பற்றி சின்னக் குறிப்பு.

இவர், கே.சுப்பிரமணியம் அவர்கள் இயக்கிய 'பாலயோகினி' படத்தில் நடித்தவர். பரதன் எனும் புனைபெயரில் கதை, கட்டுரைகள் வரைந்தவர். அமரர் திரு.பார்த்தசாரதி அவர்களின் சகோதரியின் கணவர்.

"ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் கூட்டத்தை முடித்துக்கொண்டு டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் வீட்டிற்குச் செல்ல இருந்த கல்கி அவர்கள் திடீரென்று




காரை இந்தத் தெருவுக்குத் திருப்பச் சொன்னார்.... நான் வியப்போடு பார்த்தேன்..... அப்போது கல்கி அவர்கள் சொன்னார்கள்....

'கல்யாணப் பத்திரிகைக்குக் கூடப் போகாமல் இருக்கலாம். கையெழுத்துப் பத்திரிகைக்குப் போகாமல் இருக்கக் கூடாது' என்று. உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் இங்கே வந்தார்!" என்று பார்த்தசாரதி அவர்கள் பேசினார்கள்.

பிறகு சின்ன அண்ணாமலை அவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசத் தொடங்கினார்கள். அப்போது கல்கி, கையெழுத்துப் பத்திரிகையில் நான் முதல் பக்கத்தில் எழுதியிருந்த தமிழ்த் தாய் வணக்கப் பாடலை, ஆர்வத்தோடு படித்துப் பார்க்கலானார். நான் கைகளைக் கட்டியவாறு அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

முழுக் கவிதையையும் படித்து முடித்த கல்கி அவர்கள் என்னிடம் ஏதோ சொல்ல நினைக்கும் பாவனையில் என்னைப் பார்க்க, நான் அவர் முகத்திற்கு அருகே குனிந்து காது கொடுத்தேன்.

கல்கி கேட்டார்:

"இந்தக் கவிதையை நீ சொந்தமாகத்தானே எழுதினே...?

இல்லைன்னா...."

பத்து மாதங்களுக்கு முன்னால் திரு.பிச்சமூர்த்தியும் இப்படித்தான் என்னைக் கேட்டார். அவருக்கு ரங்கநாதரைச் சாட்சி வைத்து சத்தியம் செய்து கொடுத்தது போல், "கடவுள் சத்தியமாக..." என்று கல்கியிடம் சொன்னேன். முதுகில் தன் வலக்கையால் லேசாக வருடிவிட்டார்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என்றெண்ணி கல்கி அவர்களிடம், "சார்! நான் ஒரு சிறுகதை எழுதி வெச்சிருக்கேன்...அதைக் கல்கிக்கு அனுப்பட்டுமா?" என்று கேட்டேன்.

"பேஷா....." என்று புன்னகைத்தார் கல்கி.

அந்த சிறுகதையின் பெயர் "விபீஷணன் சரணாகதி."

அனுப்பினேன், அடுத்த வாரமே "பிரசுரத்திற்கு ஏற்றதல்ல....." என்ற வாசகத்துடன் அந்தக் கதை கல்கி அலுவலகத்திலிருந்து படுவேகமாகத் திரும்பி வந்தது.

உடனே, கல்கி அவர்களுக்குக் காரசாரமாக ஒரு கடிதம் எழுதித் தபால் பெட்டியில் போட்டேன்.

**ஸ்ரீரங்கம் ராம கிருஷ்ணன்**

ஒரு குத்துமதிப்பாகக் கூறலாமே தவிர, கல்கி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தை Xerox எடுத்துக் காட்டும் அளவிற்கு என் நினைவாற்றல் சக்திவாய்ந்தது என்று நான் சொல்வதற்கில்லை. எது எப்படியிருப்பினும் ஒரு விஷயம் இப்போது எனக்குப் புரியவருகிறது. இன்னது செய்யலாம், இன்னது செய்யலாகாது என்றெல்லாம் இளம் இரத்தம் இனம் பிரித்துப் பார்ப்பதில்லை என்பதுதான் அது.

பிரசுரத்திற்கு ஏற்றதல்ல என்று திருப்பியனுப்பும் அளவிற்கு என் கற்பனை ஒன்றும் பிசுபிசுத்துப் போய் விடவில்லை. என் கதையின் எடை என்னவென்று எனக்குத் தெரியும். உங்கள் துலாக்கோல் துருப் பிடித்திருக்கிறது என்பதுதான் உங்களுக்குத் தெரியாது போயிற்று.

இப்படி அந்தக் காலத்துச் சினிமா வசனம் போல் வளவளவென்று வசை புராணமாகவே கல்கி ஆசிரியருக்கு நான் எழுதிய கடிதம் அமைந்திருந்ததாக ஒரு மங்கலான நினைவு.

இதற்கு பதில் வரவில்லை. வராது என்பதும் எனக்குத் தெரிந்ததே.

ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் சென்னைக்குச் செல்ல நேர்ந்தபோது கீழ்ப்பாக்கத்திற்குச் சென்று கல்கி அவர்களைச் சந்தித்தேன். ஒரு பூச்சியைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தார். என்னை அவருக்கு நினைவுபடுத்தி என் கதையைப் பற்றியும் கடிதத்தைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றேன்.

"ஊருக்குப் போய், அந்தக் கதையை நீ இன்னொருமுறை படித்துப் பார்த்துவிட்டு, எனக்கு அனுப்பு. கட்டாயமாகப் பிரசுரிக்கிறேன்" என்று கல்கி அவர்கள் சொன்னதும் எனக்கு இறக்கை முளைத்தது.

ஸ்ரீரங்கம் வந்து, பழைய 'ட்ரங்க்'பெட்டியிலிருந்த அந்தக் கதையைத் தூசி தட்டிவிட்டுப் படித்துப் பார்த்தேன்.

என் கதை, எனக்கே சுத்தக் கற்றுக்குட்டித்தனமாகப்பட்டது. கிழித்துப் போட்டேன். கல்கி அவர்கள் என் கையைக் கொண்டே என் கண்ணைத் திறந்துவிட்டார்கள்.

பெரியவர்கள் எப்போதுமே இப்படித்தான். பால் போல் பொங்கி வரும் சிறியவர்களின் கோபத்தை ஒரு சொட்டுத் தண்ணீர் தெளித்தே அடக்கிவிடுவார்கள்.

**தொடர்ந்து வரும்....**

## 'டீன் ஏஜ்' அனுபவம்

**12** வயது முதல் 20 வயது வரை உள்ள 'டீன் ஏஜ்' பருவம் ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் மறக்க முடியாதது இன்பமாயினும் சரி துன்பமாயினும் சரி - மிகவும் நளினமான, மறக்க முடியாத கற்பனை, கனவுகள் நிறைந்த பருவமது. இவ் வயதைத் தாண்டியவுடன் மனிதர்கள் பக்குவ நிலைக்கு வந்து விடுவதாகக் கூறப்படுகிறது.

இப் பருவ காலத்தில் உங்களை உணர்ச்சிபூர்வமாகப் பாதித்த நிகழ்ச்சிகள், அனுபவங்களை நினைவு கூர்ந்து இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி "இதய வெளிக்கு" அனுப்பி வையுங்கள், உங்கள் புகைப்படத்தையும் இணைத்து. தரம் கண்டு பிரசுரிக்கத் தயாராக உள்ளோம்.



## தூக்கமேயில்லை



**கே**ரள மாநிலத்தில் உள்ள எண்பது வயது முதியவர் ஒருவருக்குத் தூக்கமே வருவதில்லையாம். 40 வருடங்களாக இவர் தூங்காமலே விழித்திருக்கிறார். தனக்குத் தூக்கம் வராதது பற்றி அவர் விவரிக்கும் போது "என்னுடைய நாற்பதாவது வயதில் எனது கண்ணில் வலி ஏற்பட்டது. என்னைப் பரிசோதித்த டாக்டர் என்னை கண்ணாடி போடும் படி கூறினார். ஆனால் அது பலிக்கவில்லை. நாளாக நாளாக கண்ணில் வலி அதிகமாகி தூக்கம் அறவே நின்றுவிட்டது. எல்லா விதமான வைத்திய முறைமைகளையும் ஏன் மந்திர தந்திரங்களையும் கூட உபயோகித்து பார்த்தாகிவிட்டது. அதுவும் பலிக்கவில்லை. எனது தூக்கம் போனது போனதுதான்" என்கிறார்.

இவருக்குத் தூக்கம் வருவதற்குக் கடைசி முயற்சியாக அண்மையில் வெளியான சில தமிழ்த் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அத் தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்து அவருக்குத் தூக்கம் வராது விட்டால் அவர் வாழ்நாளில் தூக்கத்தையே இழந்துவிட்டவர் என்ற முடிவுக்கே நாம் வந்து விடலாம் என்கிறார் எனது நண்பர் ஒருவர்.

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## விழிப்பு நிலையும் – கனவும்

கனவுகளில் செயற்பாடுகள் தொடர்கின்றன. ஒரு வகையிலோ மற்றொரு வகையிலோ ஏதோ நிகழ்ந்துகொண்டே உள்ளது. எனவே உங்கள் உறக்கம் உங்களது விழிப்பு நேரத்தின் தொடர்ச்சியே ஆகும். கனவுகளைப் பற்றி ஒரு இரகசியம் நிறைந்த கற்பனைகள் உருவாகியுள்ளன. அவற்றின் அர்த்தத்தைக் கண்டுணர வேண்டும். ஆக அதைச் செய்வதற்கு வல்லுநர்கள் வேண்டும். ஆனால் உங்களுடைய பகல் நேர வாழ்க்கையை நீங்களே நன்கு கவனிப்பதன் மூலம் மிக எளிமையாக உங்கள் கனவுகளை நீங்களே புரிந்துகொள்ளலாம். எனினும் ஏன் கனவுகள் இருந்தாக வேண்டும்? (ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்- நாம் கனவு கண்டே ஆக வேண்டும், இல்லாவிடில் நாம் பைத்தியக்காரர்கள் ஆகிவிடுவோம் என்று.)

உங்களுடைய விழித்துள்ள நேரத்தின் செயல்களை சுயநலம் மிக்க, பலம் நிறைந்த, கவலையுள்ள, குற்றமனப்பான்மையுள்ள எல்லாச் செயற்பாடுகளையும் பகல் நேரத்தில் நன்கு கவனித்து வந்தீர்களேயானால், நீங்கள் உறங்கும்போது கனவுகள் இல்லாதிருப்பதைக் காண்பீர்கள்.

ஜே.கிருஷ்ணமூர்த்தியின்
'வன்முறைக்கு அப்பால்' நூலிலிருந்து

# சிந்தியா

## பதில்கள்

**ஜனநாயகத்தின் தூண்கள் என வர்ணிக்கப்படும் பத்திரிகைகள், ஊடகங்கள் எல்லாம் நம் நாட்டில் ஏகப்பிரதிநிதித்துவத்தை ஆதரித்துக் கூசாமல் எழுதுகின்றனவே?**

–பரிதிமதி, ரம்புக்கலை.

புலிகளால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன், வானொலிப் பேட்டியொன்றில் முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபத்திரன் கேட்டிருந்த கேள்வி : "ஏகப் பத்திரிகை, ஏக வானொலி, ஏகக் கட்டுரையாளர் என்பதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?" இதற்குப் பதில் சொல்வதற்கு வேண்டிய சுய மரியாதையுமற்றவர்கள் நம் ஜேர்ணலிஸ்ட்டுகள்!

❊❊❊

**கடவுள் உங்கள் முன் தோன்றி "என்ன வரம் வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றால் என்ன கேட்பீர்கள்?**

–சி.துஷ்யந்தன், மண்டூர்.

அத்தனை சக்தி படைத்தவராக நம்பப்படும் ஒருவர் இவ்வளவு ஏமாளித்தனமாக இருப்பார் என்று நான் நினைக்கவில்லை. ஏறக்குறைய அவரது 'சீற்'றையே நான் கேட்டுவிடுவேன் என்று தெரியாமலா இருப்பார்!

❊❊❊

**சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்குமுள்ள வேறுபாட்டை சுருக்கமாகச் சொல்ல முடியுமா?**

–எஸ்.ரோஷினி, பசறை.

சர்வதிகார ஏரியாவில் கேள்வி கேட்பது கஷ்டம்!

ஜனநாயக ஏரியாவில் பதில் சொல்வது கஷ்டம்!

❊❊❊

**"விதைத்தவர்கள் அறுக்கவும் உரித்துடையவர்கள்" என்று படுகொலைகளைக் கண்டிப்போருக்கு "பெருத்த பேராசிரியர்" தத்துவார்த்தமாய் விளக்கியிருப்பதை வாசித்தீர்களா?**

–இ.பேரின்பன், கொழும்பு–05.

இன்றைய 'அச்சச் சூழல்' நீங்கிய ஒரு காலத்தில் சக மனிதக் கொலைகளுக்கு 'ஞாயம் சொல்லிய' ஜனநாயக மறுப்புத் தத்துவாசிரியர்களாய் இவர்கள் நினைவுகூரப்படுவர்.

❊❊❊

**பாராளுமன்றத்தில் மற்றும் வேலை வாய்ப்புக்களில், சபைகளில் எல்லாம் பெண்களுக்கும் குறிப்பிட்ட சதவீதம் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?**

–நபீமா சிராஜ், வெலிமடை.

நடிகை சரிதா ஒரு சமயம் சொன்னதை நான் வழி மொழிகிறேன் : "பெண்களுக்கு நல்லது எது நடந்தாலும் இந்த உலகிற்கே அது நல்லதுதான்."

❊❊❊

**பெண்ணின் மனதை அறிந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்படும் பெரும்பான்மையோருக்கு என்ன கூறுகிறீர்கள்?**

–க.சுதர்சன், செங்கலடி.

அறிந்துகொண்டதால் அவஸ்தைப் படுவோர்தான் பெரும்பாலானோர் என்கிறார் ஒரு குடும்பஸ்தர்!

❊❊❊

**ஸ்ரீவ் வோ?**

சுதாஸ் எடம்ஸ், பூண்டுலோயா.

விளையாடியது போதும் என்று, சொன்னவர்களுக்கு விளையாட்டால் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

❊❊❊

**ஒரு தேசமோ அல்லது ஒரு தேசியமோ தன் பாதுகாப்பிற்கெனப் படை வைத்திருப்பதில் தவறில்லைத்தானே?**

–இ.வாசவன், யாழ்ப்பாணம்.

99 சதவீதம் கல்வியறிவுடைய மக்களைக் கொண்ட சுவிற்சர்லாந்து வைத்திருப்பது செஞ்சிலுவைப் படைதான். அந்த நாடு பாதுகாப்பாகத்தானிருக்கிறது.

❊❊❊

**'காதல் கொண்டேன்' எப்படி?**

–ஏ.ஜோதி, கூமாங்குளம்.

'குணா' பாதி 'சிவப்பு ரோஜாக்கள்' பாதி கலந்து செய்த கலவை. மிகைப்படுத்தல்கள் நிறைய.... இருந்தாலும் நடிப்பில் அசத்திவிட்டிருக்கும் தனுஷ், சோனியா அகர்வால் மற்றும் இயக்குநர் செல்வ ராகவன் மூவரும் தமிழ்த் திரையின் வெற்றியாளர்கள் வரிசையில் சேருகிறார்கள். 'தமிழ் ஹீரோ' மினுமினுப்பே இல்லாத தனுஷுக்கு அடுத்த படம் பாலு மகேந்திராவினுடையதாம்! 'அஜித், விக்ரம்களைக் கிலிகொள்ள வையப்பா!' என்று வாழ்த்தலாம்.

❊❊❊

**'ஐஸ்' பார்த்தீர்களா?**

–ஐ.எஸ்.பிரிட்டி, கித்துள்.

அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

❊❊❊

**மிருகங்களை வதைப்பதற்கு எதிராக என்னென்ன சட்டங்கள் இருக்கின்றன?**

–ஏ.ஏ.எம்.பாரூக், குருநாகல்.

பல இருக்கின்றன...அது போல,$0^{0}$க்கும் கீழான ஜேர்மனிக் குளிரில், வளர்ப்புத் தாய்க்கு மட்டும் 'கம்பளிக் கோட்' கொடுத்து ஹீரோயினை 'இஞ்ச்' கணக்கான ஆடையுடன் மட்டுமே ஆடச் சொல்கிற கொடுமைக்கும் சட்டம் கொண்டு வந்தால் நல்லது. (பாவம், பிரியங்கா திரிவேதியை ஒரு உஷ்ணப் பிரதேச நாட்டிற்குக் கூட்டிச் சென்றிருக்கக் கூடாதோ!)

❊❊❊

**பெரும்பான்மைத் தமிழ்க் கூச்சல்களுக்கிடையில் என் மனசாட்சி தனித்து நின்று முனகுவதைக் கேட்க எனக்கே பயமாக இருக்கிறது. உண்மையில் எது சரி, எது பிழை? இன்றைய நிலைமையில் முற்போக்காய் நடந்துகொள்பவர்கள் யார், பிற்போக்கானவர்கள் யார்? எதன் பின்னால் நான் போக? குழப்பமாயிருக்கிறதே....?**

ரி.தவம், சுழிபுரம்.



எல்லோரையும் குழப்பிக்கொண்டிருப்பது உயிர்ப் பயம்தான். சரி, அது ஒரு புறமிருக்கட்டும். பொதுவான மனித நாகரிக நடைமுறைகளின் அடிப்படையில் முற்போக்காளர்களையும் பிற்போக்காளர்களையும் பின்வருமாறு அட்டவணைப் படுத்த முடியும். எந்தப் பிரிவில் யார் யார் அடங்குகிறார்கள் என்று தேடிக் கண்டுகொள்வது உங்கள் கடன்.

1. மாற்றுக் கருத்துக்களைக் கொலைப் பயமுறுத்தல் மூலம் அடங்குவதைக் கண்டிப்பார்கள் முற்போக்காளர்கள். கொலைகளுக்கும் ஏதாவது நியாயம் கண்டுபிடிப்பார்கள் பிற்போக்காளர்கள்.

2. அநீதியை எங்கு கண்டாலும் தட்டிக் கேட்டுக் குரல் கொடுப்பார்கள் மு.போ.கள். அமசடக்காக இருந்துகொள்வார்கள் பி.போ.கள்.

3. பன்மைத்துவத்தைக் கோருவார்கள் மு.போ.கள். ஏகப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்வார்கள் பி.போ.கள்.

4. தேசத்தின் பேராலோ இனத்தின் பேராலோ மதத்தின் பேராலோ.... அக அடக்குமுறைகளை, சர்வாதிகாரத்தை நியாயப்படுத்துவார்கள் பி.போ.கள். எதன் பேராலும் வரும் எதேச்சாதிகாரத்தையும், அடக்குமுறையையும் கண்டித்து ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுப்பார்கள் மு.போ.கள்.

5. தற்கொலைப் படையின் அணிவகுப்பு மரியாதையை உத்தியோகபூர்வமாக ஏற்று விறைப்பாய் நிற்கும் தலைவரைத் தமக்கும் தலைவராக ஏற்று எழுதுவார்கள் பி.போ.கள். தவறுகளே விடமுடியாத, பிறர் கேட்கப் பார்க்கவும் முடியாத ஒருவரைத் தலைவரென ஒப்பமாட்டார்கள் மு.போ.கள்.

6. ஊரிலுள்ள ஜனநாயக மறுப்புப் பற்றி ஒன்றும் சொல்லாமல் உலக ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துக்கொண்டிருக்கும் பிற்போக்கு. அச்சமில்லாத சூழலுக்கும், கருத்துச் சுதந்திரத்திற்குமாகச் சிறு மின்மினியாகவேனும் எரிந்துகொண்டிருக்கும் முற்போக்கு.

இந்த அட்டவணையை நீங்களே கூட தொடர்ந்து இன்னுமின்னும் நிரப்பிச் செல்ல முடியும்.

❊❊❊

**எதிலாவது தோல்வியடையும்போது நீங்கள் என்ன நினைப்பீர்கள்?**

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை – 01.

ஒருவரின் தோல்விதான் இன்னொருவரின் வெற்றிக்குக் காரணமாகிறது என்கிறார்கள். எனவே அந்த இன்னொருவரை வெற்றி பெற வைத்தது நான்தானே என்று மகிழ்ச்சியோடு திருப்திப்பட்டுக்கொள்வேன். (ஹி..ஹி...இப்படி நினைத்துக்கொள்ளத்தான் ஆசை!)

❊❊❊

# இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

# கருநாகக் குழலின் கீழ் சிறிதான நெற்றி....

மணலில் மல்லாந்து படுத்திருந்த கபிலனுக்கு வெண்ணிலவின் விரைவான ஓட்டம் அசாதாரணமானதாகத் தோன்றியது. மேல்காற்று வேகமாய் அடிக்கிறது போலும். மேல்காற்றுக்குப் போய்விட்டால் பட்டம் கீழிறங்காது என்று நண்பர்கள் சொல்வது நினைவில் வந்தது. மேல்காற்றைப் பற்றி பட்டம் விடும் சமயங்களில்தான் பேசியிருக்கிறான். இப்போது இந்தப் பாதி நிலவின் பாய்ச்சலுக்கும் மேல்காற்றை யோசிக்கத் தோன்றுகிறது.

நிலாவின் வேகமான ஓட்டத்திற்கும் கபிலன் ஒரு கதை கேள்விப்பட்டிருந்தான்.

ஓர் அழகான பெண் தனக்கு விருப்பமானவனைக் காதலித்ததாகவும், பெற்றோரும் ஊராரும் கோபம் கொண்டு அவர்களைத் துரத்தியதாகவும், இருவரும் பூமி எங்கும் ஓடித் தப்பிக்க முடியாமல் வானத்துக்குத் தாவி, காதலன் ஆகாயமாகிவிட அந்தப் பெண் நிலவாக ஓடிக்கொண்டிருப்பதாகவும் அந்த நாடோடிக் கதை.

கதையை நம்பாவிட்டாலும் ஓடியபடி இருக்கும் அந்த அழகிய நிலா யாரோ ஒருத்தனின் காதலியாகத்தானிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

மனதை மயக்கியபடி, உருகித் தவிக்கவிட்டபடி, நெருங்கினால் கிடைக்காமல் போக்குக் காட்டி ஓடிக்கொண்டிருப்பவள் நிச்சயம் யாரையோ காதலில் வீழ்த்திவிட்டவள்தான்!

அயோத்தியா! உறங்க விடாமலடிக்கிறாள். இதயத்தினுள்ளே தூண்டில் முள்ளாக ஏறியிருக்கிறாள். அவள் நினைவை வெளியே எடுக்க முடியவில்லை. இதயத்திலிருந்து அவள் நினைவை வெளியெடுத்துவிட முயல முயல கொடூர வலியேற்படுத்தியபடி மீண்டும் மீண்டும் அழுத்தமாகச் சிக்கிக்கொள்கிறாள்.

வலியை நிறுத்தவும் முடியவில்லை.

அவளை வெளியே அகற்றவும் முடியவில்லை.

உடல் பூராகவும் துழாவிக் கிளம்பிய ஏதேதோ இன்ப உணர்ச்சிகளால் இதயவலி அதிகரித்ததே தவிரக் குறையவில்லை.

அயோத்தியாவை முதன் முதலில் பார்த்தபோதே, இவள் தன் வாழ்வை அடியோடு உருக்குலைத்து துடிக்கவிடப் போகிறாள் என்று தோன்றிவிட்டது கபிலனுக்கு. மனத்தை விட்டு அகற்ற முடியாத பெரும் விபரீத அழகுக்கு முன்பாகத் தான் நிற்பதை உணர்ந்து மலைத்தான்.

கருங்கூந்தலின் நடுவே ஒளிர்ந்த அவள் முகத்தை நிலவுக்கு ஒப்பிட்டுச் சொல்வது, உண்மையை அவமதிப்பதுதான். தலையிலிருந்து இறங்கிய சுருண்ட குழல்களில் பல இழைகள் பிரிந்து தொங்கித் தோளில் புரண்டதும், பின்னிய மீதிக் கூந்தல் மார்பில் தவழ்ந்து அசைந்ததும், சில இழைகள் கன்னத்தில் தழுவி நின்றும் அவள் முகத்தின் ஒளியை அதிகப்படுத்தியதால் கபிலன் பெரிதும் தடுமாறினான்.

உடல் முழுவதும் மயக்கம் தரும் மஞ்சள் நிறமோடியிருந்தது. தனது அழகிய விழிகளைக் கபிலன் மீது நாட்டி நின்றாள் அயோத்தியா.

ஏதோ சொல்ல உதடுகள்



வேண்டுமென முற்பட்டாள்.

மலர இஷ்டப்படாமல் தயக்கத்துடன் அவிழும் மொட்டைப் போல அவள் சிதறிய உதடுகள் ஒரு முறை பிரிந்து மூடியதால் உள்ளத்தை அள்ளின.

கபிலன் இப்போதும் அந்த ஒளியை யோசித்தான். ஒளிரும் தன்மை அவளது பாற் பற்களுக்கு மட்டுமானதாக இருக்கவில்லை.

விரிந்தபோது கண்ணாடிக் கன்னங்களில் விழுந்த குழிகளும், உதடுகள் மூடியதும் மந்திர ஜாலம் போல் அவை மறைந்துவிட்ட மாயமும், புருவங்களின் அசைவும், சிறிது நேரம் நிலைத்து நின்று திடீரெனக் கொட்டிய இமைகளும் பற்பல இரகசியச் சேதிகளைச் சொல்ல பிரமிப்பில் ஆழ்ந்து கிடந்தான் கபிலன்.

பெரும் புதிராக அசைவற்று நின்ற அந்த அழகுச் சிலை, அசைய முற்பட்டு அவனை நோக்கி நடக்கத் துவங்கியதும், அவள் எழில்களில் பல துள்ள ஆரம்பித்ததில் அவன் சித்தம் சிதறுண்டு துடித்தது.

நாட்டியக் கலையின் உயிர் அவள் நடையில் ஊடுருவியிருந்தது. அவளது கமலச் செவ்வரிக் கண்களில் காதல் விரிந்து கிடந்தது. வீணைகளாலும் குழல்களாலும் கொடுக்க முடியாத ஒலியின்பத்தை அவள் குரல் கொடுத்தது.

இரும்பை ஒத்த அவன் இதயத்தை உருக்கும் சக்தி அந்தக் கரும்புக்கு இருந்ததை உணர்ந்தான்.

அவன் இதயத்தை அவள் மலர்க் கணைகளால் பிளந்தாள். அருகே வந்ததும் அயோத்தியா சற்றுத் தயங்கி நின்றாள். கண்ணியம் இடையே சுவரெழுப்பி நிறுத்தியது. பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்திருந்த அந்தக் கண்ணியம் விபரீதத்தைத்தான் தடுக்க முடிந்ததே தவிர பொங்கிப் பிரவகிக்கும் அன்பைத் தடுக்க முடியாததால் இருவரும் நிலைகுலைந்த தன்மையிலேயே நீண்ட நேரம் நின்றிருந்தனர்.

மௌனம் மேலும் விபரீதமாக இருந்ததால், அவள் ஏதாவது பேச

முகமே ஒளிர்ந்தது.

அந்தப் பிறைச் சிறு நுதலை நினைத்தான்.

பாம்பினால் விழுங்கப்பட்டதாகச் சொல்லப்படும் பகுதி போக நிலாவின் மீதிப் பகுதி ஜாஜ்வல்யம் போல, கூந்தல் போர்வையிட்ட அவள் நெற்றி!

இப்போதும் அவனோடு பேசியது கண்ணுக்குள் நின்று வலித்தது. நோய் கண்டவன் போல மெலிவித்தது. உருகித் துடிக்க வைத்தது. கபிலன் அவனது நெஞ்சின் நிலவை எண்ணிச் சிந்தை நைந்தான்.

**அகல் இரு விசும்பின்**
**அரவுக் குறை படுத்த**
**பசுங்கதிர் மதியத்து**
**அகல்நிலாப் போல**
**அளகம் சேர்ந்த சிறுநுதல்**
**கழறும் மெலிக்கும்**
**நோயா கின்றே.**

(நற்றிணை : 377 : 6–9)



ஆதிப் பரம்பொருளின் ஊக்கம்—அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்;
சூதில்லை காணுமிந்த நாட்டீர்—மற்றத்
தொல்லை மதங்கள் செய்யும் தூக்கம்.
சுப்பிரமணிய பாரதியார்—



# இறைவனின் தீர்ப்பு

## பாப்பா முரசு சிறுகதை



வயிற்றுக்கு மீன்களைச் சாப்பிட்ட இரண்டு நாரைகள், சற்று இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் மீது அமர்ந்தன.

அவற்றில் ஒன்று ஆண் நாரை, மற்றொன்று பெண் நாரை.

இரண்டும் தங்கள் எதிர்கால வாழ்க்கை குறித்து பேசத் துவங்கின.

பேசிக்கொண்டே பெண் நாரை தற்செயலாகக் கீழே பார்த்தது.

கீழே....

ஒரு வேடன் அவைகளை வில்லால் குறி பார்த்துக்கொண்டிருந்தான். அதைக் கண்டு திடுக்கிட்ட பெண் நாரை, சட்டென்று தன் மேல் விழுந்து அப்பால் செல்லும் நிழலையும் கவனித்து, விருட்டென்று தலையைத் தூக்கி மேலே பார்த்தது.

ஒரு பெரிய வல்லூறு அவைகளைப் பிடிக்க மிக அருகாமையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பெண் நாரையின் நெஞ்சம் திடுக்கென்று அதிர, அது ஆண் நாரையைப் பார்த்து "இன்று நாம் தொலைந்தோம். மேலே ஒரு கொடும் வல்லூறு நம்மைப் பிடிக்க பறந்துகொண்டிருக்கிறது. நம் வாழ்க்கை அவ்வளவுதான்!" என்று சொல்லிவிட்டு அழத் தொடங்கியது.

அப்போது ஆண் நாரை அதைப் பார்த்து, "என் அன்புக்குரியவளே! நீயாக எந்த முடிவுக்கும் வந்து மனதைப் போட்டு வருத்திக்கொள்ளாதே. நாம் செத்துத்தான் போவோம் என்று இவற்றைப் பார்த்ததும் முடிவுக்கு வந்துவிடக் கூடாது. இறைவனின் விருப்பம் அதுவாக இருந்தால் நாம் இறப்பதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் இறைவனின் விருப்பம் வேறு விதமாக இருந்தால்..." என்று சொல்லி நிறுத்தியது.

அப்போது "ஆ" என்று ஒரு சத்தம் கீழே இருந்து வந்தது.

இரண்டு நாரைகளும் கீழே பார்த்தன.

வேடனை ஒரு பாம்பு தீண்ட அவன் அலறிக்கொண்டே தடுமாறி விழ, அவனது கையில் பாய்வதற்கு தயார் நிலையில் இருந்த அம்பு அந்தத் தடுமாற்றத்தால் வில்லில் இருந்து சீறிப் பாய்ந்து சென்று வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த வல்லூறின் மேல் பாய்ந்தது. அலறிய வல்லூறு கீழே விழுந்து துடி துடித்து சிறிது நேரத்தில் இறந்தது.

அதே சமயம், கொடிய பாம்பின் விஷம் தலைக்கேறியதும் வேடனும் துடி துடித்து இறந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டு ஒரு கணம் உறைந்துபோனாலும், அதுதான் 'இறைவனின் விருப்பம்' என்று உணர்ந்து தலை கவிழ்ந்தது பெண் நாரை. அவசரப்பட்டு, தான் ஒரு முடிவுக்கு வந்ததை நினைத்து அது வெட்கப்பட்டது.

பிறகு ஆண் நாரையை அது பார்க்க அதுவும் பெண் நாரையைப் பார்த்து "இறைவனின் விருப்பத்தை பார்த்தாயா? ஒன்று மட்டும் தெரிந்து கொள். எதிர்காலத்தில் அவ்வளவு ஏன் அடுத்த விநாடி நமக்கு என்ன நடக்கும் என்பதைக் கணித்துக் கூறும் சக்தி மனிதன் உள்பட எந்த உயிரினத்துக்கும் இல்லை. அது இறைவன் மட்டுமே வைத்துக்கொண்டுள்ள இரகசியம். அதை ஒருவர் கணித்து கூறுகின்றார் என்றால், அது பொய். புரிந்துகொண்டாயா?" என்று.


"ஆமாம்! இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் எனக்கு எல்லாமே விளங்குகிறது. இனிமேல், இருக்கின்ற அறிவைக் கொண்டே சிந்தித்துச் செயற்படுவேன்!" என்றது பெண் நாரை.

அதைக் கேட்டு ஆண் நாரை சந்தோஷமடைந்தது.

பிறகு இரண்டும் மரத்தை விட்டுக் கிளம்பி, தங்கள் இருப்பிடத்தை நோக்கிப் பறந்தன.

**ஆம் பிள்ளைகளே! எதுவானாலும் கடவுள் சித்தப்படியே நடக்கும். தன் வினை தன்னைச் சுடும். என்பது போல் ஒருவருக்கு நாம் தீங்கு செய்ய நினைத்தால் அதுவே எமக்கு எமன் ஆகிவிடும். ஆகவே நன்மை செய்து நல்லவர்களாக வாழ்வோம்.**

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.08.2003.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 507
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 504

பரிசுக்குரியவர்:
செல்வி பி.சாலினி,
பிருந்தாவனம், நாகம்மாள் கோவில் வீதி, உடுவில், சுன்னாகம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.ராதை, கிங்ஸ்டன் தேசியக் கல்லூரி, கல்கிசை. | செல்வி.ஆர்.சின்னையா, கிங்கஸ்ரன் சர்வதேச கல்லூரி, வெள்ளவத்தை. |
| எஸ்.எம்.அர்ஜுன், க/கித்துல்முல்லை, தமிழ் வித்தியாலயம், கலகா. | செல்வி.ரி.ஜெயமதி, நு/பு.அந்தோனியா த.வி., ரூவன் எலிய, நுவரெலியா. |
| செல்வி.எம்.ஹரசந்தா, தெப்பட்டன். | வீ.துஷ்யந்தி, 129/13, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13. |
| வீ.தனோஜனா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | என்.சி.சார்ள்ஸ் நிலுக்ஷன், சென்.பீற்றர் லேன், நிந்தனி, புத்தளம். |
| ஆத்மராசா ஜெயந்தி, 212 காந்திநகர், அன்புவழிபுரம், திருகோணமலை. | பாதிமா சில்பியா, 18/7, சேர்ச் வீதி, கொழும்பு-02. |


## விடுகதைகளும் விடைகளும்

1. கொண்டையிலே பூவுண்டு எடுக்க முடியவில்லை அது என்ன?
2. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?
3. உயிரில்லை ஊருக்குப் போவான் காலில்லை வீட்டுக்குப் போவான் வாயில்லை வார்த்தைகள் சொல்வான் அவன் யார்?
4. நமக்குரியதை நம்மை விட மற்றவர்கள்தான் அதிகம் பயன்படுத்துவார்கள் அது என்ன?
5. வேரில்லை தெருவெல்லாம் நிற்கும் அது என்ன?
6. ஓடித் திரிவான் ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார்?
7. காயாகிப் பூவாகும் அது என்ன?
8. முகத்தில் பூக்கும் பூ என்ன?
9. நாய் கண்டால் ஓடும் ஆனால் வாயில் போட்டால் இனிக்கும் அது என்ன?
10. மழையிலும் வெயிலிலும் மலரும் பூ நிழலைக் கண்டால் வாடும் அது என்ன?

### விடைகள்

1. சேவல் 2. தராசு
3. கடிதம் 4. பெயர்
5. போஸ்டர் 6. கதவு
7. தேங்காய்ப்பூ 8. சிரிப்பு
9. கற்கண்டு 10. குடை

## அதிசய உலகம்!



### உடைந்தும் உயிர் வாழும் கண்ணாடிப் பாம்பு!

ஐரோப்பா மற்றும் ஆசிய பகுதிகளில் கண்ணாடிப் பாம்புகள் காணப்படுகின்றன. எதிரிகள் இந்தப் பாம்பைத் தாக்கினால் இந்தப் பாம்பின் பின் பாதி உடல் கண்ணாடி மாதிரி உடைந்துவிடுகிறது. அப்போது இந்தக் கண்ணாடிப் பாம்பு தப்பி ஓடிவிடும். சில நாட்களில் உடைந்து போன இதன் உடல் பகுதி மீண்டும் வளர்ந்துவிடும். பல்லி இனத்தைச் சேர்ந்த இந்தப் பாம்பு 5 அடி நீளம் வளரும். கடினமான உணவையும் அரைத்துச் சாப்பிட்டுவிடும் வலிமை இந்தப் பாம்பின் பற்களுக்கு உண்டு. பெரிய நத்தைகளை உணவாகச் சாப்பிடும் இந்தக் கண்ணாடி பாம்பு.

சில மீன்கள் தண்ணீருக்குள் உள்ள மணற் பகுதியில் வசிக்கும். சில வகை மீன்கள் குறுகிய சந்து மற்றும் கடற்பாசிகளில் வாழும். 'பாரட் பிஷ்' எனப்படும் ஒரு வகை மீன்கள் உஷ்ணப் பிரதேசங்களில் வாழும். இவை தங்கள் உடம்பில் இருந்து வழியும் ஒரு வகைத் திரவத்தில் இருந்து வீடு கட்டி அதற்குள் வாழும். இவ்வகை வீடுகளால் தனது எதிரிகளான விலாங்கு மீன் போன்றவை மீன் வாசனையைத் தேடி வர முடியாது பாருங்க!



## உங்கள் பொது அறிவு எப்படி?

1. திகில் படங்களில் இதுவரை ஒரேயொரு படம் மட்டுமே ஆஸ்கார் விருதை வென்றுள்ளது. அந்தப் படம் எது? **எக்சார்சிஸ்ட் 1973ல் பெற்றது.**
2. கடல் மட்டத்துக்குக் கீழேயுள்ள விமான நிலையம் எங்குள்ளது? **நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள ஸ்கிபோல் விமான நிலையம்.**
3. முதன் முதலாக வானொலியில் வர்த்தக ஒலிபரப்பைத் தொடங்கிய நாடு எது? **அமெரிக்கா 1922ம் ஆண்டு.**
4. ஹிரோஷிமா நகரத்தை 1945ம் ஆண்டு அழித்த அணுகுண்டின் பெயர் என்ன? **லிட்டல் பாய்**
5. மனித உடலின் 50 சதவீத வெப்பம் எந்த ஒரே உறுப்பின் வழியே வெளியேறுகிறது? **தலை**
6. இரட்டை மாடி ரெயில் போக்குவரத்து முதன் முதலாக ஓடிய நாடு எது? **அமெரிக்கா**
7. இந்தியா, சீனா, ஜப்பான், டென்மார்க், ஆப்கானிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளில் கடற்கரை இல்லாத நாடு எது? **ஆப்கானிஸ்தான்.**
8. பித்த நீர்ப்பை இல்லாத ஒரே மிருகம் எது? **ஒட்டகம்.**
9. ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களுள் ஒரே ஒருவர் மட்டுமே அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார் அவர் யார்? **பிலிப் நோயல் (இங்கிலாந்து)**
10. தமிழ் சிறுகதை உலகின் தந்தை என்று வர்ணிக்கப்பட்டவர் யார்? **வ.வே.சு.அய்யர்.**


## இந்த வாரப் புதிர்



இங்கு செங்குத்தாக ஆறு வட்டங்கள் உள்ளன. இவற்றில் மூன்று வட்டங்களை மட்டும் நகர்த்தி, இந்த செங்குத்து வடிவத்தை ஒரு வட்டமாக்க வேண்டும். அதாவது இந்த ஆறு வட்டங்களும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு ஒரு வட்டத்திற்குள் இருப்பது போல் செய்ய வேண்டும். முயற்சித்துப் பாருங்களேன்.

## அறிவுத் தேடல்

சென்ற வாரப் புதிரின் விடை



# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

**23**

> ஈரான் நாட்டில் முடியாட்சி மறைந்து இஸ்லாமிய மதத்தலைவரான ஆயதுல்லா கொமெய்னி தலைமையில் இஸ்லாமிய பண்பாட்டுக்கேற்ற ஆட்சி மலர்ந்த வரலாற்றை நொஸ்ரடாமஸ் தனது இரு தொகுப்புகளில் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே கணித்துத் தந்திருக்கிறார்.

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

மத்திய கிழக்கில் ஈராக் நாட்டைப் போன்று ஈரான் நாடும் மிகப் பழைமையான நாடு. இந்த நாட்டில் ஏற்பட்ட பல முக்கியமான சம்பவங்களைப் பற்றி நொஸ்ரடாமஸ் தனது ஆரூடங்களில் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஈரான் நாட்டில் அரச பரம்பரையினர் ஆட்சிபுரிந்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மன்னர் ஷா ஆட்சி புரிந்து வந்தார். இவருடைய இளமைக் காலம் மேலை நாடுகளில் செலவிடப்பட்டது. பெரும்பாலும் அவருடைய கல்வி முழுவதும் அமெரிக்க நாட்டில்தான் பெறப்பட்டது. இதனால் அவருக்கு மேல் நாட்டு மோகம் அதிகம்.

ஈரான் நாட்டில் பழைய கால வாழ்க்கை முறையை அனுசரித்து நடப்பவர்களின் தொகையே அதிகமாகக் காணப்பட்டது. மதத் தலைவர்கள் அந்நாட்டு மக்களை இஸ்லாமிய நெறிப்படி வாழக் கற்றுக் கொடுத்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் மேலை நாட்டுக் கலாசாரத்தில் மோகங் கொண்ட மன்னர் ஷா பதவிக்கு வந்ததும், அந்நாட்டு மக்களை நவீன வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றுவதற்கு வழி வகுத்தார். இளைஞர்கள் பெரும்பாலும் மன்னர் ஷாவினுடைய வாழ்க்கை நெறிமுறைகளையே பின்பற்றத் தலைப்பட்டனர்.

ஈரானியப் பெண்கள் அதுகால வரை இஸ்லாமிய முறைக்கேற்ப குர்தா அணிந்து தங்கள் முகங்களையும், அங்கங்கள் யாவற்றையும் குர்தாவால் மூடிய வண்ணமே வீட்டை விட்டு வெளிக் கிளம்புவார்கள்.

மன்னர் ஷா பதவியேற்றதும் ஈரான் நாட்டுப் பெண்கள் குர்தா அணிய வேண்டிய அவசியமில்லை. உயர் கல்வி முதலான சகல துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக முன்னேற வேண்டுமென்று ஷா கட்டளையிட்டார். அதன்படி பெண்கள் குர்தாவைத் தூக்கியெறிந்துவிட்டு மேல் நாட்டுப் பாணிகளைப் பின்பற்றி ஆடைகளை அணிய முன்வந்தனர்.

அந்நாட்டில் எங்குமே அதுவரை சினிமாக் கொட்டகைகளோ நாடக மேடைகளோ இருந்ததில்லை. இரண்டொரு நாடக மேடைகள் இருந்த போதிலும் அதில் தோன்றி நடிப்பவர்கள் ஆண்கள் மட்டுமே. அந் நாடகங்களைப் பார்ப்பதற்குக் கூடப் பெண்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. மன்னார் ஷா பதவிக்கு வந்ததும் பழைய கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு மேல் நாட்டு வாழ்க்கை நெறி முறைகளை மக்கள் பின்பற்ற ஆரம்பித்தனர்.

மன்னர் ஷா கொண்டு வந்த நவீன மார்க்கங்களை இஸ்லாமியர்கள் பின்பற்றுவது இஸ்லாம் மதத்துக்கு விரோதமான செயலென்று மதப் பெரியார்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் மக்களைத் திசைதிருப்ப முடியவில்லை.

மன்னர் ஷா இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சர்வதிகாரி போல் செயற்பட ஆரம்பித்தார். மன்னர் பிறப்பிக்கும் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கென்றே பலதரப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட 'சவாக்' என்ற ஓர் இரகசிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த அமைப்பு பழைமைவாதிகளான மதத் தலைவர்கள் மீது பாயத் தலைப்பட்டது.


**பிரமிக்க வைப்பது ராஜகுமாரன்**

பல பேராசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பெரும்பாலானவர்கள் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

மதப் பெரியார்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்ணுற்ற மதத் தலைவர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறத் தலைப்பட்டனர். ஈரான் நாட்டின் பிரதான இஸ்லாமிய மதத் தலைவரான ஆயதுல்லா கொமெய்னி பிரான்ஸ் நாட்டுக்குத் தப்பி ஓடினார். பல ஆண்டுகள் அந் நாட்டிலேயே தங்கியிருந்த ஆயதுல்லா கொமெய்னி பிரான்ஸ் நாட்டு உளவுத் துறையின் அனுசரணையுடன் பல திட்டங்களை வகுத்து ஈரான் நாட்டு மன்னர் ஷாவை அகற்றிவிட்டு இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு ஏற்ற ஆட்சியை நிறுவப் பல திட்டங்களைத் தீட்டினார்.

கொமெய்னி அவர்களுக்கு விசுவாசமானவர்கள் ஈரானில் இருக்கவே செய்தனர். அவர்களை ஒன்று திரட்டி மன்னர் ஷாவின் ஆட்சிக்கு எதிரான பொது மக்கள் இயக்கம், பிரெஞ்சு நாட்டு உதவியுடன் அந்தரங்கமாக ஈரானில் உருவாக்கப்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் பரந்த அளவில் செல்வாக்கு ஏற்படலாயிற்று. இதற்கு மன்னர் ஷாவின் மக்கள் விரோத கொடுங்கோலாட்சியும் உதவி புரிந்ததென்றே சொல்ல வேண்டும்.

மக்கள் இயக்கம் வலுப் பெற்றமையினால் மன்னர் ஷா நீண்ட காலம் ஆட்சிபீடத்தில் நிலைத்திருக்க முடியாது போயிற்று. அந்நிய நாட்டவரான ஷா மன்னனின் மனைவி, மன்னனையும் ஏனைய குடும்பத்தவரையும் அழைத்துக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறினார். இதனால் ஈரான் நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கலாயினர். அன்று வரை தன்னையும் தன் அரச பதவியையும் காப்பாற்றுவார்களென்று தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து வந்தவர்களே மன்னரைக் கவிழ்க்கச் சதி செய்துள்ளனர்.



இதற்கிடையில் மன்னர் ஷா உடல் நலமிழந்தார். அமெரிக்காவில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் உடலும் மனமும் தளர்ந்த நிலையில், ஈரானை விட்டு வெளியேறிய மூன்றாவது ஆண்டில் மன்னர் ஷா உயிரிழந்தார்.

ஆயதுல்லா கொமெய்னி தன்னுடைய இலட்சியம் நிறைவேறிய மகிழ்ச்சியுடன் ஈரான் நாட்டுக்கு வந்து சேர்ந்தார். அந் நாட்டு மக்கள் அவரை வரவேற்று ஆட்சிப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தனர்.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நடைபெறுவதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே நொஸ்ரடாமஸ் தனது இரு தொகுப்புக்களில் மொத்தம் எட்டு வரி கொண்ட பாடல்களில் துல்லியமாகத் தெரிவித்துள்ளார்.

அப்பாடல்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அடுத்துத் தரலாம் என எண்ணுகிறேன்.

(பிரமிப்புகள் தொடரும்)

# காதிலை பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

இந்தமுறை என்னை டிஸ்டேப் பண்ணாதேங்கோ. பிளீஸ். நான் கடிதமொண்டு அவசரமா எழுத வேணும்.

யாருக்கெண்டு கேப்பியள். இதென்ன கேள்வி? கடிதம் எண்டாலே அது தனிப்பட்ட விஷயமெண்ட சுரணை உங்களுக்கு இல்லாமல் போயிட்டுது. எங்கட அரசியல்வாதிகள் தங்கட கடிதங்களையெல்லாம் பேப்பர்களில வெளியிட்டுப் பப்ளிசிட்டி தேடித் தேடி நீங்களும் ஊராற்ற கடிதமெல்லாத்தையும் ஓப்பினாப் படிக்கிறதுக்கே நிக்கிறியள். இன்னும் சிலபேர் தாங்கள் அமெரிக்க ஜனாதிபதிக்குக்கூட கடிதம் எழுதினதா பேப்பரில போடுவினம். அவை அந்தக் கடிதத்த எழுதிப்போட்டு நேரா பத்திரிகை அலுவலகங்களுக்குத்தான் போஸ்ட் பண்ணுறவையே தவிர அமெரிக்க ஜனாதிபதியின்ர அட்ரஸ்கூடத் தெரியாதவையா இருப்பினம்.

இப்பிடித்தான் எனக்கு நல்ல ஞாபகம், எங்கட மண்ணெண்ணையார்-யார், அமைச்சர் மகேஸ்வரனெண்டவர் ஜெயலலிதாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறதா பேப்பருக்கு நியூஸ் குடுத்திட்டு இருந்திட்டார். ஆனால் அவர் எதிர்பாக்கேல்லை, இப்பிடியொரு கடிதமும் தனக்கு வரேல்லையெண்டு ஜெயலலிதாவிட்டயிருந்து மறுப்பு வந்து தன்ர குட்டு அம்பலமேறுமெண்டு.

இதெல்லாம் எதுக்குச் சொல்லுறனெண்டால், என்ர இந்தக் கடிதத்தை நானெண்டால் எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பப் போறதில்லை. அதால, ஏதேனும் ஒரு பத்திரிகையில இந்தக் கடிதத்தைக் காண நேர்ந்தால் அது என்ர பொறுப்பில்லை. தயவு செய்து மற்றவற்ர கடிதத்தைப் படிக்கிற பழக்கத்தை மாத்திக் கொண்டு, என்னைப் போன்ற கனவான்களின்ர பிறைவசியை மதிச்சு நடவுங்கோ எண்டு கேட்டுக்கொண்டு நான் கடிதம் எழுத வெளிக்கிடுறன். இனி உங்களுக்கு இங்க அலுவலில்லை. பிளீஸ் கோ அவுட்.

*அன்புள்ள மச்சான் கீரி.*

(கள்ளமாய்க் கடிதம் படிக்கிறவை கவனிக்கவும். கிருபன் எண்டதுதான் ஆளின்ர பெயர். கீரி எண்டு நான் பட்டம் வைச்சாப் போல நாங்களொண்டும் பாம்பும் கீரியும் போல இல்லை.)

எப்பிடி மச்சான் பொழுது போகுது? நீ உந்தக் கண்டறியாத வெளிநாட்டு வெப்புகளெல்லாம் படிச்சு நல்லா வெந்து போட்டாய் போலக் கிடக்குது. இங்கத்தை நடப்புகளை எனக்கே நடுச்சாமத்தில நித்திரை குழப்பி போனெடுத்துச் சொல்லுற அளவுக்கு முன்னேறிட்டாய் போல.

ஒரு அட்வைஸ் சொல்லுறன் கேள். பொழுது போகாட்டால், நாலு கெசெட் பீஸை எடுத்து டெக்குக்குள்ள தள்ளிட்டு செற்றியில படுத்துக் கிடந்து படத்தைப் பார். அத விட்டிட்டு ஏன் முதுகொடியக் கொம்பியூட்டருக்கு முன்னால குந்திக் கொண்டு உந்த வேலையில்லாதவங்கள் மூளை பேதலிச்சுக் கிறுக்கிற வெப்புகளப் படிச்சு நீயும் கிறுக்கனாகி என்னைப் போலக் கொஞ்சம் ஜொலியா யிருக்கிற வங்களின்ர மூடையும் கெடுக்கிறாய்.

நீ ஏதோ, தேனீயோ வண்டோவெண்டு ஒரு டொட் கொம் விலாசத்தைப் படிச்சுப் பாக்கச் சொன்னது ஞாபகம். சொல்லிட்டாயெண்டு நானும் மடையன் போல கொம்பியூட்டர் படிச்ச பக்கத்துவீட்டுப் பொடியனைக் கொண்டு திறந்து பாத்தன். முழுக்க முழுக்க அபச்சாரமாக் கிடந்துது. எங்கட பேப்பர்களில நாளாந்தம் படிச்சுப் புளகாங்கிக்கிற சாகசச் சங்கதிகளையெல்லாம் போட்டுக் கிழிகிழியெண்டு கிழிக்கிறாங்கள்.

உவங்கள் உந்தத் தமிழை எங்கயிருந்து படிச்சவங்களோ தெரியாது. நானெண்டால் எங்கட சினிமாப் பாட்டுகளில தான் இண்டைக்கும் தமிழின்ர பெருமை வாழ்ந்துகொண்டிருக்கெண்டு நெச்சுக்கொண்டிருக்கிறன். சத்தியமா, வைரமுத்து உந்த ஊர்வசிப் பாட்டில சொல்லித்தான் தமிழில் வார்த்தைகள் நாலுலட்சமெண்ட கணக்கே எனக்குத் தெரியும்.

இப்ப உவங்கள் பாவிக்கிற வார்த்தைகள் உந்த நாலுலட்சத்துக்குள்ள அடங்கிறதாத் தெரியேல்லை. உது தமிழ் வார்த்தைகளே இல்லையெண்டு எங்கட தேசியத் தலைவரிட்டச் சொல்லி பாண்ட் பண்ணுவிக்க வேணுமெண்டுதான் எனக்கு உடன பட்டுது. அண்டையோட அந்த வெப்பைப் பாக்கிறத அடியோட விட்டுட்டன். உதுகளப் படிச்சிட்டுப் பிறகு நித்திரை வராமல் அவதிப்படுவானேன்?

ஆனால் எனக்கு உந்த வெப்பைத் திறந்து தந்த பக்கத்துவீட்டுப் பொடி இப்ப உதை அடிக்கடி பாக்கிறானாம். தனக்கு உதைப் படிக்காட்டால்தான் நித்திரை வருதில்லையாம். பாத்தியே, எந்தளவு கெடுதியான காரியம் பண்ணியிருக்கிறாயெண்டு.

மச்சான், இந்தக் கடிதத்தை யாருக்கும் காட்டமாட்டாயெண்டால், உன்னட்டை எங்கட தமிழ் எம்.பி ஒருவற்ர ஊழல் பற்றி ஒரு இரகசியமான விசயம் சொல்லுறன். உந்த வெப்காறருக்குச் சொல்லி ஆளைக் கிழிப்பிக்கிறியே? என்னைக் காட்டிக் குடுக்காட்டால் சரி.

நல்லது மச்சான். அருமையான மலையாளப் படங்களெல்லாம் தமிழில வந்து கொழும்பில ஓடுது. எங்க அதுகளப் பற்றி எழுதவிட்டாய். எல்லாம் உந்த வெப்போட போச்சுது. சரி. அடுத்த கடிதத்தில பாப்பம்.

*இப்படிக்கு உனது நண்பன்*
*காதிலை பூ. கந்தசாமி.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

03.08.2003 தொடங்கி 09.08.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**


### கிரக நிலை

**கர்க்கடகம்**- சூரியன், வெள்ளி, **சிங்கம்**- வியாழன், புதன், **விருட்சிகம்** - கேது, **கும்பம்** - செவ்வாய், **இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி,

சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் மந்தம், செலவு மிகுதி, திடீர்ப் பிரயாணம், உறவினரால் தொல்லை, பெரியோர் உதவி, உத்தியோக முயற்சி, கௌரவம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05



**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் மேன்மை, காரியானுகூலம், பொருள் வரவு, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04



**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, இனசன நன்மை, பணவரவு, செலவு மிகுதி, உயர்ந்த வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மனக் கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, மனக்குறை நீங்கும், உத்தியோக முயற்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மந்தம், பிரயாசை மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம், பணவரவு தடை, வீண் செலவு, உறவினர் உதவி, பயனற்ற செயல், உத்தியோக முயற்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 07



**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் மந்தம், பணவரவு குன்றும், பெரியோர் பகை, மாணவர் கல்வி குழப்பம், வீண் கவலை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02



**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் சிக்கல், மனக்குறை நீங்கும், பணவரவு மந்தம், திடீர்ப் பிரயாணம், அன்னியர் நட்பு, அதிகார விருத்தி, உத்தியோக முயற்சி, பெரியோர் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03



**விருட்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, கௌரவம், உத்தியோக மேன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, ஊக்கம் குறைவு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02



**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிக்கல், வீண் குறை கேட்டல், அன்னியர் சகவாசம், பெரியோர் பகை, கடன்பட்டல், பணவரவு தடை, உத்தியோக முயற்சி, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04



**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) தொழில் கஷ்டம், செலவு மிகுதி,உறவினரால் தொல்லை, பயனற்ற செயல், வீண் துயர், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06




**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோக மேன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மாற்றம், மனக் கிலேசம், செலவு மிகுதி, உறவினரால் கவலை, வெளியிடப் பிரயாணம், வீண் பிரயாசம், உத்தியோக முன்னேற்றம், பெரியோர் உதவி, மாணவர் கல்வி மந்தம், பிரயாசை மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



பெளுசா என்ற இந்த 14 வயது நிரம்பிய ↑ பெண் கரடியின் இயல்பான நிறம் வெள்ளை. ஆர்ஜென்டினாவின் மொன்டேஸா மிருகக் காட்சிச்சாலையில் இருக்கும் இதன் தோளில் ஏற்பட்ட ஒரு வகைத் தொற்றுக்குச் சிகிச்சை அளித்தபோது இக் கரடியின் உருவம் முழுவதும் இப்படி ஊதா நிறத்துக்கு மாறிப்போனது. இந்த வித்தியாசம் எப்படி நடந்தது எனத் தீவிரமாக ஆராயும் அந்த நாட்டு மிருக வைத்தியர்கள், ஒரு மாத காலத்துக்குள் பெளுசா தனது வழமையான நிறத்திற்கு வந்துவிடும் என்று கூறுகிறார்கள்.


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

↓ மைக்கல் ஜெக்சனின் லீலைகளுக்கும் சர்ச்சைகளுக்கும் மேற்குலக இசைத்துறையில் பஞ்சமே யில்லை. இவர் பல சிறுவர்களுடன் 'வாழ்வதாக' இசகுபிசகான சர்ச்சை சற்று ஓய்ந்துகொண்டு வரும் நிலையில், இசைத்தட்டுகளைக் காப்பியடித்து இணையத்தளங்கள் பாவிப்பது குறித்த புதிய சட்ட மூலம் ஒன்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசியல் சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார் ஜாக்சன்.

இது ஒரு புறமிருக்க இவர் சிறுவர்களுடன் என்ன செய்கிறார் என்று விலாவாரியாக விபரித்து கட்டுரை எழுதியிருக்கிறது ஒரு அமெரிக்க குறும்புப் பத்திரிகை. கோபத்தில் இருக்கிறார் ஜாக்சன்.

"இந்தப் பத்திரிகையாளர்களுக்கு விவஸ்தையே இல்லை" என்று திட்டித் தீர்த்திருக்கிறார். என்ன இருந்தாலும் ஜாக்சனின் மறுபக்கம் குறிப்பாக செக்ஸ் விஷயங்களில் இவரது லீலைகளில் ஏகப்பட்ட மர்மம் இருப்பதாக அவருக்கு நெருக்கமானவர்களே கூறுகிறார்கள்.

எப்படி இருந்தாலும் ஜெக்சன் பொப் ஸ்டார் என்ற வகையில் தனது இமேஜை தொடர்ந்தும் பாதுகாத்து வருகிறார் என்பது பாராட்டுக்குரிய விஷயம். இங்கே இவர் அரசியல்வாதி போல் கையை உயர்த்திப் பேசுவது கடந்த வாரம் நடைபெற்ற Bet விருது வழங்கும் நிகழ்வில். இதன்போதுதான் குறிப்பிட்ட சட்டமூலத்துக்கு எதிராக ஜெக்சன் கருத்து வெளியிட்டார்.





→ ஹொலிவூட் நடிகை ஜெனிபர் கூலிஜ் லண்டனில் நடைபெற்ற திரைப்பட விழா ஒன்றிற்காக வருகை தந்தபோது பிடிக்கப்பட்ட படம். இவர் கடந்த வாரம் தனது வீட்டின் மாடிப்படிகளிலிருந்து தவறி விழுந்ததால் காலில் காயம் ஏற்பட்டது. இப்போது குணமடைந்துவிட்டீர்களா என்று கேட்டு இரசிகர்கள் காலைத் தொட்டுப் பார்க்க முண்டியடித்ததைப் புன்னகையோடு நிருபர்களிடம் சொன்னார் ஜெனிபர். மார்புக்குக் குறுக்காகக் கயிறு கட்டியிருக்கிறார் பாருங்கள். இதுதான் இப்போது புதிய ஹொலிவூட் பெஷன். கொடுத்து வைத்த கயிறு.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது Paris இல் வசிக்கும் கமலேஸ்வரன்-மணிவிழி தம்பதிகளின் செல்வப் புதல்வி லக்ஷிதா 01.08.2003 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.


லக்ஷிதாவை இலங்கை அப்பம்மா, அம்மம்மா, அம்பிகா பெரியப்பா குடும்பத்தினர், சந்திரன் மாமா, துரை மாமா, செந்தன் மாமா, கந்தசாமி மாமா குடும்பத்தினர், லண்டன் சதீஸ் மாமா குடும்பம், கோனேஸ் பெரியப்பா குடும்பம், மச்சான்மார், பிரான்ஸ் மோகன் பெரியப்பா குடும்பம், நீதிச் சித்தப்பா குடும்பம், சுவிஸ் கதிரண்ணா குடும்பம் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருவருள் கொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் : அம்மம்மா, திருகோணமலை.



செல்வி லக்ஷிதா கமலேஸ்வரன்
01.08.2003

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



கௌசிக் தியாகராஜா
25.07.2003

கிழக்கு மாகாணம் பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராஜா, வட மாகாணம் நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சத்தியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் கௌசிக் தியாகராஜா தனது முதலாவது பிறந்த நாளை 25.07.2003 அன்று ஜேர்மனியில் லிவொகுசன் நகரிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அன்ரி (மித்ரியா), மாமாமார், மாமிமார், இலங்கையில் இருக்கும் பெரியமாமி, சின்னமாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார் மலோனி, தனு மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலை கற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :
மாமி, கோகிலகந்தரி,
பாண்டிருப்பு-02.



செல்வி சிவகணேசன் அக்ஷயா

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

04.08.2003

Australia Melbourne இல் வசிக்கும் சிவகணேசன் - சுதாசினி தம்பதிகளின் செல்வப் புதல்வி அக்ஷயா தனது முதலாவது பிறந்த தினத்தை 04.08.2003 திங்கட்கிழமை வாழைச்சேனையில் உள்ள தனது அம்மம்மாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அக்ஷயாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வாழைச்சேனை ஸ்ரீ கைலாய பிள்ளையார் அருளால் பலகலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் மருதானையில் உள்ள பி.டி.சி. சகீர் அச்சகத்தில் ஜூ ஆக. 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.